
July -2018 | Volume-4 | issue-46

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜூலை - 2018 பருவம் - 4 புனல் - 46 தனிச்சுற்று நன்கொடை ரூ 25

for private circulation only



## கடவுள் வாழ்த்து வேண்டாம்
# காமராசர்
## வாழ்த்தே தேவை

“ஓம் காளி”
“ஜெய் காளி”
என்று (சத்தம்) கோசம்
விடுவது எல்லாம் எனக்கு ஒரு
விதமான உற்சாகமாக இருக்கும்.
இதை எல்லாம்
விளையாட்டுத்தனமாக
எடுத்துக் கொண்டேன்.
ஒவ்வொரு கட்சி
கொள்கைப் பற்றியும்
தெரியாத வயதில்
இந்த மாதிரி
நிகழ்வுகள் எல்லாம்
செய்துக் கொண்டு இருந்தேன்....

# காதல் திட்டம்



தோழர் நிர்மல். இவரது பெரியாரியல் பயணம் கடவுள் மறுப்பில் தான் தொடங்கியது. இன்று கடவுள் மறுப்புக்குக் காரணமான ஜாதி, மதம், பண்பாடுகளிலிருந்து வெளியேறுவதன் தொடக்கமாக - ஜாதி மறுப்புத் திருமண வாழ்வைத் தேர்ந்தெடுத்துள்ளார். தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாயங் களின் இணைவை வலியுறுத்தும் இவரது திருமணம், வெறும் காதல் திருமணம் மட்டுமல்ல; ஜாதி ஒழிப்புக்காகத் திட்டமிடப்பட்ட காதல்மணம். திராவிடர் கழகத் தலைவர் வீரமணி அவர்கள் இதைப்போல ஏராளமான தோழர்களுக்குத் தானே ஏற்பாடு செய்து ஜாதி மறுப்பு மணங்களை நடத்தி யுள்ளார். அவரைப் போலவே திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களும் இந்துமதி - நிர்மல் திருமணத்தைத் தானே முன்னின்று பெற்றோர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி, இந்த ஜாதி கடந்த காதலர்களின் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி வைத்துள்ளார். கொள்கைகளைப் பேசுவதோடு நிற்காமல், தானும் பின்பற்றி, தனது தோழர் களையும் பின்பற்றச் செய்யும் பெரியாரின் - திராவிடர் இயக்கத் தலைமைகளின் தனித்தன்மை இதுதான்.

**தோழர் இந்துமதி**

என்னுடைய பெயர் இந்துமதி. நான் கோயம்புத்தூர் பகுதியில் உள்ள உக்கடத்தில் வசிக்கிறேன். அப்பா வீராசாமி, அம்மா சாந்தி. நான் படித்தது இசை. இப்போது ஒரு பள்ளியில் இசை ஆசிரியராக வேலை செய்து கொண்டு இருக்கிறேன்.

**நிர்மலுடைய அறிமுகம் எப்போது கிடைத்தது?**

என்னுடைய அக்கா காதல் திருமணம் செய்து கொண்டதால் எனக்கு, சீக்கிரம் திருமணம் செய்ய வேண்டும் என்று மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்துவிட்டனர். அப்போது தான் என்னுடைய மாமா கிருஷ்ணன் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இருந்தார். அவர் நீ வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையைத் திருமணம் செய்தால் சுதந்திரமாக இருக்க முடியாது. என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த ஒருத்தரைத் திருமணம் செய்து கொண்டால் உன்னுடைய வாழ்க்கை நன்றாக இருக்கும் என்றார். அடிமைத்தனம் இல்லாமல் சுதந்திரமாக இருக்கலாம் என்றார். முதன்முதலாக என்னுடைய மாமா ஒரு நிகழ்ச்சிக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார். அப்போது என்னுடைய மாமா, நிர்மலை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

**முதலில் உங்களுடைய காதலை வெளிப்படுத்தியது யார்?**

நிர்மலைப் பற்றி எங்க மாமா நிறைய சொல்லி இருக்கிறார். கிணத்துக்கடவு பகுதியில் இருக்கிறார். மிகவும் சாதிவெறி பிடித்த ஊர். அந்த ஊரில் இருந்து கொண்டு சாதி ஒழிப்புக்காக மிகவும் பாடுபடுகிற தோழர். நேர்மையான தோழர் என்று சொன்னார். இப்படி சொல்லும் போது எனக்கு அவர் மேல் ஒரு ஈர்ப்பு ஏற்படுகிறது. அதன் பிறகு என்னுடைய மாமா வீட்டிற்கு நிர்மல் வரும்போது அவருடைய போன் நம்பரை கேட்டு வாங்கிக் கொண்டேன். நான் தான் முதலில் சொன்னேன். காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை. உங்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன்.

**உங்களுடைய பெற்றோர் காதலை எப்படி எடுத்துக் கொண்டார்கள்?**

நான் வீட்டில் முதலில் அம்மாவிடம் தான் சொன்னேன். சொல்லும் போது பயந்தார்கள். "நம்மளுடைய சாதியில் திருமணம் செய்தால் ஏதாவது பிரச்சனை என்றால் தட்டிக் கேட்கலாம். வேற சாதி என்கிற பொழுது நம்மளையே அவர்கள் முதலில் ஏற்க மாட்டார்கள். அப்படி இருக்கும் போது உன்னை எப்படி ஒரு மருமகளாக ஏற்பார்கள்" என்று என்னுடைய அப்பா கேட்டார். "இல்லை அப்பா அவர் நம்மளுடைய சாதியில் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்" என்று சொன்னேன். எங்களுடைய வீட்டிற்கு நிர்மலை வரச் சொன்னேன். முதலில் என்னுடைய அம்மாவிடம் பேசினார். அதன்பிறகு என்னுடைய அப்பாவிடம் பேசினார். எங்களுடைய வீட்டிலும் ஏற்றுக்கொண்டார்கள்.

சரி தி.க கட்சி என்கிறார்கள், உங்களுடைய திருமணம் எப்படி நடக்கும் ? மாப்பிள்ளை வீட்டில் இருந்து யாரும் வந்து நம்முடைய வீட்டில் பேசுவார்களா ? என்றார்கள். அதற்கு நான் அவர்கள் யாரும் பேச வரமாட்டார்கள். அவருடைய வீட்டில் இருந்து எங்களுடைய திருமணத்திற்கு யாரும் வரமாட்டார்கள். அவர் சார்பில் கொளத்தூர் மணி அண்ணன் வந்து நம்முடைய வீட்டில் பேசுவார் என்று சொன்னேன். மணி அண்ணனும் வந்து பேசினார். அப்போது அண்ணனிடம் என்னுடைய அப்பா "இவர்கள் தாலியும் கட்டாமல் எந்த ஒரு சடங்கும் இல்லாமல் திருமணம் செய்வோம் என்கிறார்கள், இது எப்படி நடை முறைக்கு ஒத்துவரும்?" என்றார்.

நாங்கள் 'சாதி இல்லை' என்கிற ஒரு அமைப்பில் இருந்து கொண்டு கண்டிப்பாக தாலி எல்லாம் கட்டாமல்தான் திருமணம் செய்வோம். இவர்களது திருமணத்தை Register செய்து விடலாம். அந்த மாதிரியான திருமணம்தான் சட்ட ரீதியாகச் சரியானதாக இருக்கும் என்றார் தலைவர். அதன் பிறகு எனக்கும் என்னுடைய அப்பாவுக்கும் நிறைய வாக்குவாதம் ஏற்படுகிறது. திருமண வரவேற்பு நிகழ்ச்சியாவது நடத்தவேண்டும் என்று சொன்னார். அதை நான் நிர்மலிடம் சொல்லும்போது அது வீண்செலவு அது தேவையில்லாத ஒன்று என்று சொன்னார். அதனால் நான் வரவேற்பு நிகழ்ச்சியும் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

**உங்களுடைய திருமணம் எப்போது நடந்தது?**

தி.வி.க தலைவர் அண்ணன் கொளத்தூர் மணி அவர்களின் தலைமையில் 17.05.2015 இல் நிர்மல் ஆசைப்பட்ட மாதிரி கிணத்துக்கடவு பகுதியில் பொதுக்கூட்டத்தில் 'தாலி, சாதி, சடங்கு' மறுத்து நடந்தது.

**உங்களுடைய திருமணத்தை உங்கள் உறவினர்கள் எப்படி எடுத்துக் கொண்டார்கள்?**

என்னுடைய திருமணத்திற்கு என்னுடைய உறவினர்களுக்குப் பத்திரிக்கை கொடுத்தோம். ஆனால், யாரும் திருமணத்திற்கு வரவில்லை. என்னுடைய சித்தி மட்டும் என்னிடம் வந்து ஒரு மூன்று நாட்களுக்கு மட்டும் தாலி கட்டிக்கோ அதுக்கு பிறகு நீயே அதை கழட்டி வீசிரு என்று சொன்னார்கள். 3 நாள் கழித்து கழட்டி வீசிருன்னு நீங்களே சொல்லும்போது தாலி வேண்டாத ஒண்ணு. அதை எதுக்கு நான் கட்டணும். நாங்கள் இருவரும் ஒப்பந்தம் போட்டுத் திருமணம் செய்கிறோம். இதில் தாலி எதற்கு ? என்று நான் மறுத்துவிட்டேன்.

**பெரியாரியல் கொள்கையை ஏற்க காரணம் என்ன?**

பெரியாரியல் கொள்கையை ஏற்க முதல் காரணம் என்னுடைய மாமா தான். அவருடைய வழி காட்டுதலில் பேரில்தான் நான் பெரியாரியல் கொள்கையை ஏற்றேன். பெண்விடுதலை, சாதி ஒழிப்பு இவைகள் எனக்கு பிடிக்கும். இதில் முக்கியமாக சாதி ஒழிப்பு எனக்கு மிகவும் பிடித்தமானது. பெரியாரியலை ஏற்றுக்கொண்டு வாழ்கிற

ஒருவரைத் திருமணம் செய்தால் என்னுடைய வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். அதற்குப் பெரியாரியல் வாழ்வுதான் சரியானதாக இருக்கும். என்று நினைத்தேன். நான் நகரத்திலேயே வளர்ந்ததால் எனக்கு சாதிக்கொடுமைகளைப் பற்றி தெரியாது. என்னுடைய மாமா நிர்மலை அறிமுகப் படுத்தும்போது அவருடைய ஊரையும், அங்குள்ள சாதிக் கொடுமைகளையும்பற்றிச் சொன்னார். அப்போதுதான் எனக்குத் தெரிந்து இப்படியும் மக்கள் இருக்கிறார்கள் என்று நினைத்தேன். எந்த சாதியை வீட்டிற்கு வரக்கூடாது என்று நினைத் தார்களோ அந்த வீட்டில் என்னை அழைத்துக் கொண்டு போனார். அது அவருடைய வெற்றி.

**திருமணத்திற்குப் பிறகு உங்களுடைய மாமியார் வீட்டில் உங்களை ஏற்றுக்கொண்டார்களா?**

எங்களுடைய திருமணத்திற்குப் பிறகு நான் ஆறு மாதம் மாமியார் வீட்டிற்கு போகவில்லை. ஆனால் போனில் மட்டும் என்னிடம் பேசுவார்கள். மாமியார் என்னைப் பார்ப்பதற்கு இங்கே வருவாங்க. நிர்மலுடைய அண்ணனும் வருவார்கள். ஆனால் நான் போகவில்லை.

எங்களுடைய வீட்டிலும் என்னை மாமியார் வீட்டிற்குப் போக அனுமதிக்கவில்லை. இப்போ தைக்கி நீ அங்கே போக வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். “அங்கே போனால் உன்னை விஷம் வைத்தோ அல்லது வெட்டிக்கொன்றுவிட்டாலோ என்ன செய்வது?” என்று என்னை அங்கே அனுப்பப் பயந்தார்கள். என்னுடைய மாமியாரும் என்னை வீட்டிற்கு வா என்று கூப்பிடவும் இல்லை. அதனால் நான் போகாமல் இருந்தேன்.

நிர்மலுடைய அண்ணனுக்கு நடந்த திருமணத்தில்தான் முதன் முறையாக நிர்மலின் வீட்டுக்குப் போனேன். நான் நிர்மலின் வீட்டிற்குப் போவதற்கு முன்பே நிர்மலின் அம்மா என்னிடம் நன்றாகப் பேசுவார்கள். நான் வீட்டிற்குப் போனதற்குப் பிறகு நான் சமைத்துக் கொடுத்தாலும் சாப்பிடுவார்கள், பாராட்டுவார்கள். என்னுடைய மனது நோகும்படி எந்த ஒரு வார்த்தைகளையும் சொல்ல மாட்டார்கள். என்னை ஒரு மகளைப் போல நடத்தினார்கள். என்னிடம் மிகவும் பாசமாக இருப்பார்கள். நிர்மல் என்னை ஏதாவது சொன்னாலும் கூட என்னுடைய மாமியார் மதியை எதுவும் சொல்லாத திட்டாதன்னு சொல்வாங்க. நிர்மல் ஏதாவது சொன்னால் என்னிடம் சொல்லு மதி என்று சொல்வார்கள்.

**பெரியாரியல் கொள்கைகளைப் பரப்புவதற்கு உங்களுடைய பங்களிப்பு என்ன?**

என்னுடைய வேலையின் காரணமாக சரியாக இயக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் நிர்மல் முழுநேரப் பணி யாளராக இருப்பார் என்று திண்டுக்கல் காதலர் தின நிகழ்ச்சியில் சொன்னேன். அதே மாதிரிதான் இப்போது நிர்மல் முழுநேரப் பணியாளராக இருக்கிறார்.

## இருவரிடமும்

**உங்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றி சொல்லுங்கள்?**

நாங்கள் இருவரும் எங்களுடைய வீட்டையும், நிர்மலின் வீட்டையும் சாராமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். தனியாக, சுயமாக சம்பாதித்து வாழ்கிறோம். மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். பொருளாதாரச் சிக்கல் இல்லாமல் இருக்கிறோம். திருமணத்துக்கு முன்பே எனக்கு வேலை கிடைத்ததால் எந்தப் பிரச்சனையும் இல்லை. வேலை எனக்கு நிரந்தரமாக கிடைத்ததற்குப் பிறகு திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அப்போது தான் குடும்பத்தில் பொருளாதாரச் சிக்கல் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தேன்.

ஏன்னா பெரியாரியல் வாழ்வியலில் இருந்து கொண்டு, கடவுள் இல்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். நாம் ஒரு வறுமையில் இருந்தாலும் கூட, பார்க்கிறவர்களுக்கு இது கடவுள் கொடுத்த தண்டனை என்று சொல்வார்கள். அப்படி யாரும் சொல்லிவிடக்கூடாது என்று நினைத்தோம். நாங்கள் கஷ்டப்பட்டு முன்னேறனும் என்பதை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு சந்தோஷமாக இருக்கிறோம். என்னுடைய வாழ்க்கையில் வீட்டு வேலைகளில் அனைத்திலும் நிர்மல் சரிசமமாக பங்கெடுத்துக்கொள்கிறார். இதனால் நான் வேலைக்குச் செல்லுவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

### தோழர் நிர்மல்

என்னுடைய பெயர் நிர்மல். என்னுடைய அப்பா பெயர் வேலுச்சாமி, அம்மா நாகரத்தினம், அண்ணன் மாணிக்கவாசகர். என்னுடைய ஊர் கோவை மாவட்டம் கிணத்துக்கடவு அருகில் உள்ள வடபுதூர். என்னுடைய தொழில் ஃபோட்டோ கிராபர். அது போக மீதி நேரங்களில் முழு நேரமும் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இயக்கப் பணி களைச் செய்கிறேன்.

**நீங்கள் பெரியார் இயக்கத்தில் எப்படி அறிமுகம் ஆனீர்கள்?**

என்னுடைய 20 வயதில் சுந்தராபுரம் பகுதியில் சிட்கோவிற்கு வேலைக்கு சென்றேன். அந்தப் பகுதிக்குப் போகும்போது பெரியார் இயக்க நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுண்டு. எங்க ஊரில் தி.மு.க வுடைய தீவிரப் பற்றுக் கொண்ட ஒருவர் இருந்தார். உங்கா ரங்கசாமி என்று ஒருவர் இருந்தார். அவருடன் அதிக நேரம் பெரியாரைப் பற்றியும், தி.மு.க. வைப் பற்றியும் கலந்துரையாடினேன். எங்க அப்பாவும் தி.மு.க. காரர் என்பதால் அவரைச் சந்திக்க ரங்கசாமி அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருவார். அவரின் பெரியார் நாத்திகக் கொள்கை எனக்கு மிகவும் பிடிக்கும்.

நான் பெரியார் இயக்கத்துக்கு வருவதற்கு இருவரும் ஒரு காரணம். எங்க ஊருல கடவுள் நம்பிக்கையைப் பரப்பும் விதமாக சாமியார்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் செய்யும்

காரியங்களை நான் பார்த்து விமர்சிப்பேன். அவர்கள் செய்யும் மூடநம்பிக்கை எல்லாம் இளைஞர்களிடம் எடுத்து சொல்லுவேன். அங்கே எல்லாரும் என்னைப் பார்த்து பெரியார் மாதிரி பேசிட்டு இருக்கிற என்பார்கள். அப்ப இருந்து பெரியாரைப் பற்றி அதிகமாத் தெரிஞ்சுக்கோணும் என்று எண்ணி, எங்க அப்பாவிடம் கேட்டேன். அதற்கு அவர் சொல்லுவார் நமக்குக் கலைஞர் பிடிக்குமல்ல. அந்தக் கலைஞரையே முதலமைச்சர் ஆக்கியது பெரியாரும், அவருடைய கொள்கையும் தான். பெரியார் ரொம்ப நல்லவர் பெரிய தலைவர் என்று அப்பா சொன்னார். அன்று முதல் நாத்திக கொள்கையை நான் எங்கள் ஊரில் அதிகமாக பேசப் ஆரம்பித்தேன்.

இதற்கு முன்பு நான் ரஜினி ரசிகர் நற்பணி மன்றம் மற்றும் ஆர்.எஸ்.எஸ்.சாஹா பயிற்சி வகுப்பு களில் கலந்து கொண்டு அவர்கள் சொல்வதை விட நான் ஒரு படி அதிகமாக செயல்படுவேன். ஆனால் சாமியார் செய்யும் தவறுகளை எல்லாம் சுட்டிக் காட்டுவேன். அதனால் ஊர்மக்கள், ஊர்த் தலைவர்கள் வெறுப்பைக் காட்டினார்கள்.

**ஆர்.எஸ்.எஸ்.ஸில் இருந்தேன் என்று சொல்கிறீர்கள். எந்த வயதில் இருந்தீர்கள்? அதை விட்டு ஏன் வெளியே வந்தீர்கள் அதைப்பற்றிச் சொல்லுங்க?**

எனக்கு 13 வயது இருக்கும். எங்கள் ஊர்ப் பகுதியில் ரவி ஜீ என்று ஒருவர் இருந்தார். ஆர்.எஸ்.எஸ்.காரர் அவர் தான் உடற்பயிற்சி (சாஹா)சொல்லித்தருவார்.என்னுடன் சிறுவர்களை யெல்லாம் அழைத்துச் சென்று பொது இடத்தில் பயிற்சி கொடுப்பார். அப்பொழுது நான் ரஜினி ரசிகனாக இருக்கிறேன். ரஜினி எனக்கு மிகவும் பிடிக்கும் என்றேன். நமது ஆர்.எஸ்.எஸ். செயல் பாடுகள் ரஜினிக்கும் பிடிக்கும் என்று ரவி ஜீ சொல்லுவார் .

எனக்குக் கூட்டமாக இருப்பது ரொம்பப் பிடிக்கும். "ஓம் காளி" "ஜெய் காளி" என்று (சத்தம்) கோசம் விடுவது எல்லாம் எனக்கு ஒரு விதமான உற்சாகமாக இருக்கும். இதை எல்லாம் விளை யாட்டுத்தனமாக எடுத்து கொண்டேன். ஒவ்வொரு கட்சிக் கொள்கை பற்றியும் தெரியாத வயதில் இந்த மாதிரி நிகழ்வுகள் எல்லாம் செய்து கொண்டு இருந்தேன். ஆனால் எனக்குப் பெரியார் இயக்கத்தைப் பற்றி முழுமையாகத் தெரிய வந்தது என்னுடைய 20 வயதில் தான். சுந்தராபுரம் செந்தில்நாதன் அவர்களின் தொடர்பு மூலமாகப் பெரியார் நற்பணி மன்றம் என்ற பெயரில், தெரு முனைக் கூட்டங்களை நடத்தினேன். நான் நடத்திய முதல் கூட்டம் காமராசர் பிறந்தநாள் கூட்டம்.

**நீங்கள் பெரியார் இயக்கத்திற்குள் வரும்போது நாத்திகம், சாதி ஒழிப்பு பற்றி எல்லாம் தெரிந்து வந்தீர்களா?**

நான் முதலில் நாத்திகக் கொள்கை பற்றிப் பேசித்தான் இயக்கத்திற்குள் வந்தேன். சாதி ஒழிப்புப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நான் ஆரம்பத்தில் சாதி ஒழிப்பை விரும்பாதவன். சில பயிற்சி வகுப்புகளிலும் பெரியாரியல் புத்தகங் களைப் படிக்க ஆரம்பித்த பிறகுதான் பெரியாருடைய முதன்மையான பணி சாதி ஒழிப்பு தான் என்று உணர்ந்தேன். அன்று முதல் நான் சாதி ஒழிப்பை முதன்மைப் பணியாகச் செய்ய வேண்டும். சாதி ஒழிய வேண்டும் என்று உணர்ந்தேன். அதை எங்கள் வீட்டில் தொடங்க வேண்டும் என்று நினைத்தேன். எங்கள் வீட்டில் வேலை பார்க்க வருபவர்களிடம் சாதி வித்தியாசம் பார்க்க வேண்டாம் என்று பேசுவேன். மிகவும் கீழ்த்தரமான வேலைகளை அவர்களுக்கு சொல்ல வேண்டாம் என்று அந்த வேலைகளையெல்லாம் நானே செய்கிறேன் என்று நானே வாசல் எல்லாம் சுத்தம் செய்தேன்.

அப்போழுது நான் நினைத்தேன் இதை செய்தால் மட்டும் போதாது இந்த சாதியில் யார் கீழானவர்கள் என்று சொல்லப்படுகிறார்களோ, அவர்களின் வீட்டில் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அப்போது தான் பெரியாரின் கொள்கையின் அடிப்படையில் நான் பூர்த்தி செய்ததாக இருக்கும் என்று எண்ணினேன். நான் அப்போது எங்கள் வீட்டில் நடக்கும் அனைத்தையும் கவனித்து வருவேன்.

என்னுடைய அம்மாவிற்கு உடல் நிலை சரி யில்லை என்றால் உறவுக்காரர்கள் பார்க்கிறார் களோ இல்லையோ அங்கு வேலைக்கு வரும் பெண்கள் என்ன ஆச்சுங்க சாமி என்று கேட் பார்கள். எங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து தருவார்கள். அவர்களை எங்கள் வீட்டில் இருப்பவர்கள் தீண்டத்தகாதவர்களாகத்தான் பார்ப் பார்கள். அப்போது எனக்கு மிகவும் சங்கடமாக இருக்கும்.. அப்போது நான் எண்ணினேன். எந்தச் சாதியை விலக்கி வைத்துப் பார்த்தார்களோ அந்தச் சாதிப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணினேன்.

**காதலிக்கும் போது நீங்கள் சந்தித்துக் கொள்ளும் இடங்கள்?**

திண்டுக்கல்லில் 2015- பிப்ரவரி 14-ல் காதலர் தின விழா கொண்டாட்டத்தில் நாங்கள் இருவரும் கலந்து கொண்டோம். எங்கள் இருவரையும் தலைவர் கொளத்தூர் மணி அண்ணன் காதலர் களாக எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினார். அதன் பின்பு நாங்கள் இருவரும் பொள்ளாச்சி, கோவையில் நடக்கும் அனைத்துக் கூட்டங்களுக்கும் மதியை அழைத்துக் கொண்டு போனேன். முழுமை யாகப் பெரியாரியலைப் பற்றித் தெரியத் தயார் படுத்தினேன்.

**உங்களுடைய வீட்டில் உங்களுடைய காதலைச் சொல்லும்போது எந்த மாதிரியான எதிர்ப்பு இருந்தது?**

நம்ம சாதியில் பண்ண வேண்டும் இல்லை யின்னா... கேரளாப் பொண்ணையாவது பண்ணிக்கோ தாழ்த்தப்பட்ட (சக்கிலியர்) பெண் மட்டும் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள்.

நம்மளோட பொழங்கர சாதியைப் பண்ணு என்று சொன்னார்கள். ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்தால் நாங்கள் மூன்று பேரும் இறந்து விடுவோம் என்று என்னுடைய அம்மா சொன்னாங்க. அந்தப் பொண்ணு ஏதாவது மோச மான ஆளு, திருடியிருக்கிறது அந்த மாதிரி ஏதாவது தவறு செய்திருந்தால் சொல்லுங்க. நான் வேனா அந்தப் பொண்ணை வேணாம்ன்னு சொல்லி விடுகிறேன். சாதிதான் காரணம் என்று சொன்னால் நான் அந்தச் சாதியில்தான் கல்யாணம் பண்ணுவேன். அதில் எந்த ஒரு மாற்றமும் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

**பொதுமேடையில் நடந்த திருமண நிகழ்வுகளைப் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் இந்தத் திருமணத்தைப் பொது மேடையில் வைத்து நடத்துவதற்கு முழுக்காரணமே 1957 ஆம் வருடத்தில் நடந்த சட்டஎரிப்புப் போராளி களின் 'உறுதிமொழி' தான். அதனை நினைவு படுத்தும் விதமாக ஆனைமலைத் தோழர் ஏ.கே. ஆறுமுகம் முன்னிலையிலும், கழகத்தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும் தான் நடத்த வேண்டும் என்று உறுதியுடன் இருந்தேன். அதற்கு உதவியாகத் தோழர் பொள்ளாச்சி விஜயராகவனும் என்னுடன் இணைந்து செயல்பட்டார்.

நாங்கள் திருமணம் மே 17 அன்று உறுதி செய்தவுடன் கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் ஏப்ரல் 14 அன்றே அனுமதி கேட்டு கடிதம் கொடுத்தோம். 15 நாட்கள் ஆகியும் எந்த ஒரு தகவலும் இல்லாததால் நாங்கள் காவல் நிலையம் சென்று கேட்டோம். டி.எஸ்.பி. அலுவலகத்திற்குச் சென்று பாருங்கள் என்று கூறிவிட்டார்கள். அங்கே சென்ற போது இரண்டு நாட்களில் உங்கள் காவல் நிலையத்தில் இருந்து உங்களை அழைப்பார்கள் என்று சொல்லி விட்டார்கள். இரண்டு நாட்கள் கழித்து அவர்கள் அழைக்கவில்லை. மீண்டும் நாங்களே சென்றோம்.

“திருமணம் பொதுமேடையில் வைத்து நடத்தக்கூடாது. பொதுமேடை திருமணத்திற்கு நாங்கள் அனுமதி தர மாட்டோம்” என்று கூறினார்கள். நாங்கள் அதை கடிதம் மூலம் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டோம். ஆனால் அவர்கள் எழுதித்தர மறுத்து விட்டார்கள். இது குறித்து கொளத்தூர் மணி அண்ணனிடம் சொன்னோம். அவர் திருமணத்தை நாம் நடத்தி காட்டலாம். உங்களிடம் இருக்கும் திருமண அழைப்பிதழ் மற்றும் அனைத்து விண்ணப்பங்களையும் சென்னையில் உள்ள தோழர் வழக்கறிஞர் திருமூர்த்திக்கு அனுப்பி விடுங்கள் என்றார். நாங்களும் அனுப்பிவிட்டோம்.

பொதுமேடையில் திருமணம் நடத்துவதற்கு காவலர்கள் தடை விதித்ததற்குக் காரணம் என்ன வென்றால் ஏப்ரல் மாதத்தில் நடந்த திராவிடர் கழகம் சார்பில் நடத்திய 'தாலி அகற்றும் விழா' வும் மற்றும் புதிய தலைமுறை தாலி அகற்றுவதைப் பற்றிய செய்தி வந்ததும் புதிய தலைமுறை தாக்கப்பட்டது. அன்றைய பரபரப்புச் செய்தியாக இருந்தது. எங்களுடைய திருமண அழைப்பிதழ் 'தாலி, சாதி, சடங்கு மறுப்புத் திருமணம்' என்று பதிவிட்டிருந்தோம். அதனால் பொதுமேடைத் திருமணத்திற்குக் காவல்துறை மறுத்தது.

ஆனால் எங்களுக்கு வழக்கறிஞர் திருமூர்த்தி அனுமதி பெற்றுத் தந்தார். கடைசி இரண்டு நாட்கள் இருக்கும் போதுதான் அனுமதியே கிடைத்தது. எல்லோரும் கூறினார்கள் அனுமதி கிடைக்கா விட்டால் என்ன செய்வது ? மண்டபத்தில் நடத்தி விட்டு போகலாம் என்றார்கள். ஆனால் நான் பொதுமேடையில் தான் திருமணம் நடத்துவது என்று உறுதியாக இருந்தேன். அனுமதி கிடைக்காத பட்சத்தில் கோவையில் இருக்கும் பெரியார் சிலை முன்பாவது சென்று நாங்கள் இருவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டு இணைந்து வாழ்வோம் என்று கூறினேன். என்னுடைய கொள்கை மிகவும் உயர்ந்த கொள்கை, நான் செய்கிற சாதி மறுப்புத் திருமணத்தை நான் ஏன் மறை முகமாக நடத்த வேண்டும். ஒருபோதும் மண்ட பத்தில் திருமணத்தை நடத்த மாட்டேன் என்று உறுதிபட கூறி விட்டேன்.

எந்த விதமான சடங்குகளும், செலவுமின்றி தோழர் கொளத்தூர் மணி அண்ணன் மற்றும் கழகத் தோழர்கள் முன்னிலையில் 17.05.2015 ஞாயிறு அன்று மாலை 5 மணிக்கு கிணத்துக்கடவு பகுதியில் பொதுக்கூட்ட மேடையில் 'சாதி, தாலி, சடங்கு மறுப்புத் திருமணம்' சிறப்பாக நடைபெற்றது.

**உங்களுடைய திருமணத்திற்கு உங்களுடைய வீட்டில் இருந்தும், இந்துமதியின் வீட்டில் இருந்தும் யாரெல்லாம் கலந்து கொண்டார்கள்?**

இந்துமதியின் வீட்டில் மதியின் அப்பா, அம்மா வந்திருந்தார்கள். எங்கள் வீட்டில் அம்மா வரவில்லை. அவர்கள் மிகவும் கவலையாகப் படுத்துக்கொண்டார்கள். என்னுடைய அண்ணன் வெளியூருக்குச் சென்றுவிட்டார். ஆனாலும் என்னுடைய அப்பா மட்டும் சீக்கிரமாக போய் திருமணத்தை முடித்து விடு. மழைக்காலம் வேற மழையின் காரணமாக திருமணம் நின்று விடப் போகிறது என்று நான் வீட்டை விட்டுக் கிளம்பும் போது சொன்னார். என்னுடைய திருமணம் முடிந்த பிறகு 10 மணிக்கு அப்பாவுக்கு போன் பண்ணி என்னுடைய திருமணம் நல்லபடியாக முடிந்தது என்று சொன்னேன். அதற்கு அப்பா சொன்னார், “ஆமாம் நானும் பார்த்தேன். மிகவும் சிறப்பாக நடந்தது” என்று. அப்போது தான் என்னுடைய அப்பா கூட்டத்தில் ஒருவராகத் திருமணத்தில் பங்கேற்றார் என்பது எனக்குத் தெரிந்தது.






மௌ.அர.ஜவஹர்

# உலகக் கால்பந்துப் போட்டியும், அக்கிரஹார அழிச்சாட்டியமும்!

உலகக் கால்பந்துப் போட்டி நடைபெறுகிறது. தற்போது தமிழகத்தில் இந்தப் போட்டியைக் காண்போர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. முக்கியமாகத் தென் மாவட்டங்களில். அர்ஜெண்டினா வெளியேற்றம், ரஷ்யா வெல்லுமா? என்று நிகழ்வுகளையும் யூகங்களையும் பார்த்து ரசிக்கின்ற நம் கால்பந்து ரசிகர்களிடையே ஒரு ஏக்கம் அது. இந்தக் கால்பந்து விளையாட்டு அப்படி என்ன மோசமா? இதை விளையாட நமக்குத் தகுதியே இல்லையா? ஏன் இன்னும் இந்தப் போட்டிக்குள் முதல் இடம் கூட அல்ல, அதற்குப் பின்னால் உள்ள இடத்தில் கூட இந்தியா இல்லையே? என்பதுதான். நமக்கு முன் உள்ள கேள்வியும் அதுதான். ஏன் பெரும்பான்மையான விளையாட்டுக்கள் அரசு, ஊடகங்கள் இவற்றின் கண்ணுக்குக் கூட படுவதில்லையே?

முதலில் விளையாட்டு என்பதற்கான முக்கியத்துவம் மக்களது மனதிலிருந்து மறைந்து வருகிறது என்பது ஒரு முக்கிய சமூகக்கூறு. படிக்க வேண்டும், வேலைக்குச் செல்ல வேண்டும், சமூகப் பிரச்சனைகளில் தலையிடாமல் தம் குழந்தைகள் மட்டும் தனித்து இருக்க வேண்டும் என்னும் மனநிலை மிகப் பெரும்பான்மையான பெற்றோரிடம் வளர்ந்து நிற்கிறது. இதனடிப்படையில் ஒன்று விளையாடி நம் பிள்ளை என்ன சாதிக்கப் போகிறான்? விளையாட்டு அவனுக்குச் சோறு போடுமா? என்ற எதிர்கால பயத்தால் அவர்களது மனம் விளையாட்டை மறுத்து கல்வி மட்டுமே பிரதானம் என்ற முடிவுக்கு வருகின்றனர். தற்போதைய எதார்த்த நிலையும் அதுவே.

எழுபதுகள், எண்பதுகள் மற்றும் தொன்னூறுகளின் ஆரம்பங்களில் விளையாட்டுக்கான ஆசிரியர்களுக்கும், விளையாட்டுகளுக்கும் மதிப்பு இருந்தது. மாவட்டங்களில் சில பள்ளிகள் ஒவ்வொரு விளையாட்டுக்கான சிறப்பானபள்ளி என்ற பெயருடன் இருந்தன. அவ்விளையாட்டிற்காகவே பெற்றோர்கள் அப்பள்ளியில் தம் குழந்தைகளைச் சேர்த்த காலம் அது. படிக்கும் மாணவனுக்குச் சமமான அந்தஸ்த்தோடு விளையாட்டு மாணவர்களும் வலம் வந்த காலமது. விளையாட்டில் வந்த அவர்கள் அத்தகுதியோடு வேலைகளுக்கும் சென்றனர்.

தற்போதும் விளையாட்டுத் தகுதியில் மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்கின்றனர். ஆனால் அவற்றில் பெரும்பாலானவர்கள் தனிப் பயிற்சியாளர் வைத்துத் தகுதியானவர்களே. ஆனால் முந்தைய காலகட்டத்தில் பள்ளிகளிலிருந்து, பள்ளி உடற்பயிற்சி ஆசிரியரால் தகுதிப்படுத்தப்பட்டு போட்டிகளில் வென்று தகுதியானவர்கள். அப்படியானால் விளையாட்டுகளும் ஒரு தகுதியுடைய படிப்புதான் என்னும் நிலை உள்ளதா? அடிப்படைக் கல்வியோடு விளையாட்டையும் விரும்பும் மாணாக்கர்களுக்குக் கொடுக்காமல் சமூகத்தில் விளையாட்டுக்கான மதிப்பு உயர வாய்ப்பு எப்படி ஏற்படும்?. சரி இதில் எங்கே அக்கிரகாரம் வருகிறது?

சமூக அமைப்பைப் போலவே விளையாட்டுகளிலும் பார்ப்பன - சூத்திர நிலையில் உள்ள விளையாட்டுகள் உள்ளன. கராத்தே, கபடி, கால்பந்து, வில்வித்தை, ஹாக்கி, கூடைப்பந்து

போன்ற இன்னும் சில விளையாட்டுகள் சூத்திர மற்றும் பஞ்சமத் தகுதியோடேயே உள்ளன. இது போன்ற விளையாட்டுகளுக்கு உள்ள பயிற்சியா ளர்கள் எல்லா மாவட்டங்களிலும் கிடையாது. மேலும் பயிற்சியாளர்கள் வேறு பணியில் இல்லாமல் பயிற்சியாளராக மட்டுமே இருப்பாராயின் அவர் களது வாழ்வு நிலை மிகவும் சிரமத்தில்தான் இருக்கும்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே அது நல்ல தொழிலாக உள்ளது. உதாரண மாக கராத்தே தற்போது விளையாட்டாகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒலிம்பிக்கில் சேர்க்கப் பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே நான் சொன்ன கால கட்டங்களில் கராத்தே என்பது விரும்பிக் கற்கும் கலையாக இருந்ததால் அதன் ஆசிரியர்கள் மதிப்பு மிக்கவர்களாக இருந்தனர். (சாதாரண மக்கள் அடிதடிக் கலையாகப் பார்த்தாலும் கற்ற மாணவர் கள் மற்றும் அவர்தம் பெற்றோர் மதிப்புடனே வைத்திருந்தனர்).

ஆனால் தற்போது தரமான மாணவர்கள் கிடைத்தாலும் அவர்களை உருவாக்க கல்விக்கான நேரங்கள் அனுமதிப்பதில்லை. பெற்றோரும் கல்விக்குச் சமமாக இவ்விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. ஒன்பதாம் வகுப்பு வந்தவுடனேயே அம்மாணவன் கல்விக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளான். மேலும் இவ்விளையாட்டுகள் ஊடகங்களால் முதன்மைப்படுத்தப்படுவதில்லை. எனவே அவ் விளையாட்டு வீரர் 10, +1, +2 முடித்து வரும் போது அவ்விளையாட்டிற்கும் அவருக்கும் இருந்த தொடர்பு காததூரம் சென்றிருக்கும். ஒப்பீட் டளவில் கராத்தேவுக்குக்கூட பயிற்சியாளர்கள் சிறு பெரு நகரங்களில் உள்ளனர். ஆனால் கால் பந்துக்கோ, கபடிக்கோ, கூடைப்பந்துக்கோ பயிற்சி யாளர்கள் மற்றும் குழு அமைப்பாளர்கள் போன்ற வர்கள் பெரு நகரங்கள் தவிர வேறு இடங்களில் இல்லவே இல்லை எனலாம்.

மேற்சொன்ன விளையாட்டுகளில் பார்ப்பனர் வீரர்களாகப் பங்கு பெறுவது என்பதே 99.99 விழுக்காடு இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. காரணம் நாம் அறிந்ததே உடல் உழைப்பு என்பது மட்டுமல்ல, இவ்விளையாட்டுகளில் பணம் கொட்டுவதில்லை. மேலும் விளையாட்டுகள் இவ்வாறு ஏற்றத்தாழ்வுடன் இருப்பதன் காரணமே பார்ப்பன ஏற்பாடுதான். ஊடகங்கள் பார்ப்பனர் கையில், இந்திய அரசை ஆட்டிப்படைக்கும் அனைத்துத் துறைகளிலும் விகிதாச்சாரத்தை அளவு கடந்து மீறிய பார்ப்பன ஆதிக்கம். எனவே விளையாட்டு என்றால் எல்லாம் சமம் என்பதே இல்லாமல் ஊடகங்களின் வாயிலாகவும் பார்ப்பனர்களின் நடத்தை வாயிலாகவும் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வை உண்டாக்குகின்றனர்.

இதை தேசிய கால்பந்து தலைமைப் பயிற்சியாளரும் முன்னாள் தேசிய கால்பந்து அணி வீரருமான சய்யத் நயிமுதீனின் கூற்று மெய்யாக் குகிறது. “நான் தேசிய கால்பந்து அணிக்குப் பயிற்சியாளராக இருந்தபோது பயிற்சியின்போது விளையாட்டு வீரர்களுக்குப் பாதுகாப்பான பாட்டில் குடிநீர், பழரசம் போன்றவற்றுக்குக்கூட அதிகாரிகளிடம் போராடித்தான் வாங்க வேண்டி யிருந்தது. வெறும் வயிற்றுடன் கால்பந்து விளை யாட முடியுமா?” அதிகாரிகளில் மிகப் பெரும் பான்மையினர் பார்ப்பனரே என்பதுதான் இந்நிலைக்கான அடிப்படை.

இதில் இன்னொரு தந்திரம் பார்ப்பனர்கள் செய்கின்றனர். Indoor Games எனப்படும் சற்றுக் குறைந்த உடல் உழைப்புள்ள விளையாட்டுகளில் வென்று விளையாட்டு ஒதுக்கீட்டில் மேற்படிப்பு களைப் படித்து அல்லது இதையே தகுதியாக அமெரிக்கா போன்ற நாடுகளில் காட்டி அங்கு செட்டிலும் ஆகின்றனர். இது பெரும்பான்மையான பார்ப்பனரல்லாதோரால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத டெக்னிக். அது மட்டுமல்ல பார்ப்பனர் களின் வெளிநாட்டுத் தொடர்புகள் போல நமக்குக் கிடையாது என்பதும் இங்குள்ள சமூகச் சூழல்.

அதே நேரம் விளையாட்டுகளிலேயே உயர் அந்தஸ்தில் மற்றும் பணம் கொட்டுமிடத்தில் இருப்பது கிரிக்கெட்தான். டென்னிஸ் கூட பணம் கொட்டும் என்றாலும் அதில் உடல் உழைப்பு அதிகம் என்பதால் அதைப் பார்ப்பனர்கள் லட்சியம் செய்வதில்லை. மற்ற விளையாட்டுகளில் பார்ப்ப னர்கள் எத்தனை பேர் என்று பாருங்கள். அதே சமயம் கிரிக்கெட்டில்!

ஊடகம் மற்றும் பார்ப்பன நடவடிக்கை களால் சிறப்பான இடத்தில் உள்ள கிரிக் கெட்டையே மாணவர்களின் மனதில் புகுத்தி ஏறக் குறைய எல்லா மாணவர்களும் விடுமுறைக் காலங் களில் கிரிக்கெட் மட்டையுடனேயே திரிகின்றனர். எந்த விளையாட்டு முறையும் அதீத வெயிலில் விளையாட அனுமதிக்காது. மாறாக கிரிக்கெட் மட்டும்தான் எந்த எதிர்காலத் திட்டமும் இல்லாமல் எந்த உடல் நலன் அடிப்படையும் இல்லாமல் மாணவர்களை விளையாட வைக்கிறது.

மாவட்டத் தகுதிக்குச் சென்று மாநில அளவில் வர வேண்டும். சரி அப்படி மாவட்டம் அதை அடுத்து மாநிலம் என்று சென்றாலும் அகில இந்திய அளவில் நம் பார்ப்பனரல்லாத மாணவர்கள், வீரர்கள் வருகின்றனரா என்றால் இல்லை. தமிழ் நாட்டிலிருந்து போன கிரிக்கெட் வீரர்களின் பட்டியலைப் பார்ப்போமா.

**தமிழ்நாட்டு கிரிக்கெட்டில் பார்ப்பன ஆதிக்கம்**

வெங்கட்ராகவன், கிர்ஷ் ஸ்ரீகாந்த், இராமன், சிவராமகிருஷ்ணன், சடகோபன் ரமேஷ், ஹேமங் பதானி, இலஷ்மிபதி பாலாஜி, பத்ரிநாத், முரளி கார்த்திக், தினேஷ் கார்த்திக், அபினவ் முகுந்த், முரளி விஜய், இரவிசந்திரன் அஸ்வின், அனிருத் ஆகிய அனைவருமே பார்ப்பனர்கள் ஆவார்கள்.

**அகில இந்தியக் கிரிக்கெட்டில் பார்ப்பன ஆதிக்கம்**

அஜீத் அகர்க்கர், அனில் கும்ளே, அசோக் வினோ மான்காட், சந்திரசேகர், திலீப் தோஷி, ஹிர்திக் பாண்டே, ஜெய்கல் ஸ்ரீநாத், கிருஷ்ணகுமார் தினேஷ் கார்த்தி, கருநால் பாண்டே, லாலா அமர் நாத், லக்ஷ்மண் சிவராமகிருஷ்ணன், மதன்பால் உத்தாராம் ஷர்மா, மனிஷ் பாண்டே, மொகீந்தர் அமர்நாத், மோகித் ஷர்மா, மொட்கான்ஹாலி, லக்ஷ்மி நர்ஸ் ஜெயசிம்ஹா, முல்வந்திரி ஹிமாட்வல் மான்காட், பத்மநாப் கோவிந்த், போச்சையா கிருஷ்ண மூர்த்தி, இராகுல் டிராவிட், இராம்கண்ட் பிகாஜி, .ரமேஷ் விதல் தாஸ், இரவிசந்திரன் அஸ்வின், ரோகித் குர்நாத், சச்சின் ரமேஷ் டெண்டுல்கர், சஞ்சை விஜய் மஞ்ச் ரேகர், சவ்ரவ் சண்டிதாஸ் கங்குலி, சுப்ரடோ தாரா பேனர்ஜி, சுனில் பண்டாரச்சார்யா, சுனில் மனோகர், சுரேஷ் ரெய்னா, விஜய் லக்ஷ்மண் மஞ்ச்ரேகர். எப்படி உள்ளது பார்ப்பன ஆதிக்கம்!

இது எப்படி நடக்கிறது என்றால் கிரிக்கெட் தேர்வுக்குழு முழுக்கப் பார்ப்பனர்களே! கிரிக்கெட்டுக்கு மட்டும் ஸ்பான்ஸர்கள் அதிகம். அது மட்டுமல்ல எந்த ஒரு விளையாட்டிலும் இல்லாத தேசபக்தியை இவ்விளையாட்டில் நுழைத்துள்ளனர். இது மிகப் பெரிய வியாபாரத் தந்திரம்! கிரிக்கெட்டைப் பார்க்கும் கூட்டத்தை அதிகப் படுத்தியதில் இது முக்கியப் பங்கு.

தேச பக்தி, தேசியம் என்பதே பார்ப்பனரல்லாதோர் மீண்டும் மீண்டும் பார்ப்பன ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு சிந்திக்காமல் இருக்க வேண்டும் என்ற பார்ப்பனக் கண்டுபிடிப்பே. இதையே தோழர் பெரியார்

> "தேசியத்தின் பெயரால் இன்னும் புதுப்புதுப் பண்டிகைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர். இக்காரியங்கள் மூலம் மக்களைக் குருட்டு நம்பிக்கை உடையவர்களாகவும் பகுத்தறிவு அற்றவர்களாகவும் ஆக்கி வருகின்றனர். மக்களுடைய முயற்சியையும், நேரத்தையும், பாடுபட்டு சேர்த்த செல்வங்களையும் பயனற்ற வீணான வழியில் செலவு செய்யும்படி தூண்டிவிடுகின்றனர்"
>
> - குடி அரசு, 27.12.1931

தோழர் பெரியாரின் இக்கூற்றை அப்படியே கிரிக்கெட்டோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளின்போது தேசபக்தி பிரச்சாரம்தானே நம்முடைய ரசிப்பைக்கூட நம் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயமாக்கி வைத்துள்ளனர்.

இப்படி பார்ப்பன ஆதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும், கொள்ளைக்கும் சாதகமாக உள்ள கிரிக்கெட்டுக்கே அதீத அளவில் முக்கியத்துவம் கொடுத்து மற்ற விளையாட்டுகளை மதிப்பிழக்க வைத்து சூத்திர, பஞ்சம நிலையில் வைத்திருப்பதாலேயும், இதற்குச் சாதகமாக நாமும் விளையாட்டிலிருந்து விலகி இருப்பதும்தான் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிகளில் கலந்து கொள்வது கனவாகவே உள்ளது.

விளையாடும் வீரர்களின் எண்ணமும் ஏதோ மேல்படிப்புக்கான தகுதியாக இருந்தால் போதும் என்றே உள்ளது. அதன் அடிப்படையும் என்னவென்றால் உற்சாகத்தோடும், திறமையோடும் விளையாட வரும் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நல்ல இடமும் கருவிகளும் கிடைப்பதில்லை. இந்தியாவோடு ஒப்பிடும்போது கால்பந்தாட்டத்தில் அய்ஸ்லாந்து, துனீஷியா, பனாமா, செனகல் ஆகிய சின்னஞ்சிறு நாடுகள் மிகப் பெரிய ஆசைகளுடன் விளையாடுகின்றன.

**இது போன்ற நிலை இருப்பதால்தான் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியைக் காண இந்தியாவிலிருந்து தற்போது 14,000 பேர் சென்றிருந்தாலும், இவ்வளவு ஆர்வம் மக்களிடையே இருந்தும் மய்யப் பார்ப்பன அரசு இளம் வீரர்களுக்கு எந்த வசதிகளையும் செய்து தராமல் இருக்கும் இந்த நிலையில் உலகக் கோப்பையை கால்பந்தில் மட்டுமல்ல எந்த விளையாட்டிலும் நாம் எதிர்பார்ப்பது வீணே! எல்லாத் துறைகளிலும் சமூகநீதி அடிப்படையில் பதவிகள் பகிரப்படாமல் அக்கிரகாரத்து அழிச்சாட்டியங்களை நிறுத்தாமல் விளையாட்டிலும் நாம் முன்னேறுவது இயலாத காரியம்.**



பொள்ளாச்சி விஜயராகவன்



# கடவுள் வாழ்த்து வேண்டாம் காமராசர் வாழ்த்தே தேவை

புராண இதிகாசங்கள் தொடங்கி, மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் கெட்டிப்பட்டு, பார்ப்பன சனாதன மதமான இந்து மதம் பிறப்பின் அடிப்படையில் கல்வி மறுக்கப்பட்ட நெடிய காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, இந்தச் சமூகச் சூழலை நுட்பமாக ஆய்வு நடத்தி இறுதியில் கவர்னர் ஜெனரல் அமைச்சரவை சட்டக்குழு உறுப்பினரான, இன்னும் நினைவுகூறத் தக்கவராக அழியாப் புகழ்பெற்ற தாமஸ் பேபிஸ்டன் மெக்காலே பிரபுவை (1800 - 1859) கல்விக் கொள்கை குறித்து முடிவு எடுக்க நியமனம் செய்கிறது. அவருடைய சீரிய முயற்சியால் ஆங்கிலம் பயிற்சி மொழியாக்கப்பட்டு ஆண், பெண் இரு பாலருக்கும் கல்வி சமமாக வழங்கப்பட்டது.

அதன் பயனை இந்துக்கள் என்ற பெயரில் பார்ப்பனர்கள் முழு கல்வி வேலை வாய்ப்பை தங்களுக்கு ஆனதாக மாற்றிட பெரும் முயற்சி செய்த வேலையில், தென்னகத்தில் நீதிக்கட்சி தோன்றி இந்து மதத்தால், தீண்டாமையால், ஜாதியால் அரசுக் கல்வி, வேலைவாய்ப்பு மறுக்கப்பட்ட திராவிடர் இன மக்களுக்கு இடஒதுக்கீட்டு உரிமை கொண்டு வந்து பார்ப்பனர் அல்லாத மக்களை முன்னேற்றம் அடையச் செய்தனர். இதனையும் பார்ப்பனர்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஒழிக்க உழைத்தனர்.

இந்நிலையில் திராவிடர் நாடான தமிழ் நாட்டில் குலக்கல்வித் திட்டம் கொண்டு வந்து திராவிடர் இன மக்களின் கல்வி வேலை வாய்ப்பில் மண்ணை அள்ளிப்போட்ட பார்ப்பன இனத் தலைவனும் குல்லுகப்பட்டர் என்று அழைக்கப் பட்ட அரசியல் குள்ளநரி அன்றைய தமிழக முதல்வர் இராஜ கோபால ஆச்சாரியை எதிர்த்து கலகக்காரர் தோழர் பெரியாரின் பெரும் முயற்சி யால் முதல்வர் பதவியில் இருந்து விரட்டி அடிக்கப் பட்டு - அன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த பின்னாளில் கல்வி வள்ளல் என்று அழைக்கப்பட்ட காமராசரை முதல் அமைச்சர் பதவிக்குக் கொண்டு வரப்பட்டார்.

அவரின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் கல்வி, சமூகநீதி, தொழில் வளம் பெறுக இன உணர்வோடு கடுமையாக உழைத்துத் தமிழகத்தை முன்னேற்றிய அந்த வரலாற்று நிகழ்வுகள் குறித்தும் கலகக்காரர் தோழர் பெரியாரின் மேற்கோள்கள் குறித்து கல்வி வள்ளல் காமராசரின் 115ஆவது பிறந்தநாளில் (15.07.1903 - 15.07.2018) உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது காட்டாறு குழு.

## காமராசர் குறித்துப் பெரியாரின் மேற்கோள்கள்

மானமும், நாதியும், இன உணர்ச்சியும் அற்ற நம் சமுதாயத்துக்குக் காமராசர் ஆட்சி ஏற்பட்டது ஏதோ அகசுமாத்தான சம்பவமேயாகும். இந்த அகசுமாத்தான சம்பவம் மறுபடியும் அமைவதென்பது எதிர்பார்க்க முடியாததேயாகும். காமராசரையே மனத்தில் கொண்டு நான் சொல்லவில்லை. இன்றைய சூழ்நிலை, சுற்றுச் சார்பு, மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி, காற்று வாக்கு முதலியன மறுபடியும் யார் என்ன பாடுபட்டாலும் ஏற்பட முடியாதென்றே கருதுகிறேன்.

- விடுதலை 07.01.1961

சாதாரணமாக நான் ஏற்றுக்கொள்ளும் எந்தக் காரியத்திலும் கொள்கைகளை விட்டு விலகாமல் குறி வைத்துப் பேசுவேன். பல சந்தர்ப்பங்களில் காங்கிரசையே தாக்கிப் பேசுவேன். காமராசரை ஏதோ நான் ஆதரிக் கிறேன் என்றால் – காமராசரின் எல்லாக் கொள்கை களையும் ஆதரிக்கிறேன் என்பதல்ல. அப்படியானால் நான் அவருடன் கலந்தே விடுவேன்.

*- விடுதலை 08.01.61*

என்னுடைய வீடு பற்றி எரிகிறது. அணைக்கத் தண்ணீர் இல்லை. அணைக்கக்கூடிய ஊர் மக்கள் பக்கத்து வீட்டில் இருக்கும் என் எதிரிக்கு உரிமையான கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து அணைக்க வந்தால் – எதிரி வீட்டுத் தண்ணீரால் எரியும் என் வீட்டை அணைக் காதே என்று நான் சொன்னேனானால் அது அறிவுள்ளவன் செய்கிற வேலையா? காமராசர் நமக்கும் நம் மக்களுக்கும் நன்மை செய்யும்போது அவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமா?

*- விடுதலை 19.02.61*

மக்கள் எல்லாரும் படிக்கும்படியான இந்தப் பெருமை காமராசரால் வந்தது என்று கூறுவேனே ஒழிய, காங்கிரசினால் வந்தது என்று நான் ஒத்துக்கொள்ள முடியாது. காமராசருக்கு முன்பு இருந்த காங்கிரசு ஆட்சியில் இவைகள் எல்லாம் ஏன் நடக்கவில்லை? கேடுகள் தானே நடந்து வந்து இருக்கின்றன? நாளைக்குக் காமராசர் தோற்று அவருடைய இடத்துக்குப் பார்ப்பானோ, பார்ப்பானுடைய அடிமைகளோ வந்து உட்கார்ந்தால் இவைகளை எல்லாம் செய்வார்களா? தோசையைத் திருப்பிப் போடுவது போல் காமராசர் செய்த நன்மைகளை எல்லாம் மாற்றி விடுவார்கள்.

*- விடுதலை 06.04.61*

இன்று மந்திரி சபை ஒரு தமிழன் கையில் இருக்கின்றது. அதுவும் தமிழன் நலனில் அக்கறை கொண்ட கீழ்ச்சாதி ஆள் கையில் இருக்கின்றது. அதன் காரணமாக ஆதரிக்கின்றேன். இது போய்விடாமல் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

*- விடுதலை 07.04.61*

எங்கள் கொள்கையை நிறைவேற்றிக் கொள்ள காமராசரை ஆதரிப்பதும் பல திட்டங்களில் ஒன்றேயாகும்.

*- விடுதலை 23.04.61*

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கல்வித் துறையில் செய்ய முடியாத புரட்சியை எளிதில் காமராசர் செய்து முடித்து விட்டார். எல்லாரும் பத்தாவது வரை படித்து விட்டால் இன்னும் 10, 15 வருடத்தில் சாதி ஒழிந்து விடும் என்பது அவர் கருத்து. பத்தாவது படித்த பையன் மலக்கூடை எடுப்பானா? பத்தாவது வரை படித்த பெண் கையில் களைக்கொத்தை எடுப்பாளா? உழைக்காத சாதியே இருக்காது. உழைக்கிற ஒரு சாதி, உழைக்காமல் சொகுசாக சாப்பிட இன்னொரு சாதி இருக்கவே இருக்காது. ஒழிந்தே போகும் என்பது நம்பி வேலை செய்கிறார்.

*- விடுதலை 27.04.61*

காமராசர் பதவியையே நம்பி வாழ்பவரல்ல. தம்மாலானதை மக்களுக்குச் செய்வோமென்று நினைத்துக் கொண்டு செய்பவர். காலுக்கு ஆகாத செருப்பைக் கழற்றியெறிவது போல நம் மக்களுக்கு தொண்டு செய்ய இடந்தராத பதவியை அவர் விரும்பவில்லை. காரணம் அவர் பெண்டு, பிள்ளை குட்டி அற்றவர். யாருக்கும் சொத்து சேர்த்து வைக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லாதவர். எனவே தான் அவரால் மக்களுக்கு நன்மை செய்ய முடிகின்றது. மற்ற எந்த அரசியல் கட்சியை எடுத்துக் கொண்டாலும் அவரைப் போன்ற ஆளைக் காட்ட முடியாது. இவரது ஆட்சி நீடித்தால் தான் நம் மக்கள் வாழ்வு பெற முடியும்.

*- விடுதலை 19.07.61*

இந்த நாட்டில் இன்று உண்மையில் பார்க்கப் போனால் இரண்டே கட்சிகள் தான் உள்ளன. ஒன்று பார்ப்பனக்கட்சி. மற்றொன்று தமிழர் கட்சி. இதற்கு இடையிலே தான் இன்று போராட்டம் நடைபெறுகின்றது. சுருங்கச் சொன்னால், இன்று மனுதர்மத்துக்கும், மனித தர்மத்துக்கும் போராட்டம் நடைபெறுகின்றது. மனு தர்மத்தை நிலைநாட்ட ஆச்சாரியார் பாடுபடுகிறார். மனிதத் தர்மம் நிலைப்பெற காமராசர் பாடுபடுகின்றார். மனிதத் தர்மம் நிலைத்தால் தானே நம் இழிவு நிலை நீங்கும்?

*- விடுதலை 26.11.61*

100க்கு 15 பேராகப் படித்தவர்கள் உள்ள நிலையில் ஆச்சாரியார் பதவிக்கு வந்து அதை 10ஆகக் குறைக்கப் பாடுபட்டார். பல பள்ளிகளை மூடினார். காமராசர் பதவிக்கு வந்த இந்த 7 ஆண்டுக் காலத்தில் ஆச்சாரியார் மூடிய பள்ளிகளை எல்லாம் திறந்ததோடு, அதற்கு மேலும் ஆயிரக்கணக்கான பள்ளிகளை ஏற்படுத்தினார். 10 பேராக படித்தவர் நிலையை மாற்றி இப்பொழுது 100க்கு 35 பேர் படிக்கும் நிலையை உண்டாக்கினார்.

*- விடுதலை 07.12.61*

காமராசரின் சமதர்மத் திட்டத்தால் இன்று, கோயில் இல்லாத ஊரில் குடியிராதே என்னும் முட்டாள்தனமான பழமொழி மறைந்து, “பள்ளியில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற புதிய நீதிமொழி ஏற்பட்டுள்ளது. கல்வி வளர்ச்சி தானே சமதர்மப் பாதைக்கு அடிப்படை.?

*- விடுதலை 28.07.65*

கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எந்த நிகழ்ச்சி ஆரம்பித்தாலும் கடவுள் வாழ்த்துச் சொல்வதை நிறுத்தி விட்டு காமராசருக்கு வாழ்த்து கூற வேண்டும். அவரது முயற்சியால்தான் இத்தனைப் பேரும் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அவரது காலத்தில் பள்ளிகள் நாடெங்கும் திறக்கப்பட்டன.

*-விடுதலை 11.01.68*

**சான்றுகள்:**
**‘விடுதலை’ நாளிதழ்கள், தோழர் மே.கா.கிட்டு அவர்கள் தொகுத்து ‘தோழமை’ வெளியீடாக வந்த ‘காரியக் காமராசர் குறித்து – காரணப் பெரியார்’ நூல்.**

இராவணன்

# நூல் விமர்சனம்

மனித சமூகத்திற்கு இயற்கை வழங்கிய மிகப் பெரிய கொடை காதல் ஆகும். தனக்கு விருப்பமான துறையைத் தேர்ந்தெடுத்துக் காதலிப் பவர்கள் தான் விரும்பிய துறைகளில் பெரிய சாதனையாளராக மாறுகிறார்கள். அதேபோல் இந்த மனித சமூகத்தைக் காதலித்தவர்கள் சமுதாய வழிகாட்டியாக மாறுகிறார்கள். அப்படிச் சமூகத்தை நேசித்த தலைவர்களே சமூக மாற்றத்திற்கு வித்திடுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் சமூகத்தின் மீது கொண்ட தீராத காதலால் மக்களிடையே மாற்றங்களை உருவாக்கிய தலைவர் களில் முக்கியமானவராகிய தோழர் அம்பேத்கர் அவர்களின் காதல் பற்றித் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் எழுதிய நூலே "டாக்டர் அம்பேத்கரின் புத்தக் காதலும் புத்தகக் காதலும்" ஆகும். தோழர் அம்பேத்கர் அவர்கள் ஏன் புத்தத்தைக் காதலித்தார், ஏன் புத்தகத்தைக் காதலித்தார் என்பதை ஆதாரத் துடன் மிக எளிமையாக புரியும்படி எழுதியுள்ளார். அழகிய அட்டை வடிவமைப்புடன் மிக நேர்த்தியாக வெளியிட்டுள்ளனர்.




### ஆர்.எஸ்.எஸ் ஸின் சூழ்ச்சி

இந்தியாவின் அதிகார வர்க்கமாகிய பார்ப்பனர்களின் நலனைப் பாதுகாக்க உருவாக்கப் பட்ட ஆர்.எஸ்.எஸ் அமைப்பு, தனக்கு எதிராகப் போராடுபவர்களை எதிர்த்து அழிப்பார்கள். முடிய வில்லை என்றால் ஆதரித்து அழிப்பார்கள். அப்படிப் பார்ப்பனர்களுக்கு எதிராகப் போராடிய பல சீர்திருத்தவாதிகளை தனதாக்கிக் கொண்டனர். கேரளாவில் நாராயணகுரு, தமிழகத்தில் வள்ளலார் எனப் பலபேரை ஆக்கிரமித்து விட்டார்கள். இந்தியாவின் வரலாற்றில் ஆரியத்தை மிகப் பெரிய ஆட்டங்காண வைத்த புத்தரைக் கிருஷ்ணனின் ஒன்பதாவது அவதாரம் எனக் கூறி அவருடைய முற்போக்குக் கருத்துக்களை அழித்து கடவுளாக மாற்றிவிட்டனர். அந்த நிலை அம்பேத்கருக்கு வந்துவிடக்கூடாது என நூலாசிரியர் எச்சரிக்கிறார்.

இந்தப் புத்தகத்தின் 9 வது பக்கத்தில் "அண்ணல் அம்பேத்கரை அவரது 125ஆவது பிறந்த நாளில் படத்திற்கு பூசை, பெருத்த நாமாவளி-புகழுரை என்ற கண்ணி வெடிகளை வைத்து அணைத்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை எச்சரிக்கையுடன் இளைஞர்கள் அதிலும் அம்பேத்கரின் கொள்கை வழி நிற்போர் மிகுந்த கவனத்துடன் கண்காணிப்பது அவசியம்." என்கிறார். பார்ப்பனியம் பயந்து நடுங்கக்கூடிய தலைவனாகிய தோழர் பெரியார் அவர்களாலே பகுத்தறிவுவாதி என்றும் பகுத்தறிவு மார்க்கம் என்றும் பாராட்டப்பட்ட புத்தரை, புத்த மார்க்கத்தை எளிதில் தனதாக்கி அதில் பல்வேறு சடங்குகளைத் திணித்து விட்டனர். அந்த ஆபத்து இந்து மதத்தின் வேத இதிகாசங்களை, புராணங்களை ஆய்வு செய்து வரிக்கு வரி அம்பலப்படுத்திய தலைவர் அம்பேத்கருக்கு வந்துவிடக் கூடா தென இந்நூலாசிரியர் நம்மை எச்சரிக்கிறார்.

### பெரியாரும் அம்பேத்கரும்

உலகம் முழுவதும் மக்களை அடிமைப்படுத்த அதிகார வர்க்கம் வன்முறையைப் பயன்படுத்தும். ஆனால் இந்தியாவில் பார்ப்பனியம் சடங்கு, சம்பிரதாயம், மூடநம்பிக்கை ஆகியவற்றை வைத்தே அடிமைத்தனத்தை மக்களே விரும்பி ஏற்றுக் கொள்ள வைத்தனர். அப்படி கிரிமினல் புத்தி கொண்ட ஆரியர்களை ஆட்டம் காண வைத்தவர் புத்தர் ஆவார். அவருக்குப் பின்பு பெரியார், அம்பேத்கர் ஆவார்கள். அவர்களை எதிர்த்து அழிக்க முடியாத ஆரியம் அவர்களின் தொண்டர்களிடையே மோதலை உருவாக்க சில முயற்சிகள் செய்தது.

ஆரியத்திற்கு விலைபோன சிலரை தயார் படுத்திப் பெரியாருக்கு எதிராக பேச, எழுதத் தயாரித்தனர். அவர்களின் பொய்யுரைகளில் மிக முக்கியமான ஒரு செய்தியை நூலாசிரியர் அம்பலப்படுத்துகிறார். இந்த நூலின் 13 ஆம் பக்கத்தில் அம்பேத்கர் தன்னுடைய மகத் குளப் போராட்டத்திற்கு ஈ.வெ.ராமசாமியின் வைக்கம் போராட்டம் உந்துசக்தியாக இருந்தது என்று தான் நடத்திய ‘மூக் நாய்க்’ (ஊமைகளின் குரல்) ‘குரலற்றவர்களின் குரல்’ ஏட்டில் பதிவு செய்ததை அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய தனஞ்ஜே கீர் அவர்கள் பதிவு செய்துள்ளதை ஆதாரத்துடன் விளக்குகிறார்.

### அம்பேத்கரின் புத்தக் காதல்

இந்து மதத்தின் பெரும்பான்மை மக்களைச் சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் பிரித்து வைத்து அவர்களைப் பார்க்கக் கூடாதவர்களாகவும், தீண்டக் கூடாதவர்களாகவும், அண்டக் கூடாதவர் களாகவும் மாற்றி அடிமை விலங்கை விரும்பி ஏற்றுக்கொள்ள வைத்த இந்து மதத்தையும், அதற்கு எதிராகச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் போதிக்கும் பவுத்தத்தையும் அலசி ஆராய்ந்து புத்தர் சொன்ன மார்க்கத்தின் பால் ஈர்க்கப்பட்டு அது ஒரு சமத்துவ மார்க்கமாகவும் எதையும் பகுத்தறிவு கொண்டு பார்க்கும் சிந்தனையை வளர்க்கும் தத்துவமாக இருந்ததால் புத்தத்தைக் காதலித்தார். இந்த நூலின் 7ஆம் பக்கத்தில் நான் ஏன் பவுத்தத்தை விரும்புகிறேன் என்பதற்குக் காரணம் கூறுகிறார்

1. ‘பவுத்தம்’ ‘பிரஜனர்’ (பகுத்தறிவு) மூடநம்பிக்கைகள், மனித சக்திக்கும் அப்பாற் பட்ட சக்தி என்பது போன்றவற்றை வெறுக்கும் பகுத்தறிவைப் போதிக்கிறது
2. ‘பவுத்தம்’ கருணையையும் போதிக்கிறது
3. ‘பவுத்தம்’ சமத்துவத்தை வலியுறுத்துகிறது

“ஒரு நல்ல வாழ்க்கைக்கும் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கும் மனிதனுக்கு இவைதான் தேவை. கடவுளோ, ஆத்மாவோ சமூகத்தை ஒரு போதும் காப்பாற்றாது.”

எனத் தோழர் அம்பேத்கர் மிகத் தெளிவாகக் கூறியதை நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். ஆனால் அம்பேத்கர் பெயரைச் சொல்லி பவுத்தத்தை ஏற்பதாகச் சொல்லும் சிலர் புத்தரை இன்னுமொரு இந்துக் கடவுளாக மாற்றும் விதமாக அகல் விளக்கு வைப்பது, காதணி விழா நடத்துவது போன்றவற்றைச் செய்கின்றனர். மேலும் அம்பேத்கரின் மீதுள்ள பற்றால் அவர் கொள்கைக்கு எதிராக கோவில் திருவிழா விளம்பங்ரகளில், இந்துமதப் பண்டிகை விளம்பரங்களில் அவர் படத்தைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

### அம்பேத்கரின் புத்தகக் காதல்

சமூகத்தை நேசிப்பவர்கள் அனைவருமே வாசிப்பை நேசிப்பவர்களாகவே இருந்துள்ளனர். பல தலைவர்கள் சமூகத்தின் அடிமைத்தன்மைக்கு என்ன காரணம் என்பதையும் அதற்கான தீர்வையும் தேடும் போது யதார்த்த வாழ்க்கைக்கும் தத்துவத்திற்கும் உள்ள தொடர்புகளை வாசிப்பு மூலம் ஆய்ந்து அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லி யுள்ளனர். இன்றும் கூட வாசிப்பு இல்லாத தலைவர்கள் ஊடகங்கள் முன்பு என்ன திணறு திணறுகின்றனர் என்பதை நாம் நேரடியாகப் பார்க்கின்றோம்.



தோழர் அம்பேத்கரின் புத்தகக் காதல் பற்றி நூலாசிரியர் 65 ஆம் பக்கத்தில் தெளிவுபடுத்துகிறார். “எனது இந்த நூலகத்தை கிடைத்தற்கரிய நூல்களையெல்லாம் நான் சேகரித்து வைத்துள்ள இந்த நூலகத்தினை தனியார் யாருக்காவது கொடுத்தால் 5 லட்சம் ரூபாய். (அப்போது அது பெரிய தொகை என்பதை நினைவுப் படுத்திக் கொள்வோம்) ஆனால் அப்படிச் செய்ய எனக்கு விருப்பமில்லை. நான் இந்த நூலகத்தை (டாக்டர் துவக்கிய கல்லூரி) சித்தார்த்தா கல்லூரிக்கு அளித்திட முடிவு செய்து விட்டேன்” என்று பதிவு செய்துள்ளார்.

தோழர் அம்பேத்கர் தனது வறுமையிலும் நூல்கள் வாங்குவதை நிறுத்தவில்லை. தனது சொந்த நூலகத்தில் இறக்கும் போது இடம் பெற்ற நூல்கள் 69,000 ஆகும். சமூகம், அரசியல், பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அம்பேத்கர் சிறந்து விளங்கியதற்குக் காரணம் அவரின் தீவிர வாசிப்பின் மீதுள்ள காதலே ஆகும். அம்பேத்கர், பெரியார் பற்றிய நிறையத் தகவல்கள் நூலின் அனைத்துப் பக்கங்களிலும் நிறைந்துள்ளன. அம்பேத்கரிய, பெரியாரியத் தோழர்கள் மட்டுமல்லாது அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் ஆகும்.

**வெளியீடு- திராவிடர் கழக (இயக்க) வெளியீடு,**
**பெரியார் திடல்,**
**84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி,**
**சென்னை- 600 007 விலை - ரூ.50**

அதி அசுரன்

# பெரியார்நாடும் தமிழ்நாடும்

கடந்த 2018 ஜூன் இதழின் தொடர்ச்சி

**'தேசம்', 'தேசியம்' எதிர்ப்பு**

தேசம், தேசிய இனம், தேசீயம் என்பவைகளின் போலித்தன்மைகள் குறித்து 1928 லேயே விளக்கியுள்ளார் பெரியார்.

> "ஆங்கிலத்தில் நேஷன், நேஷனல், நேஷனலிசம் என்கின்ற பதங்களின் பொருள்களேதான் தேசம், தேசத்திற்குரியது, தேசீயம் என்கின்ற பதங்களாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட தேச சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்த விஷயங்களையே தான் பெரிதும் குறிப்பிடுகின்ற முறையில் அவ்வார்த்தை ஏற்படுத்தப்பட்டதே ஒழிய வேறில்லை.
>
> தமிழ்நாட்டைப் பொருத்தவரை யாராவது தேசீயம் என்பதை எடுத்துக் கொண்டால் தமிழ் மக்களுடைய சுயமரியாதையைப் பற்றியோ நன்மையைப் பற்றியோ ஏதாவது கவலை எடுத்துக் கொள்ளத்தக்க குறிப்பு அதில் இருக்கின்றதா என்பதும் மிகுதியும் கவனிக்கத்தக்கதாகும்.
>
> இந்திய மக்கள் சமூகத்தைப்பற்றியும் தமிழ் மக்களின் சமூகத்தைப் பற்றியும் சுயமரியாதையைப் பற்றியும் சீர்திருத்தத்தைப் பற்றியும் ஒரு சிறிது கவலையும் இல்லாது தேசீயம் என்கின்ற வெறும் வார்த்தையை மாத்திரம் பாமர மக்கள் ஏமாறும் மாதிரி உச்சரித்துக் கொண்டு சிலரின் உத்தியோகத்திற்கும் சிலரின் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகித்துக் கொண்டு உண்மையான தேசீயமாகிய சுயமரியாதையைப் பற்றிக் கவலை எடுத்துக்கொண்டிருக்கும் இயக்கங்களையும் குறை கூறிக்கொண்டு "சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டியது தேசீயத்தின் கடமை" என்று சொல்வதில் எவ்வளவு தேசீயத் துரோகம் இருக்கின்றது என்பதை பொது மக்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.
>
> - தோழர் பெரியார், குடி அரசு - 06.05.1928

மேற்கண்ட கட்டுரையின் முழுமையான வடிவத்திலும், இந்திய தேசியம், தமிழ்த்தேசியம் இரண்டையுமே தனித்தனியாக அடையாளப்படுத்தி எதிர்க்கிறார். ஒருவேளை இந்தக் கட்டுரையின் பொருளானது தேசம், தேசியம் என்பவற்றுக்கு ஆதரவாகத்தான் உள்ளது என்று யாராவது உறுதிப் படுத்தினால்கூட, அந்த ஆதரவிற்கும் அடிப் படையாக இருப்பது, "பார்ப்பனர்களுக்கு எதிரான சுயமரியாதையே" என்பதையும், பெரியார் கூறும் 'தேசியம்' என்பது, பார்ப்பன, இந்து மதத்திற்கு எதிரான சுயமரியாதை உணர்ச்சி தான் என்பதையும் மறுக்கமுடியாது.

அதேபோல, தேசம், தேசியம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ள உரை இலங்கைப்பேருரை. 'இந்திய தேசியம்' என்ற கருத்தைப் பார்ப்பனர்கள் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். அதனால், இந்த எதிர்ப்பு என்பது 'தேசியம்' என்ற கருத்தியலுக்கு எதிரானது அல்ல என்று எவரும் மறுத்துவிட முடியாத அளவிற்கு, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியத்தை மறுக்கிறார்.

> "தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு தங்கள் தங்கள் முதலைப் பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை - பாமர மக்களைப் பலி கொடுப்பதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.
>
> உதாரணமாக இங்கிலாந்து தேச முதலாளிகள் அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றி பெற்று தங்கள் செல்வத்தை மேலும், மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால் அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறு தந்திரத்தின் மூலம் இங்கிலாந்து தேசத்துக்கு முதலாளிகளின் செல்வத்தை கொள்ளை கொள்ள முயற்சிப்பதாயிருந்தால்- இங்கிலாந்து தேசத்து முதலாளிகள், இங்கிலாந்து தேசத்து ஏழைமக்களையும் பாமர மக்களையும் பார்த்து "ஓ இங்கிலாந்து தேசீய வீரர்களே, தேசாபிமானிகளே தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது. இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய அழைக்கிறாள் ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்" என்று கூப்பாடு போடுவார்கள். கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைக்காரர்களுக்கு எலும்பு போட்டும் பிரசாரம் செய்விப்பார்கள்.



தேசீயம், தேசீயம் என்பதும் முற்கூறியவைகளை போன்ற ஒரு போலி உணர்ச்சிதான். ஏனெனில், தேசீய உணர்ச்சி என்பதானது இன்று உலக பொதுமக்கள், அதாவது உலகில் எங்கும் பெரும் பான்மையாய் இருந்து வரும் மக்கள் தொழில் இன்றியும், தொழில் செய்தாலும் ஜீவனத் திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும் மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய நிலைமைக்குப் பரிகாரம் தேடுவதைத் தடைப்படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வந்தர்களால் அதிகாரப் பிரியர்களால் சோம் பேறி வாழ்க்கை சுபாவிகளால் கற்பிக்கப்பட்ட சூக்ஷியாகும். தேசீயம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும் வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.”

- குடி அரசு - 20.11.32

*மேற்கண்ட உரையிலேயே, இரஷ்யப் புரட்சியைக் குறிப்பிடுகிறார். பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு இரஷ்யா. அந்த ஒன்றுபட்ட இரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்றுகூறி, அந்தவகைப் புரட்சிக்கு ஆதரவாக நிற்கிறார்.*

“கடவுள், மதம், தேசீயம் ஆகியவைகள் அழிக்கப் பட்ட அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. **அவ்வூராருக்கு கடவுள், மத, தேச அபிமானம் இல்லை.** மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய் காணப்பட்டது. அங்கு பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி, அதிகாரி - குடி ஜனங்கள் என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லை.

அந்நாட்டு மக்களுக்கு ஆண் பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும், உயிருக்குத் துணிந்த வீரமும் சமத்துவ உணர்ச்சியும் கடவுளையும் மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காண முடியாதாயிருக்கிறது.

- தோழர் பெரியார், குடி அரசு - 20.11.1932

*இவ்வாறு தேசம், தேசியம் என்பவைகளுக்கு எதிராக இருந்தபோதும் - பல தேசிய இனங்களின் அடையாளங்களுக்கு மாற்றான - ஒன்றுபட்ட இரஷ்யாவை, ஒற்றைத் தேசியத்தை ஆதரித்த போதும், ஆரிய - பார்ப்பன - இந்து மத இழிவுகளின் அழிப்பே அதற்கு அடிப்படையாக இருந்தது.*

**‘தேசம்’, ‘தேசியம்’ ஆதரவு**

*உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்க்கிறார். அந்தக் கருத்தையே மறுக்கிறார். அதேசமயம். ‘இந்திய தேசம்’ என்பது, பல்வேறு தேசிய இனங்களை - பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்டு - அந்த இணைப்பு பார்ப்பன ஆதிக்கத்திற்குக் கருவியாக இருப்பதால் அதையும் எதிர்க்கிறார். ‘தேசம்’ என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்று வினவி, தான் எதிர்த்த அதே தேசம், தேசியக் கருத்துக்களுக்கு ஆதரவான நிலையையும் எடுத்துள்ளார்.*

“மதராஸ் ஒரு ‘நேஷன்’ அல்லவென்றும் அது தனித்து இருக்க முடியாது என்றும் தோழர் கே.பி.பிள்ளை சொன்னார். மதராஸ் ஒரு தனி நேஷனாய் இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் ‘திராவிடம்’. அதனுடைய நாகரிகம் ஆச்சார, அனுஷ்டானம் வேறு. வங்காளம், பம்பாய் வேறு. இங்கிலீஷ் ஆட்சியால் இங்கிலீஷ் பாஷையால்தான் ஒன்றுக்கொன்று நேச பாவமான அறிமுகமாவது ஆகி இருக்கிறது. இங்கிலீஷ் ஆட்சியும் பாஷையும் ஒழிந்து ஹிந்தி ஆட்சியும் பாஷையும் வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இட்டாலி, பிரஞ்சு முதலிய ஏதோ ஒரு நேஷனுடன் கலந்துவிடும்.

- தோழர் பெரியார், குடி அரசு - 26.09.1937

“இந்தியா ஒரு ‘நேஷன்’ என்று சொல்வதைவிட, ‘திராவிடநாடு’ ஒரு ‘நேஷன்’, ஆந்திரநாடு ஒரு நேஷன், வங்காளநாடு ஒரு **‘நேஷன்’** என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு தனிக்கலை, தனிமொழி, தனி நாகரிகம், தனி ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருஷங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் சாற்றுகிற தென்பதை யாராலும் மறைக்க முடியாது.

52 வித்தியாசமான ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு ‘நேஷன்’ என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்து கொண்டு, **ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை சவாரி செய்யலாம் என்றால்,** இதை யார் ஒப்புக் கொள்வார்கள் என்று கேட்கிறோம்.

- குடி அரசு - தலையங்கம் - 28.01.1940

*‘தேசம்’ என்பதை ஆதரித்த போதும், இன்றைய தமிழ்த்தேசியர்கள் பேசுவது போலக் கறாராக - தேசிய இன வரையறைகளை வைத்துக்கொண்டு, மொழி அடிப்படையிலான தேசிய இன விடுதலையைப் பெரியார் முன்வைக்கவில்லை. ஆரியப் பண்பாட்டு எதிர்ப்பு - பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்ற அடிப்படையில், ‘திராவிடம்’ என்ற பெயரில் தான், தேசம், தேசியம் இவற்றை ஆதரிக்கிறார்.*

**‘சுயநிர்ணய உரிமை’ ஆதரவு - எதிர்ப்பு**

*பார்ப்பன ஆனந்தவிகடன், கல்கி கிருஷ்ண மூர்த்தி, டி.டி.கிருஷ்ணமாச்சாரிகளும் இப்பார்ப் பனக் கும்பலால் தமிழ்த்தேசியத் தலைவர்களாக் கப்பட்ட சிலரும் 1947 இல் தான் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசத் தொடங்கினர். அதையும் 6 ஆண்டு களுக்குள் சுருட்டி வைத்துவிட்டு அமைதியாகி விட்டனர். தமிழ்நாட்டு அரசியலில் ‘சுயநிர்ணய உரிமை’ என்ற முறையிலான விடுதலைக்கும் பெரியாரே முதல் குரல் கொடுத்தார். 1940 லேயே சுயநிர்ணயஉரிமை என்ற பெயரில் போரைத் தொடங்கினார்.*

“உண்மையிலேயே தமிழ்மகன் சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருந்தால் தன்னைப் பார்ப்பனியத்துக்கு அடிமைப்படுத்தித் தன்னை தாசிமகன், வேசிமகன், சூத்திரன் என்று அழைத்துக் கொள்ள வெட்கப்படாமலிருப்பானா என்று

கேட்கிறோம். இந்த இழிதன்மை, மானங்கெட்ட வாழ்வு ஒழிய வேண்டுமானால் தமிழனுக்கு சுய நிர்ணய உரிமையிருத்தல் வேண்டும் என்பது நன்கு விளங்கும்.

அதுபோலவே, தமிழ்நாடும், பிற நாடுகளுக்கு அதாவது ஆங்கிலேய நாடுகளுக்கு அடிமை யாயிருப்பது போய் வடநாடுகளுக்கு அடிமையாய் இருத்தலில் இருந்து விடுபட வேண்டுமானால் **தமிழ்நாட்டுக்கு சுய நிர்ணய உரிமையிருத்தல்** வேண்டும் என்பது பளிச்சென்று விளங்கும்"

–தோழர் பெரியார், குடிஅரசு – 11.02.1940

*இந்தச் சுயநிர்ணய உரிமை என்ற பெயரிலும் கூட, தேசம், தேசிய இனவிடுதலை என்பவற்றைப் பெரியார் அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆரிய, பார்ப்பன, இந்து மத இழிவுகளை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். அந்தச் சுயநிர்ணய உரிமை என்ற பெயரிலேயே பார்ப்பன ஆதிக்க முயற்சிகள் தொடங்கியவுடன், அந்தச் சுயநிர்ணயஉரிமையையும் எதிர்க்கிறார். அந்த எதிர்ப்பும் ஆரிய -பார்ப்பன - இந்துமத எதிர்ப் பையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.*

"இப்போது பார்ப்பனர்கள்தான் 'தமிழ்நாடு தமிழருக்கே', 'தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப் படுதல் வேண்டும்' என்றெல்லாம் பேசுகிறார்கள். எந்த அடிப்படையில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் எழுப்பப்பட்டதோ அந்த அடிப்படையைப் பார்ப்பனர்கள் தகர்த்துவிட்டனர். "நாங்களும் தமிழ் பேசுகின்றோம். ஆகையால், நாங்களும் தமிழர்களே என்று கூறத் தலைப்பட்டனர். இங்ஙனம் கூறுவதன் மூலம் இப்போது அவர்கள் எல்லாத்துறைகளையும் கைப்பற்றப் பார்க்கிறார்கள். எனவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒற்றுமையைக் குலைக்கும் என்று வம்பளக்கும் பார்ப்பனர்கள், தனியாக ஒரு மாகாணம் திராவிட நாட்டிற்குள் தோன்றுமானால், அங்கேயும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்துவர். அப்போது தமிழர்கள் இப்போதுள்ள இழிநிலையிலும், கேடுகெட்ட நிலைக்கு வந்து சேர நேரும்."

– விடுதலை, 26.04.1947

## திராவிட தேசியம்

*பெரியார் மீதும், அவர் பேசிய திராவிடம் மீதும் பார்ப்பனர்களும், பல பார்ப்பன அடிமைத் தலைவர்களும், தமிழ்த்தேசியத் தோழர்களும் வைக்கும் பொதுவான குற்றச்சாட்டு என்னவெனில், "பெரியார் திராவிடத்தை ஆதரித்தார். அதனால் தான் காவிரி, முல்லைப்பெரியாறு நதிநீர்ச்சிக்கல்கள் வந்துள்ளன" என்பது தான்.*

*அதற்கு நாம் பதில் தரும்போது 'திராவிடம்' என்பதை நான்கு மாநிலங்களை அடிப்படையாக வைத்துப் பெரியார் பேசவில்லை. "திராவிடம் என்பது ஒரு ஆரிய - பார்ப்பன - இந்து எதிர்ப்புக் கருத்தியல்" என்று கூறுகிறோம். அந்தப் பொருளில் நானும் பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். திராவிடம் என்பது ஆரிய எதிர்ப்புக் கருத்தியல் என்பது உண்மைதான். அதேநேரம் பெரியார் "நான்கு மாநில ஒருங்கிணைப்பின் அடிப்படையில் திராவிட தேசியம்" என்ற நிலைப்பாட்டையும் முன்னெடுத்தார். உண்மைதான். அதை நாம் மறுக்கவோ - மறைக்கவோ வேண்டியதில்லை.*

*ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, ஒரிசா ஆகிய மாநிலங்களின் பெரும்பகுதிகள் இணைந்தது தான் சென்னை மாகாணம். சென்னை மாகாணத்தோடு இணையாத - தனி சமஸ்தானங் களும் திராவிட நாட்டுப் பகுதிகள்தான் என்றும் பெரியார் எழுதியுள்ளார். பெரியார் தனது திராவிட நாட்டின் எல்லையாக வரையறுத்த சென்னை மாகாண எல்லைக்குள்தான் கபினி, கிருஷ்ண ராஜசாகர், ஹேரங்கி, பெரியாறு அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் இருந்தன. அந்த திராவிடநாட்டுக்குத்தான் பெரியார் போராடினார்.*

*அதை எதிர்த்துத் "தனித்தமிழ் அரசு" என்ற அடிப்படையில் இன்றைய மொழிவாரிமாகாணத் தமிழ்நாட்டைப் போராடிப் பெற்றவர்கள் மா.பொ.சி போன்ற தமிழ்த்தேசியர்கள் தான். நதிநீர்ச் சிக்கல்களுக்கு பெரியாரின் திராவிடநாடு முழக்கம் காரணமல்ல. மா.பொ.சி.யும் பார்ப்பனர்களும் கூட்டணி அமைத்துக் கோரிய தனித்தமிழ்அரசு தான் முழுமையான காரணம். ( இது தனி விவாதம். பிறகு விரிவாகப் பார்ப்போம்.)*

## திராவிடர் கூட்டமைப்பு

*1939 இல் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் "திராவிடநாடு திராவிடருக்கே" என்று மாறுகிறது. தென்மாநிலங்கள் நான்கும் இணைந்தது தான் 'திராவிட நாடு' என்றும், "மொழிவாரி மாகாணங்களின் கூட்டமைப்பு" என்ற முறையிலும் அதை அறிவிக்கிறார். அதேசமயம் மிகக் கவனமாக 'திராவிடர்' என்ற அடையாளத்தில் பார்ப்பனர் களைத் தவிர்த்து, மற்ற அனைத்து மக்களையும் ஒன்று சேர்க்கிறார்.*

*தமிழ்நாடு தமிழருக்கே என்ற போது எந்த அடிப்படையில் தனிநாடு கோரினாரோ, அதே அடிப்படையில் தான், திராவிட நாடு பிரிவினையையும் முன்னெடுத்தார். ஜாதி ஒழிப்பு, இந்து மத ஒழிப்பு, ஆரியப்பண்பாட்டு அழிப்பு என்பவையே இதற்கும் அடிப்படையாக இருந்தன.*

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலாகிய மொழிகளைத் தாய்மொழியாகப் பேசிவந்த மக்களையே மிகுதியாகக் கொண்ட நாடுகள் – இன்று திராவிடம் என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததேயாகும். அந்தத் திராவிடம் என்பது பெரிதும் சென்னை மாகாணமாகவே இருக்கிறதுடன் மற்றும் சிறிது சென்னை மாகாணத்தைத் தொட்ட சுற்றுப்புற நாடாகவும் இருக்கிறது.

இந்த விஸ்தீரணத்துக்குட்பட்ட முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர் களும் ஆகிய எல்லோரும் திராவிடர் என்ற தலைப்பின் கீழ் வருவார்கள்.

...திராவிட நாட்டில் பல மொழிகள் இருக்கின்றனவே என்றால், இப்போது காங்கிரசு தீர்மானித்து இருப்பதை அடிப்படையாகக் கொண்டே, திராவிட தேசம் என்பது - அவசியப்பட்டால் திராவிட மொழி வாரியான மாகாணங்களைக் கொண்டதாக இருக்கும்."

-தோழர் பெரியார், குடி அரசு, 26.11.1939

"இந்நாட்டைப் பொறுத்தமட்டில், அதாவது தமிழ் நாட்டின் விடுதலையில், திராவிட நாட்டின் விடுதலையில், அக்கறையுடைய ஒவ்வொருவரும், இன்றே ஆரிய மதமாகிய இந்து மதத்திலிருந்த முதலில் விடுதலை பெற வேண்டும். 'அதற்காக நான் பாடுபடுவேன்" என ஒவ்வொரு வரும் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும். இந்து மதத்திலிருந்து விடுதலை பெறுவதுதான் ஆரிய ஆதிக்கத்திலிருந்து, ஆரிய சூழ்ச்சியிலிருந்து, ஆரியத் தளையிலிருந்து விடுதலை பெறுவதாகும். தமிழர்களே! அந்நன்நாளை எதிர்பார்த்து ஆவன செய்யுங்கள்".

-தோழர் பெரியார், குடிஅரசு - 07.01..1940

**பார்ப்பன - தமிழ்த்தேசியக்கூட்டு**

*பார்ப்பனர்களை விலக்கி, இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களான நான்கு மாநில மக்கள் மற்றும் இஸ்லாமியர், கிறிஸ்தவர் அனைவரையும் ஒரே இனமாகக் கொண்ட திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் பெரியார் போராடுகிறார். அதன் விளைவாகத் தங்களது ஆதிக்கத்திற்கு ஆபத்து வரும் என்பதை உணர்ந்த பார்ப்பனர்கள், மா.பொ.சி போன்ற தமிழ்த்தேசியர்களைத் தலைவர்களாக்கி, 'சுயநிர்ணயஉரிமை' என்ற பெயரில் பார்ப்பன ஆதரவுத் தனித்தமிழ்நாட்டை முன்மொழிகின்றனர். ஒட்டுமொத்த இந்திய அரசுக்குக் கட்டுப்பட்ட தனிநாடாக அதை உருவாக்க முயன்றனர். ம.பொ.சி எழுதுகிறார்,*

"சுயாட்சிபெற்ற இந்திய மாகாணங்கள் அனைத்தும் கொண்ட ஓர் ஐக்கிய சர்க்காரின் அவசியத்தை எனது நூலில் வலியுறுத்தியுள்ளேன். தேசீயவாதி என்ற முறையில் மட்டுமல்ல; தமிழன் என்ற உணர்ச்சியோடு பார்த்தாலும்கூட இந்திய சமஷ்டியில் தமிழ்நாடு தனது நன்மைக்காகவேனும் இணைய வேண்டியது அவசியம் என்றே நான் கருதுகின்றேன்".

*- ம.பொ.சி.யின் தமிழ்முரசு ஏடு, செப்டம்பர் 1946*

*இந்தியாவுக்கும், பார்ப்பனர்களுக்கும் கட்டுப் பட்ட அந்த சுயநிர்ணயஉரிமைத் தீர்மானம் 14.01.1947 இல் நிறைவேறியது. கல்கி இரா.கிருஷ்ணமூர்த்தி, டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகிய இரண்டு பார்ப்ப னர்கள் உட்பட சில வெள்ளாளப் பிள்ளை மார்களும், காமராசரும் இணைந்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினர். தமிழ்நாட்டில் அப்போது மிகவும் செல்வாக்குப் பெற்ற பார்ப்பன - பனியா ஊடகங்களான தினமணி, ஆனந்தவிகடன், கல்கி அனைத்துமே பார்ப்பன - தமிழ்த்தேசியர் கூட்டணி முன்மொழிந்த சுயநிர்ணய உரிமையை வரவேற்றன.*

*"சுதந்திர சோசலிசத் தமிழரசு" என்ற பெயரில் அந்தப் பார்ப்பனத் தமிழ்நாடு பிரபலமாக்கப் பட்டது. தமிழ்நாட்டு அரசியலில், பார்ப்பன எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட தனி நாடு என்பதற்குப் பதிலாக - வெறும் 'மொழி' அடிப் படையிலான, 'தேசியஇனம்' அடிப்படையிலான தமிழ்த் தேசிய விடுதலை வளர்த்தெடுக்கப்பட்டது. அந்தப் பார்ப்பன ஆதிக்கத்துக்குச் சாதகமான - தேசிய இன அடிப்படையிலான தனிநாட்டு முயற்சியைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.*

"தமிழ்நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்பது, தமிழ்அரசு, தமிழர்ஆட்சி, தமிழ் மாகாணம் என்று பேசப்படுவன எல்லாம் நம்முடைய சக்தியைக் குலைப்பதற்காகவும், குறைப்பதற்காகவும் செய்யப் படுகின்ற காரியங்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும்."

- விடுதலை 11.04.1947

"மொழிவாரி மாகாணங்கள் பிரிவதிலுள்ள கேட்டையும் விபரீதத்தையும் முன்னரே பலதடவை எடுத்துக்காட்டியுள்ளோம். மீண்டும் கூறகிறோம்..... மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் தமிழர் மட்டும் கலந்து கொள்ளக்கூடாது."

- விடுதலை 21.04.1947

**'திராவிடர்' நலனே 'திராவிடதேசியம்'**

*வெறும் மொழியின் அடிப்படையிலும், தேசிய இனம் என்ற அடிப்படையிலும் ஒரு நாட்டைப் பிரிப்பது என்பதைத் தமிழ்நாட்டில் பார்ப்பனர்களும், வெள்ளாளப் பிள்ளைமார்களும் தொடங்கி வைத்தனர். பொதுவாகப் பெரியார் தொண்டர்கள் இந்த வகையான பார்ப்பன எதிர்ப்பற்ற நாட்டுப் பிரிவினை முயற்சிகள் தோழர் அண்ணா காலத்தில்தான் தொடங்கின என்று பயிற்சி வகுப்புகளில் பேசியுள்ளனர். அது சரியான வரலாறு அல்ல. பெரியாரின் தனிநாட்டு முயற்சிகளில் 'திராவிடர் கூட்டமைப்பு' என்ன பொருளில் இடம்பெற்றதோ, அதே பொருளில் தான் அண்ணாவும் 'திராவிட நாட்டைப்' பேசியுள்ளார். (அண்ணாவின் கட்டுரை தனியே இடம் பெற்றுள்ளது)*

*பெரியார் முன்மொழிந்த 'திராவிட தேசியம்' முற்றிலும் பார்ப்பன - பார்ப்பனிய ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது என்பதை அவரது வரிகளிலேயே பார்ப்போம்.*

"தாழ்ந்த ஜாதியான் மேலான ஜாதியானின் தொழிலைச் செய்தால் அவனுடைய பொருள் முழுமையும் பிடுங்கிக் கொண்டு அவனையும் நாட்டை விட்டு அரசன் உடனே விரட்டிவிட வேண்டும். (அத்.10 சு,96)

சூத்திரன் எவ்வளவு தகுதியுடையவனாயினும் தன் ஜீவியத்திக்கு அதிமாக பொருள் சம்மாதிக்கக் கூடாது. அப்படிச் சம்பாதித்தால் அது பிராமணனுக்கு இம்சையாக நேரும் (அத் 10 சு 129)

சூத்திரனுக்கு யாகாதி கர்மங்கள் சம்பந்தமில்லை. ஆதலால் அவன் வீட்டிலுள்ள செல்வத்தை பிராமணன் தாராளமாக வலுவினாலும் கொள்ளலாம். (அத் 11 சு 13)

அசுரர்கள் என்பது சூத்திரர்களைத்தான் என்பதற்கு ஆதாரம், மனு தர்ம சாஸ்த்திரத்தில் 11 ஆம் அத்தியாயம் 20 சுலோகத்தில் காணப்படுகிறது. அதாவது யாகம் செய்யாதவர்கள் அசுரர்கள் ஶி அவர்கள் பொருளைக் கவ்வுவது தர்மமாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிடர்கள் சூத்திரர்கள், சூத்திரர்களுக்கு யாகாதி காரியங்களுக்குள் உரிமையில்லை. யாகம் செய்யா தவர்கள் அசுரர்கள். இந்த மாதிரி குறிப்புகள் மனுதர்ம சாஸ்திரத்தில் இருக்குமானால் மனுதர்ம சாஸ்த்திரமே இந்து மதத்திற்கேற்பட்ட தர்மமானால் திராவிடர்கள் இந்துக்களானால் திராவிடர்களின் நிலை என்ன என்பதைப் பொது மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமாய் விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட இழிவுகளேற்பட்ட தன்மை திராவிட சமுதாயத்திற்கே இருக்கக்கூடாதென்றும், அவை எப்படியாவது ஒழிக்கப்பட்டே ஆகவேண்டு மென்றும் அதற்கு முக்கிய எல்லையான திராவிட நாட்டை (சென்னை மாகாணத்தை) பரப்பாக வைத்து அதிலுள்ளவர்களை திராவிடர்களாகக் கருதி நடத்தப்படும் திராவிடர்கழக திராவிடநாடு எழுச்சிக்கு தமிழ்நாடு, ஆந்திரநாடு, கேரளநாடு, கர்நாடக நாடு என்பதான கிளர்ச்சிகளை இந்த முக்கியக் குறிப்பில்லாமல் குறுக்கே போட்டு **மொழியைப் பிரதானமாக வைத்துக் கொண்டு போராடுவதென்றால் மனுதர்ம சாஸ்திரத்தை மெய்ப்படுத்துகிறோம் என்பதல்லாமல் அதில் வேறு தன்மை என்ன** இருக்கிறதாகக் காணமுடியும்.

- குடி அரசு-கட்டுரை-20.09.1947

“தோழர்களே, நமது கழகம் ஒன்றுதான் இன்று இந்நாட்டில் உண்மைத் தேசிய இயக்கம். எனவேதான், இத்தேசத்திய பழங்குடி மக்களான திராவிடர்களின் முன்னேற்றம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு பாடுபட்டு வருகிறது. திராவிடர்களின் நலத்திற்காகவே திராவிடநாடு பிரிவினையும் கோரிவருகிறது. **திராவிடர் இனநலத்திற்குப் பாடுபடுவதுதான் திராவிட தேசியமாகும்.** பார்ப்பன இன நலத்துக்குப் பாடுபடுவது பார்ப்பன - ஆரிய - இந்து தேசியமாகும்.” - விடுதலை, 21.02.1950

“அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சோஷலிஸ்ட் குடியாட்சியில் பாதுகாக்கப் படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழிக்காரர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது. ஆனால், மொழி ஒன்றை மட்டுமே குறிக்கோளாக வைத்துக்கொண்டு, ‘தனி ராஜ்ஜியம்’ என்ற பெயரால் ஆட்சி நடத்திக் கொண்டு, அரிசிக்கும் நூலுக்கும், சட்டத்துக்கும், பணத்துக்கும் டில்லி ஆட்சியிடம் மடியேந்தி நிற்கின்ற தன்மையினால் யாருக்கு என்ன லாபம்? தமிழிலோ, தெலுங்கிலோ, கன்னடத்திலோ, மலையாளத்திலோ ஆட்சி நிர்வாகம் நடைபெற்று விட்டதனாலேயே உழைப்பாளியின் வயிறு நிறைந்துவிடுமா? குஜராத்தியும், மார்வாரியும் தமிழில் பேசித்தானே உழைப்பாளியின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்? ஏன்? தமிழில் பேசித்தான் தமிழ்நாட்டு முதலாளிகள் தமிழ்நாட்டு உழைப் பாளிகளைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக் கிறார்கள்?”

- விடுதலை 23.04.1952

### தனிநாட்டைவிட ஜாதிஒழிப்பே முக்கியம்

தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே என்று தொடர்சியான பரப்பு ரைகள், போராட்டங்களை நடத்தினார். இந்துமகா சபாவோடு பொதுச்செயல்திட்டம், இஸ்லாமியர் களோடு பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை என்றெல்லாம் பல்வேறு வடிவங்களில் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், பார்ப்பனர்கள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த்தேசியம், தேசிய இனம் போன்ற போதைகளை ஏற்றி, ம.பொ.சி போன்றவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். ஒருகட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். ஜாதி ஒழிப்பே முக்கியம் என்றார்.

“திராவிடநாடு பெறாவிட்டாலுஞ்சரி; பார்ப்ப னீயத்தை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித் துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; ஜாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றி கரமாகச் செய்து முடித்தாலும்கூடப் போதும். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் இலட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த ஜாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது.”

-விடுதலை, 28.08.1952

அரசியல் சூழல் மாறுகிறது. இந்தியா முழுவதும் மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டன. பெரியார் அறிவித்த திராவிடநாட்டு எல்லையானது கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு எனத் தனித்தனியாகப் பிரிந்துவிட்டன. உடனே எந்தத் தயக்கமும் இல்லாமல் மீண்டும் “தமிழ்நாடு தமிழருக்கே” என்று போராட்டத்தைத் தொடர்ந்தார்.

பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய் விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால் - சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது.

என்ன காரணம் என்றால், ஒன்று - கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இன சுயமரியா தையோ, பகுத்தறிவு உணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும் பாலோருக்குக் கிடையாது. மத மூடநம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள். இரண்டு - அவர்கள் இருவரும்

**மத்திய ஆட்சி என்னும் வடவர் ஆட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாக இருப்பது பற்றியும் அவர்களுக்குச் சிறிதும் கவலை இல்லை.**

**- தோழர் பெரியார், விடுதலை' 12.10.55**

*மற்ற மாநிலங்கள் பிரிந்த பிறகு, "தனித்தமிழ்நாடு" என்ற நிலை எடுத்தபோதும், அதற்கும் முதல் காரணமாகப் பெரியார் கூறுவது, மற்ற மாநிலத்தவருக்கு இந்துமத இழிவு குறித்த அக்கறை இல்லை என்பதுதான். இந்தக் காலத்தில், தானே வலிந்து, மிக வலுவாகப் பரப்புரை செய்த திராவிட நாடு கூட்டமைப்பைத் தானே எதிர்க்கத் தொடங்கினார்.*

**திராவிடக் கூட்டமைப்புக்கு எதிர்ப்பு**

"இப்போது திராவிடநாடுதான், மற்ற நாலு நாடுகளும் சேர்ந்ததுதான் வேண்டும் என்ற உணர்ச்சி உண்டா? ஏற்பட்டிருக்கிறதா? என்பது ஒருபுறம் இருக்கட்டும். அப்படியே திராவிடநாடு பிரிந்தால் நமக்கு என்ன லாபம்? இன்று எப்படி தமிழ் நாடு, பார்லிமெண்ட்டில் மற்ற 14 நாட்டுக்கும் அடிமை யாக இருக்கிறதோ, அதேபோல் நாளை மற்ற 3 நாடுகளுக்கும் அடிமை யாகத்தான் இருக்க வேண்டி வரும்.

தமிழ்நாடு 3 கோடி ஜனத்தொகை மலையாளி 1.25 கோடி கன்னடியன், 2 கோடி ஆந்திரக்காரன் 3.5 கோடி இவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன நிலை? அவர்கள் 6.75 கோடி; தமிழன் 3 கோடி; நாம் மற்றவர்களுக்கு மைனாரிட்டியாகத்தானே இருப்போம்?

அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து பார்லிமெண்ட் மெம்பர்கள் 87 பேர்கள். நம் தமிழ்நாட்டிற்கு 41 பேர்கள்தான். அதே மாதிரி சட்டசபை மெம்பர்கள், அவர்கள் மூன்று பேரும் சேர்ந்தால் சுமார் 600 பேர்கள். நமக்கு 207 தான்.

மற்றபடி கடவுள், மத சாஸ்திர இழிவு ஒழிப்பு உணர்ச்சியோ, இந்தியை எதிர்க்கும் உணர்ச்சியோ அந்த நாட்டுக்காரர்களுக்குக் கிடையாது. அப்புறம் எதற்காக ஒரே ராஜ்யம்? எதற்காகக் கூட்டு வேணும்?"

- தோழர் பெரியார், விடுதலை 24.05.1960

*'திராவிடநாடு கூட்டமைப்பை' ஆதரித்து அறிவித்த போதும், 'திராவிடர்' என்ற இனத்திற்கான வரையறையில் பார்ப்பனர்களைச் சேர்க்க வில்லை. ஆரிய ஆதிக்கத்திற்கு எதிராகவே 'திராவிட மொழிவாரி மாகாணக் கூட்டமைப்பை' அறிவித்தார். திராவிட நாடு கூட்டமைப்பை எதிர்த்த போதும் ஆரிய -பார்ப்பன- இந்து மதத்திலிருந்து விடுதலைபெறுவதை அடிப்படையாகக் கொண்டே 'திராவிட நாடு கூட்டமைப்பை' எதிர்க்கிறார்.*

**இனத்தூய்மைவாதம்**

*மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. அதன் பிறகு "திராவிட நாடு கூட்டமைப்பு" என்பதைப் பேசவில்லை. மீண்டும் தனித்தமிழ்நாடு போராட்டங்களைத் தொடங்கினார். தனித் தமிழ்நாடு என்றாலும், இன்றைய தமிழ்த்தேசியர் களைப் போல இனத்தூய்மைவாதத்தை அடிப் படையாகக் கொள்ளவில்லை.*

**"இந்த நாட்டை நான் தான் ஆளணும்; நாங்கள் தான் ஆளணும் என்று நான் சொல்லவில்லை. எவன் ஆண்டாலும் சரி, இந்த நாட்டு மக்களை மனிதனாக மதிக்க வேண்டும். அதற்குப் பாடுபடவேண்டும். பாடுபட இடமளிக்க வேண்டும். இந்த இலட்சியத்தை முன்வைத்து யார் பாடுபட்டாலும், இதை எங்கெல்லாம் நான் கண்டாலும், அதற்கெல்லாம் நான் வலியப் போகிறவன், ஆதரிக்கிறவன்."**

**- சுதந்திரத் தமிழ்நாடு மாநாட்டு உரை, விடுதலை.27.01.1959**

**உத்திரப்பிரதேசம் நீங்கிய தேசப்பட எரிப்பு**

*தனித்தமிழ்நாடு கோரி இந்திய தேசப்பட எரிப்புப் போராட்டத்தை அறிவிக்கிறார். அதற்கான அறிவிப்பில்,*

**"ஜாதி ஒழியவேண்டுமானால், அதற்கு மதம் இடம் தரவில்லை. பார்ப்பான் இடம் தரவில்லை. சட்டம் இடம்தரவில்லையானால், இவற்றிலிருந் தெல்லாம் பிரிந்துகொள்வது தானே?"**

**- இந்திய யூனியன் பட எரிப்பு அறிக்கை, விடுதலை 20.12.1958**

*என்று கூறுகிறார். தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உத்திரப்பிரதேச மாநிலத்தில் 1959 ஆம் ஆண்டு ஒரு பிரச்சாரப்பயணத்தை மேற்கொண்டார் பெரியார். உ.பி மாநிலம் கான்பூரில் நடைபெற்ற விழா ஒன்றில்,*

**"இந்த ஆட்சியில் நாம் இருந்துகொண்டு சாதியை ஒழிக்க முடியாது...எனவே இந்திய தேசப்படத்தில் தமிழ்நாட்டை மட்டும் கத்தரித்து எடுத்துவிட்டு மற்ற பாகத்தை நெருப்பு வைத்து எரிப்பது என்று தீர்மானித்து உள்ளோம். இப்படி எரிப்பதன் மூலம் உங்களின் உ.பி.யும் கூடத்தான் சேர்த்து எரிக்கப்படும். இதனால் மற்ற நாட்டை வெறுத்து எரிப்பது என்பதாகாது. நீங்களும் கூட சாதி ஒழிப்பிற்காக - பார்ப்பனர்களின் ஆதிக்க ஒழிப்பிற்காக நேரு ஆட்சியிலிருந்து விடுபட உங்கள் உத்திரப்பிரதேசத்தை மட்டும் கத்தரித்து எடுத்து விட்டு பாக்கிப் பகுதிகளைக் கொளுத்தலாம்."**

**- விடுதலை21.02.1959**

*என்றார். சாதி என்பது தமிழ்நாட்டில் மட்டும் ஆதிக்கம் செலுத்தவில்லை. இந்து மதம் உள்ள அனைத்து நாடுகளிலும் ஆதிக்கக் கருத்தியலாக இருக்கிறது. அதனால், உ.பி.யில் ஜாதி ஒழிப்புப் பிரச்சாரம் நடத்திய போதும், அவர்களது ஜாதி இழிவு ஒழிய, அவர்களும் இந்தியப் படத்தைக் கொளுத்த வேண்டும் என்றார்.*

**தனிநாடு அவசியமில்லை**

*இந்தியாவில் பிரிவினைவாதத் தடைச் சட்டம் வந்த பிறகு, அதுவரை திராவிடநாடு கோரி வந்த தி.மு.க அந்தக் கோரிக்கையைக் கைவிட்டது. கோரிகைக்கான காரணங்கள் அப்படியே உள்ளன என்று மட்டும் பேசி வந்தது. பெரியாரும் தனது தனிநாட்டு முயற்சியில் தீவிரத்தைக் காட்டவில்லை. அதற்கான காரணத்தை அவரே விடுதலையில் "நாட்டுப் பிரிவினை" என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.*

“திராவிடர்கழகத்தில் திராவிடநாட்டுப் பிரிவினை ஒரு கொள்கையாய் இருந்தாலும், காமராஜர் காங்கிரஸ் தலைவரானவுடன், சமதர்மம் - சோசலிசம் காங்கிரசின் கொள்கையாக ஆக்கப்பட்டு விட்டதால், அது தக்கபடி அமலுக்கு வந்தால், திராவிடநாடு பிரச்சனை அவசியமாக இருக்காது - அல்லது கூடாததாய் இருக்காது - என்று கருதி அதிகமாய்ப் பிரஸ்தாபிக்காமல் இருந்தோம்.”

- விடுதலை 30.03.1967

*காமராசர் ஆட்சி நீடித்தால் ஜாதி ஒழிப்பு, சமதர்ம வேலைத்திட்டங்களை நிறைவேற்றி விடலாம் என்று கருதி, தனது தனிநாட்டுக் கோரிக்கையை அதிகமாகப் பேசவில்லை என்பதை அவரே ஒப்புக் கொள்கிறார். 1965 - 1967 இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் காரணமாக காங்கிரசு தோற்று, தி.மு.க ஆட்சிக்கு வந்தது. இடையில் சில மாதங்கள் மட்டும் தனித்திருந்து தனித்தமிழ்நாடு முழக்கம் மீண்டும் கொளுந்துவிட்டு எரியத் தொடங்கியது.*

“வகுப்புநீதிக்காகவும், வகுப்புரிமைக்காகவும் தமிழர் சுயமரியாதைக்காகவும் தமிழ்நாடு, இந்திய யூனியனில் இருந்து பிரிந்து, சுதந்திரத் தமிழ்நாடாக வேண்டியது அவசியமாகும். 1968 ஏப்ரல் 14 ஆம் நாளை டில்லி ஆதிக்கக் கண்டனநாளை சுதந்திர எழுச்சிநாளாகக் கொண்டாடுங்கள்.”

*என்று அறிக்கை வெளியிட்டார். தமிழ்நாடு பிரிவினைக்காக சென்னை, பெரியார் திடலில் 1968 ஏப்ரல் 14 ஆம் நாளில் டெல்லி ஆதிக்கக் கண்டன நாளை நடத்திக்காட்டினார்.*

### கீழ்வெண்மணிக்குத் தீர்வாகத் தனித்தமிழ்நாடு

*இந்தச் சூழலில்தான், உலக அளவில் தமிழ் நாட்டை வெட்கித் தலைகுனிய வைத்த கீழ்வெண் மணிப் படுகொலைகள் நடந்தன. நாயுடுக்களின் ஜாதி ஆணவத்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் குழந்தை குட்டிகளோடு, ஆண், பெண் அனைவரும் உயிரோடு கொளுத்தப்பட்டனர். அப்போது பெரியார், கடுமை யாக எதிர்வினை ஆற்றவில்லை என்ற குற்றச் சாட்டைப் பலரும் கூறிவருகின்றனர். ஆனால், பெரியார், கீழ்வெண்மணிப் படுகொலைகள் நடக்காமல் இருக்க, இந்தநாடு ஜனநாயகத் திலிருந்து மன்னராட்சியாக மாறவேண்டும் அல்லது அந்நியர்கள் ஆட்சி ஏதாவது வரவேண்டும் என்கிறார். முக்கியமாக, தனித்தமிழ்நாடு உருவாக வேண்டும் என்றார்.*

“இந்தியாவை ஆள இந்தியருக்குத் தகுதியில்லை. இது ஜனநாயகத்தால், ஏற்பட்ட மிகப்பெரிய கேடாகும். எத்தனையோ வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று, இன்று கீழ்வெண்மணி போன்ற நடுங்கத்தக்க அக்கிரமம்வரை கொண்டுவந்து விட்டது. நம்முடைய நாடு மீண்டும் அரசநாயகமாகப் போகவேண்டும் அல்லது தனித்தமிழ்நாடு பிரித்துத் தர வேண்டும். அல்லது அந்நிய ஆட்சி வேறு ஏதாவது வரவேண்டும். தேசபக்தி என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம்

- தோழர் பெரியார், விடுதலை 28.12.1968

*கீழ்வெண்மணிப் படுகொலைகளுக்கு எதிராகத் தனித்தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்த பெரியார், அந்த அறிக்கைக்குப் பிறகு, தனது இறுதிக்காலம் வரை, மரண சாசனமாக இறுதி உரை ஆற்றிய நாள்வரை “ஜாதி ஒழிப்புக்காகவே தனித்தமிழ்நாடு” என்ற தனது தொடக்கக் கால நிலைப்பாட்டில் மாறாமல் இருந்தார்.*

### இனஇழிவு ஒழியவே தனிநாடு

“நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் பிரச்னை எப்படி இருந்தாலும், சமுதாயப் பிரச்னையில் நாம் இன்று இருக்கும் இழிதன்மையில் இருந்து, அதாவது சூத்திரனாக, தாசி மகனாக நம் தாய்மார்கள் தாசிகளாக சட்டப்படி, சாத்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சிக் காமல் நாம் இருக்க முடியுமா ?

இந்தியாவில் நாம் இருக்கும் வரை இந்துவாகத்தான் இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே, முஸ்லீம், கிறிஸ்துவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர் தாசிமக்கள் தான் என்று இருப்பதால், ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க கருதுபவர்களாவார்கள். ஆதலால் நாம் உடனடியாக விடுதலை அதாவது இந்தியக் கூட்டாச்சியிலிருந்து விலகி சுதந்திரத் தமிழ் நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடு பட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம்”.

- தோழர் பெரியார், 95 வது பிறந்தநாள் மலர் 17.09.1973

தமிழர்களே! பிரிவினைக்காகப் பிரிவினை கேட்கவில்லை. நான் சூத்திரன், தாசிமகன் என்ற இழிவுநீங்கப் பிரிவினை தவிர வேறு வழிஎன்ன?

- விடுதலை, பெட்டிச்செய்தி 30.10.1973

### பிரிவினை என்பது ஒரு கருவியே

*இறுதிக்காலம் வரை தனிநாடு கோரினார். ஆனால், எந்த நிலையிலும், தேசிய இனவிடுதலை அடிப்படையிலோ, வெறும் மொழி அடிப் படையிலோ, தனிநாடு உருவானால் போதும், அதன் பிறகு எல்லாப் புரட்சியும் ஏற்பட்டுவிடும் என்ற அடிப்படையிலோ நாடு கேட்கவில்லை.*

*1958 ஆம் ஆண்டில் இருந்து இறுதிவரை, தனது பல உரைகளில் 1957 ஆம் சட்ட எரிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி, அப்படி ஒரு பெரும் போராட்டம் நடத்திய பிறகும் அரசியல் சட்டத்திலிருந்து ‘இந்து லா’ வை ஒழிக்க முடியவில்லை. சாதியை ஒழிக்க முடியவில்லை. எனவே பிரிவினை கேட்கிறோம். “நாடு பிரிக்க வேண்டும் என்பதற்காக பிரிவினை கேட்கவில்லை” என்பதை ஏராளமான அறிக்கைகளிலும், உரைகளிலும் விளக்கியுள்ளார். ஒன்றிரண்டை மட்டும் பதிவு செய்கிறேன்.*

நானேகூடப் பிரிவினை கேட்கவில்லையே. எங்கள் மீதுள்ள இழிவு நீக்கப்படவில்லையானால், பிரிந்து போவது தவிர வேறு வழியில்லை என்றுதான் சொல்லுகிறோம்.

- விடுதலை 15.11.1973

இந்திராகாந்தி அம்மையார், மக்கள் நாட்டுப் பிரிவினை கேட்கக்கூடாது. இந்தியக் குடிமகனாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய் இருந்தால், இந்திய ஆட்சியில் பிராமணன் இல்லை, சூத்திரன் இல்லை, பார்ப்பானின் தாசிமகன் இல்லை. எல்லாக் குடிமக்களும் சமஅந்தஸ்து உள்ள சகோதரத் தன்மை உள்ள மக்கள் ஆவார்கள் என்று சட்டம் செய்யட்டும். ஜனாதிபதியைக் கொண்டு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யட்டும். அப்படி இல்லா விட்டால் பிரிவினைதான். பிரிவினை தான். பிரிவினை தான். முக்காலும் முடிவு ஆக வேண்டியது ஆகும். நான் இன்று பிரிவினை கேட்கவில்லை. கேட்கிறேன் என்றால் நிபந்தனை இல்லாமல் கேட்கவில்லை.

- விடுதலை, 23.11.1973

நாங்கள் பிரிவினைக்காகப் போராடுவது போலவும், பிரிவினைக்காகக் கிளர்ச்சி மேற்கொள்ளுவதாகவும் மத்திய ஆட்சி பொய்யாகக் காரணம் கற்பித்துப் பிரச்சாரம் செய்து வருகின்றது. நாம் நம்மீது புகுத்தப் பட்டுள்ள இழிவு - சட்டத்தில் நிலைத்து உள்ளதை மாற்று, எங்களை மனிதத் தன்மையுள்ள மக்களாக வாழவிடு என்றுதான் கேட்கிறோம்.

அப்படி மாற்ற இஷ்டம் இல்லை என்றால் நீ ( மத்திய ஆட்சி) எங்கள் நாட்டைவிட்டு வெளியேறு; நாங்கள் எங்கள் நாட்டை ஆண்டு கொள்கிறோம். எங்கள் இழிவு, குறைபாடுகளைப் போக்கிக் கொள்கிறோம் என்றுதான் கூறகின்றோம்.

- விடுதலை 14.12.1973

நாம் எல்லோரும் இன்றைய தினம் ஈனசாதியாய், சூத்திரர்களாய், பார்ப்பானின் தாசி மக்களாக இருக்கிறோம். இது எதில் இருக்கின்றது என்றால், சாத்திரங்களில் மட்டுமல்ல; சட்டத்தில் உள்ளது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் உள்ளது. இதனை ஒழிக்க முயற்சி எடுத்துக்கொண்டு உள்ளோம் என்றால், முயற்சி என்றால், என்ன பண்ணியாவது ஒழிக்க வேண்டும் என்கின்ற முடிவில் இறங்கியுள்ளோம். நமது இழிவுக்குப் பரிகாரம் கிடைக்காவிட்டால், இந்திய ஆட்சியில் இருந்து நாம் விலகியாக வேண்டும்.

- விடுதலை 17.12.1973

தோழர் பெரியாரின் இறுதிச் சொற்பொழிவு 19.12.1973 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. அந்த உரை மரணசாசனமாக வெளியிடப் பட்டுள்ளது. ஒலிவடிவிலும் கிடைக்கிறது. அதிலும் ஜாதி ஒழிப்பையே முதன்மையாக அறிவிக்கிறார். ஜாதி ஒழிப்புக்காகவே தனிநாடு என்பதையும் தெளிவாக விளக்குகிறார்.

### ஆரிய - பார்ப்பன - இந்துமத அழிவே இலக்கு

பெரியார், தான் வாழ்ந்த காலத்தில் நிலவிய அனைத்து அரசியல், பொருளாதாரச் சூழல் களையும், சர்வதேச அரசியல் போக்குகளையும் தனது ஆரிய - பார்ப்பன - இந்துமத ஒழிப்புக் கொள்கைக்குச் சாதகமாக மாற்றிப் போராடி யுள்ளனர். ஒவ்வொரு மாற்றத்தையும் கருவிகளாகப் பயன்படுத்தியுள்ளார். கருவிகள் எதிர்பார்த்த பலனை அளிக்காத போது, எவ்விதத் தயக்கமும் இன்றி அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, அடுத்த கருவியைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

“தமிழ்நாடு தமிழருக்கே” என்பதைத் தொடங் கினார். பின்பு எதிர்த்தார். இறுதிக்காலத்தில் மீண்டும் தொடங்கினார். சுயநிர்ணய உரிமை என்பதற்கு முதற்குரல் எழுப்பினார். பின்பு எதிர்த்தார். “தேசம், தேசிய இனம்” ஆகிய கருத்தியல்களை எதிர்த்தார். பின்பு ஆதரித்தார். மீண்டும் எதிர்த்தார். அகில இந்திய அளவில் திராவிடஸ்தான் கோரினார். அதற்காக வேலைத் திட்டங்களைத் தீட்டினார். இந்து மகாசபை யோடுகூட கூட்டுச் சேர்ந்தார். அதே திராவிடஸ் தானுக்காக ஜின்னாவோடும், முஸ்லீம் லீக் உடனும் கூட்டணி ஏற்படுத்தினார்.

நாடு பிரிக்கும் வேலைகளில் தொய்வு ஏற்பட்ட போது, பிற்படுத்தப்பட்டோரும் இனஇழிவு நீங்க இஸ்லாமுக்கு மாறுங்கள் என்று முழங்கினார். அகில இந்திய திராவிட நாட்டைக் கட்டிஎழுப்ப முயற்சித்தார். பிறகு அதை எதிர்த்தார். திராவிட தேசியத்தை முன்னெடுத்தார். திராவிட நாடு கூட்டமைப்பை முன்னெடுத்தார். பிறகு இவை இரண்டையுமே எதிர்த்தார். இறுதிக்காலங்களில் மீண்டும் தனித்தமிழ்நாட்டுக்காகப் போராடினார்.

இப்படி எவ்வளவோ மாற்றமான - முரண்பாடான - எதிர் எதிர் நிலைப்பாடுகளை எடுத்தார். ஆனால், எல்லா மாற்றங்களிலும், எல்லா முரண்பட்ட நிலைகளிலும் ஒரே அடிப்படையைக் கொண்டிருந்தார். பார்ப்பன ஆதிக்கம், பார்ப்பனிய ஆதிக்கம், இவற்றுக்குக் காரணமான இந்து மதம், இந்து மதத்தைக் காப்பாற்றும் கடவுள், வேதங்கள், சாஸ்திரங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தையும் அடியோடு ஒழிக்க வேண்டும். இதுதான் பெரியாரின் அடிப்படைக் கொள்கை - இது ஒன்றுதான் பெரியாரின் அடையாளம் - பெரியாரின் உயிர்மூச்சு.

தனித்தமிழ்நாடு, திராவிட நாடு, சுயநிர்ணய உரிமை, திராவிடஸ்தான், அகில இந்திய திராவிடஸ் தான், திராவிடர் கூட்டமைப்பு எல்லாமே பெரியாரின் அடிப்படைக் கொள்கையைச் செயல் படுத்தப் பயன்படுத்தப்பட்ட கருவிகள். எதிர் காலத்தில் இதே கருவிகள் மீண்டும் பயன்படலாம் அல்லது புதிய கருவிகள் தோன்றலாம்.

### தமிழ்த்தேசிய - தற்சார்பு முயற்சிகள்

இந்தியாவில், பிரிவினைவாதத் தடைக்குப் பிறகு, பெரியாரைத் தவிர வேறு எவரும் தனித் தமிழ்நாடு என்பதை மக்கள் விடுதலை என்ற நோக்கில் முன்னெடுக்கவில்லை. அதாவது, பார்ப்பன அதிகாரத்தையும் - பார்ப்பனிய சமுதாய அதிகாரங்களையும் எதிர்த்து, அதிலிருந்து விடுதலை பெறுவதை முதன்மையாக வைத்து எவரும் தனித் தமிழ்நாடு கோரிக்கையை முன்னெடுக்கவில்லை. பயிற்சி வகுப்புகளிலும், அரங்கக்கூட்டங்களிலும் திராவிடர் இயக்கங்களின் தலைவர்கள் பெரியாரின்

*தனித்தமிழ்நாடு குறித்துப் பேசினாலும், அதற்கான வேலைத் திட்டம் எதுவும் எந்தத் திராவிடர் இயக்கத்திலும் இல்லை.*

*அப்படி அதற்கான வேலைத்திட்டங்களைத் தீட்டினால், பெரியாரின் அடிப்படைக் கொள்கை யான ஜாதி, மத ஒழிப்புக்கருத்தைப் பேசுவதற்கேகூட ஆள் இல்லாத நிலைவந்துவிடலாம். இந்த நிலையில் 1936 ஆம் ஆண்டு பொதுவுடைமைக்கொள்கைக்குத் தடைவிதிக்கப்பட்ட போது, பெரியார் எடுத்த நிலைப்பாட்டைத் தான் இன்று அனைத்து திராவிடர் இயக்கங்களும் மேற்கொண்டுள்ளன.*

...சர்க்காரார் பொதுவுடைமைக் கொள்கைகள் சட்ட விரோதமானது என்று தீர்மானித்து நமது சுயமரியாதை இயக்கத்தையே அடக்கி ஒடுக்கி ஒழித்துவிட வேண்டும் என்று கருதி இருக்கிறார்கள் என்று உணர்ந்த பிறகும், அதனால் பல கஷ்ட நஷ்டம், தொல்லை ஆகியவை ஏற்பட்ட பிறகும், காங்கிரஸ்காரர்கள் சர்க்கார் அடக்குமுறைக்கு முகம் கொடுக்க முடியாமல் அவர்கள் பின்னடைந்து விட்டதைப் பார்த்தும், நம்முடைய தோழர்கள் சிலர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாலும், பலர் வெறும் வேஷ விளம்பரத்துக்கு அடிமைப் பட்டுவிட்டார்கள் என்பதை உணர்ந்ததாலும் எனக்கு புத்திசாலித்தனமாக சில காரியம் செய்யவேண்டியதாக ஏற்பட்டு விட்டது. அதுதான் பொதுவுடமைப் பிரசாரத்தை நிறுத்திக்கொள்ள வேண்டியது என்பதாக ஆகிவிட்டது. அப்படி இல்லாமல் இருந்தால் சுயமரியாதை இயக்கம்கூட மறைந்து போயிருக்கும். இந்தப் பிரசாரம்கூட செய்ய முடியாமல் போயிருக்கும்.

...நம் சுயமரியாதை இயக்கத்தின் இப்போதைய வேலையைக்கூட அரசாங்கத்தார் சட்டவிரோதம் என்று சொன்னால் அப்போது என்ன செய்வது என்று கேட்கிறார்கள். இதற்கு நான் தாமதமில்லாமலும் வெட்கமில்லாமலும் உடனே பதில் சொல்லுகிறேன். என்ன பதில் என்றால் உடனே இயக்கத்தை நிறுத்திவிட்டு பிறகு மேல்கொண்டு என்ன செய்வது என்று நம்பிக்கையுள்ள தோழர்களுடனும் பொறுப் புள்ள தோழர்களுடனும் கலந்து யோசிப்பேன். ஒன்றுமே செய்ய முடியாமல் போனால் அப்போது ஜெயிலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டு சுகமனுபவிப்பேன், வீரப்பட்டமும் பெறுவேன்.

**சிறிது வேலை செய்ய இடமிருந்தாலும் “புகழை”யும் “வீரப்”பட்டத்தையும் தியாகம் செய்து விட்டு பயங்காளி, கோழை, அடிமை என்கின்ற பட்டங்களை மகிழ்ச்சியோடு வரவேற்று தலையில் சுமந்து கொண்டாவது வேலை செய்வேனே ஒழிய வீண் வீம்புக்கும் போலி விளம்பரத்துக்கும் இரையாக மாட்டேன்.**

...ஆரம்பத்தில் மேல் ஜாதி, கீழ் ஜாதி கூடாதென்று சு.ம. இயக்கம் ஆரம்பித்தோம். அதற்கு அநுகூல மாகவே ஏழை பணக்காரத்தன்மை கூடாதென்றோம். அதைத்தான் நாம் சமதர்மம், பொதுவுடைமை என்றோம். சர்க்கார் பொதுவுடமை கூடாதென்றால் விட்டு விட்டு மேல் ஜாதி கீழ் ஜாதி கூடாதென்கின்ற **வேலை செய்வதில் என்ன தடை இருக்கிறது. மற்றும் மூடப்பழக்க வழக்கம் ஒழித்தல், மதத் தொல்லை ஒழித்தல் முதலிய காரியம் செய்வதற்கு மார்க்க மில்லாமல் போகவில்லை.**

- குடி அரசு - 29.03.1936

*எனவே இந்தச் சூழலில், தனித்தமிழ்நாடு தான் பெரியாரின் கொள்கை. அதற்காகப் போராடாத இயக்கங்கள் பெரியாருக்குத் துரோகம் செய்கின்றன என்று யாராவது கூறினால், திராவிடர் இயக்கங் களின் தோழர்கள் கோபப்பட வேண்டியதில்லை. இந்து மதத்தையும், அது உருவாக்கியுள்ள ஜாதி, ஆணாதிக்கப் பண்பாடு, பழக்க வழக்கங்களை ஒழிக்கச் சிறிது இடமிருந்தாலும், அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்கே நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.*

*தமிழ்த்தேசிய இனவிடுதலை, தற்சார்புத் தமிழ்நாடு, தமிழ்த்தேசியத் தற்சார்பு, தேசிய சுயநிர்ணயம், தமிழ்த்தேசியத் தன்னுரிமை போன்ற பலவகையான வார்த்தை விளையாட்டுக்களை அண்மைக் காலமாகப் பார்த்து வருகிறோம். அந்த வகையான வார்த்தை விளையாட்டுக்கள் எவற்றுக்கும் நாம் எதிரிகள் அல்ல. சொற்சிலம்பம் ஆடுவதை விட்டுவிட்டு அவர்கள் யாராவது செயலில் இறங்கி, தனித்தமிழ்நாடு என்று வெளிப் படையாக அறிவித்துப் போராடினால், நாம் வரவேற்போம்.*

*இந்தச் சொற்சிலம்பம் ஆடுபவர்கள் முன்னெடுக்கும் தேசியஇன அடிப்படையிலான தனிநாட்டைப் பெரியார் கோரவில்லை. இது போன்ற தேசியஇன விடுதலையைத்தான் 1946 இல் ம.பொ.சி. யை முன்வைத்துப் பார்ப்பன டி.டி.கிருஷ்ணமாச்சாரி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, ஆனந்த விகடன்கள் முன்னெடுத்தன. பெரியாரியலை ஒழிக்கப் பார்ப்பனர்கள் திட்ட மிட்ட அந்த முயற்சியில், ம.பொ.சி. அவர்கள் பார்ப்பன எதிர்ப்பும் பேச வைக்கப்பட்டார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியாரை எதிர்த்து மட்டும் அல்ல; பெரியாரை ஆதரித்தும் பெரியாரியலை அழிக்கத் துணிவார்கள் என்பதைத்தான் வரலாறு நமக்குப் புரியவைக்கிறது. திராவிடர் இயக்கங்களின் தோழர்கள் அந்த வரலாறுகளைக் கவனமாகப் படியுங்கள்.*

சான்றுகள்:
‘குடி அரசு’ தொகுப்புக்கள்,
திராவிடர் கழக வெளியீடுகளான
‘வடநாட்டில் பெரியார்’, ‘பெரியார் களஞ்சியம்.6,
தமிழ்க்குடியரசுப் பதிப்பக வெளியீடான, கவிஞர்
கருணானந்தம் எழுதிய
‘தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு’
விடியல் பதிப்பக வெளியீடான,
‘பெரியார் இன்றும், என்றும்’,
தோழர் எஸ்.வி.இராஜதுரை - வ.கீதா எழுதிய,
‘பெரியார் சுயமரியாதை சமதர்மம்’,
‘பெரியார் ஆகஸ்ட் 15’, ‘மரபும் திரிபும்’
ஆகிய நூல்கள்.



# பறவைகள் நம் எச்சரிக்கை மணிகள்..!

வெ.கிருபாநந்தினி

இயற்கை சுற்றுச்சூழல் பிரச்சனைகள் என்பது நம் தமிழ் நாட்டில் தற்போது நடந்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இயற்கை என்ற பொதுவான வார்த்தை நீர், நிலம், மண், கல் காற்று போன்ற உயிரற்ற பொருட்களும் தாவரங்கள் மற்றும் அமீபா தொடங்கி உணவுச் சங்கிலியின் மிக உயர்ந்த இடத்திலிருக்கும் பகுத்தறிவைக்கொண்டுள்ள மனிதர்கள் வரை அடங்கும்.

தற்போதைய சூழலில் மற்ற உயிரினங்களைப் பற்றிப் பேசினாலே "மனிதர்களுக்கே உத்திரவாதம் இல்ல, செத்துப்போனாக்கூட கண்டுக்கறதில்ல இதுல மத்த உயிரனத்தப்பத்தி எனக்கென்ன?" என்கின்றனர். எலி, வாத்து, மயில், காகம், கிளி, கழுகு, பறுந்து, மாடு, யானை, புலி, சிங்கம் போன்ற உணவுச் சங்கிலியின் அனைத்து நிலையிலிருக்கும் உயிரினங் களையும் கடவுள்களாக வைத்திருக்கும் அதே சமூகம், இயற்கையை வழிபட ஆரம்பித்த கற்காலத்தில் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தனர். ஆனால் காலப்போக்கில் இயற்கையை முற்றிலும் அழித்துவிட்டு, கோயில்களில் மட்டும் கற்சிலை களாக வைத்திருக்கின்றனர்.

இதற்கு காரணம் இயற்கையைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்துகொள்ளாமல் அல்லது தெரிந்தும் நமக்கென்ன என்று இருப்பதும் தான். இதன் விளைவாகத்தான் தற்போது நாம் அனுபவித்து வரும் பாதிப்புகள். இதுபோன்ற பாதிப்புகளை முன்கூட்டியே தெரிந்து கொள்ளவும் அதற்கான தீர்வைக் கண்டறியவும் ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. அறிவியல் பூர்வமாக பிரச்சனைகளையும் அப்பிரச்சனைகளுக்கான தீர்வையும் கண்டறியாமல் இருந்தால் எதிர் காலத்தில் இதைவிட பல மடங்கு பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

இதனால் சாலிம் அலி பறவைகள் மற்றும் இயற்கை வரலாறு ஆய்வு மையம் "சுற்றுச்சூழல் மாசுபாட்டினைச் சுற்றுச்சூழல் கூறுகளில் குறிப்பாக பறவைகளில் மேற்பார்வை மற்றும் கண்காணிப் பிற்கான தேசிய மையம் அமைத்தல்"("National centre for surveillance and monitoring of environmental contaminants in ecosystem special focus on birds in India") என்ற திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் கால நிலை மாற்றம் துறையின் நிதியுதவி யுடன் தொடங்கியுள்ளது.

காரணம், பறவைகள் உயிர்க்குறிப்பானாகச் செயல்படுகின்றன. ஏனென்றால் அனைத்து வகை யான இடங்களிலும் (நீர், கடல், ஆறு, குளம், குட்டை, நிலம்- அடர்ந்த மலைக்காடுகள், காடுகள், விவசாய நிலங்கள், கிராமங்கள், நகரங்கள்) வாழ்ந்து அனைத்து வகையான உணவுகளை உண்டும் வாழ்கின்றன.

1.தேனுரிசான்,
2.தானிய உண்ணி
3.பழ உண்ணி
4.பூச்சி உண்ணி
5.மீன் உண்ணி
6.உயிருள்ள விலங்குகளை வேட்டையாடுபவை
7.இறந்த உயிரினங்களை உட்கொள்பவை.

இப்படி உணவுச்சங்கிலியின் அனைத்து நிலையிலும் உள்ள ஒரே உயிரினம் பறவைகள் மட்டுமே. மேலும் இதனால் சுற்றுச்சூழல் மாறுபாடுகளுக்கு உடனடியாக செயல்பட்டு நமக்கு எச்சரிக்கை அளிக்கும்.

ஆகையால் இந்தியா முழுவதும் இறந்த பறவைகளை ஆய்வுக்குட்படுத்தி, சுற்றுச்சூழலில் உள்ள பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வைச் செயல்படுத்த உள்ளோம். இதை ஆராய்ச்சியாளர்கள் வேலை என்று ஒதுங்கிவிடாமல் பொது மக்களும் கவனிக்க வேண்டும். இதற்கு நீங்கள் யாரும் மெனக்கெட்டு நட்டப்பட்டு எதையும் செய்ய வேண்டியதில்லை. உங்களது அன்றாட வாழ்க்கை முறையைக் கூட மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை.

நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளை எப்போதும் போல் ஏனோதானோ வென்று கடந்து போகாமல் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்தாலே போதும். உதாரணத்திற்கு நம்ம ஊர்க் குளத்தில் (குளம் இருந்தால் ?) ஏன் தண்ணீர் திடீர் என்று நிறம் மாறியது? மீன்கள் எல்லாம் செத்து மிதக்குதாமே ஏன்? காற்றில் ஏதோ வேண்டாத நெடி வருதே, என்ன அது? நேற்று வரைக்கும் நம்ம வீட்டு மொட்டைமாடியில் வந்து உட்கார்ந்து போகும் மைனா போன்ற ஒரு பறவை எங்க ஒரு வாரமா காணமே? இப்படி ஏற்படுகின்ற திடீர் மாற்றங்களைக் கவனிக்கலாம்.

அல்லது நாம போற, வர்ற வழிகளில் ஏதேனும் ஒரு பறவை பறக்க முடியாம அல்லது நோய் தாக்கப்பட்டு அல்லது இறந்து கிடந்தாலோ அதை அலட்சியமாகக் கருதாதீர்கள், சமந்தப்பட்ட பறவையைப் பற்றி எங்களுக்குத் தகவல் சொல்லுங்கள். அதான் கையில் ஆண்டிராய்டு போன் இருக்கே ஒரு சூட், நெட்ட ஆன் பண்ணி, வாட்ச் அப்லயோ, முகநூல் வழியாகவோ இதை ஒரு தகவலாகப் பதிவு செய்யுங்கள்.

ப்ளீஸ் ப்ளீஸ் னு எத்தனையோ செய்திகளை தேவை இருக்கோ இல்லையோ குழுக்களில் பகிர்கிறோம். அதைவிட முக்கியமானது இது. எங்க ஆராய்ச்சிக்குழு இல்லேனா, வேற குழுக்களில் தொடர்ந்து பகிரலாம் அல்லது எங்களைத் தொடர்பு கொண்டு சொல்லலாம்.

கொஞ்சம் கூடுதலான அக்கறையும் சுற்றுச் சூழல் ஆர்வமும் இருக்கிற நண்பர்கள், ஏதோ ஒரு பறவை பாதிக்கப்பட்டிருந்தா, இறந்து கிடந்தா அது எங்கே? எப்போ? இறந்தது என்கிற தகவலோடு அந்தப் பறவையை எடுத்து, ஒரு தெர்மாக்கோல் பெட்டியில் குளிரூட்டப்பட்ட ஜெல்பேக் வைத்து எங்கள் முகவரிக்கு அனுப்புங்கள். (அந்த செலவுத் தொகையை உங்களுக்கு அனுப்பி விடுவோம்)

ஒரு காக்கா, குருவி இல்லே பேரு தெரியாத ஏதோ ஒரு பறவை இறந்து போச்சேன்னு எதுக்கு இவ்வளவு கவலைப்படணும்னு நீங்க தெரிஞ்சு கிட்டீங்கனா, இதோட முக்கியத்துவம் என்னான்னு புரிஞ்சுக்குவீங்க.

கருமேகம் கூடுனா, மயில் தோகை விரிச்சா மழை வரும்னு நமக்கு தெரியும் தானே? இப்படித் தான் பறவைகள் திடீரென்று பாதிக்கப்பட்டால் அடுத்ததாக அந்தப்பகுதியில் மனிதருக்கு ஏதோ ஆபத்து வரப் போகுதுனு அர்த்தம். நமக்கு வர்ற அபாயத்தை முன் கூட்டியே அறிவிக்கும் பறவைகளோட வாழ்நிலையை நாம் கவனிக்கத் தவறினால் நமக்குத்தானே ஆபத்து.

நாய் குரைப்பதை அலட்சியப்படுத்தினால் திருட்டுக் கொடுக்க வேண்டும். பறவைகள் இறப்பை அலட்சியப்படுத்தினால் பேராபத்து வரும்போது நம்மைக் காக்க வழி தெரியாமல் தடுமாற வேண்டும். ஆதலால் மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் இருந்தால் கீழே உள்ள மற்றும் தொலைபேசி எண்ணிற்கோ அல்லது அஞ்சல் முகவரிக்கோ தொடர்பு கொள்ளுங்கள்.

Dr.S.Muralidharan,
Senior Principal Scientist.
Division of Ecotoxicology,
Salim Ali Centre for Ornithology and Natural History (SACON),
Anaikatty, Coimbatore - 641 108.
Telephone- 0422-2203100, 124, 125 and 126.
**வெ.கிருபாநந்தினி - 9488753659**
**வே.பாக்கியசிரி - 9487802211**
**காசா மோய்தின் - 7200110168**

*நிகழ்காலச் சூழலை கவனிப்போம்!*
*எதிர்காலச் சூழலை காப்போம்!*

## இராமன் உடைத்த செங்கொடி

**அ.ப.சிவா**

வலதுக்கும்
இடதுக்கும் இடையே அழுத்தமாய்
இலட்சுமணன் இட்ட கோடு..
வலது
கோட்டை தாண்டி
மாய மானைத் தேடி
புராண ஆராய்ச்சியில்..

செங்கொடியின்
கம்பொன்று
வில்லாகி
உடைக்கப்பட்டிருந்தது
இராமனால் ..



முனைவர் பூ.மணிமாறன்

## சௌபாவின் மரணம் தரும் படிப்பினைகள்: 2

## குழந்தை வளர்ப்பில் நாம் அறிய வேண்டிய சில

# உளவியல் கூறுகள்

**மன அழுத்தம் என்றால் என்ன?**

பெரும்பாலும் மனஅழுத்தம் என்றாலே அது மனதுக்கும், உடலுக்கும் ஒவ்வாத விசயங்களாலேயே ஏற்படும் என்று பலர் நம்புகின்றனர். அது தவறு. Eustress எனப்படும் மன அழுத்தமானது திருமணம், குழந்தை பிறப்பு, வேலை மாற்றம் என வாழ்வில் நல்ல தருணங்களில் ஏற்படக் கூடியது. Distress என்பது நெருங்கியவரின் மரணம்? வேலை இழப்பு? காதல் தோல்வி எனப் பல விரும்பத்தகாத சம்பவங்களால் ஏற்படுவது. இக்காலத்தில் ஆரோக்கிய வாழ்வுக்குப் பெரிய சவாலாக இருக்கும் மன அழுத்தம்? நம் உயிரைக் காப்பாற்றவே உருவானது எனச் சொன்னால் ஆச்சரியமாக இருக்கும் தானே?

ஆதிகாலத்தில், மனிதன் காட்டில் நடமாடும் போது. ஒரு புலி அவன் முன் திடீரெனத் தோன்றினால், அவன் அதனை எதிர்த்துப் போரிட வேண்டும் அல்லது ஓட வேண்டும். ஆபத்திலிருந்து காப்பாற்ற நம்மைத் தயார் நிலையில் வைப்பதற்காக உடலில் சில ரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. நம் நரம்பு மண்டலம் புலியைப் பார்த்தவுடனேயே? பலவித மான ஹார்மோன்களை (Adrenaline - Cortisol) சுரக்கச் செய்கிறது. இவை அவசர நடவடிக்கை எடுக்க வசதியாக மனிதனுக்குள் சில மாற்றங்களைச் செய்கின்றன.

இதயத்துடிப்பு அதிகரிக்கும்
தசைகள் இறுகும்
இரத்த அழுத்தம் அதிகரிக்கும்
மூச்சு இரைக்கும்
புலன்கள் கூர்மையாகும்

உடல் ரீதியான இந்த மாற்றங்கள் நம்முடைய வலிமையையும் சகிப்புத் தன்மையையும் கூட்டி, கவனத்தை அதிகரிக்கச் செய்து, ஆபத்திலிருந்து காப்பாற்றும். மன அழுத்தத்தினால் ஏற்படும் இவ் வகை மாற்றங்கள் உடலுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து (Physical threats மிருகங்கள் , திருடர்களின் தாக்குதல், இயற்கைப் பேரழிவு, விபத்து போன்ற நிகழ்வுகள்) ஒரு மனிதனைக் காப்பாற்றவே செயல் படுகின்றன. புலியிடமிருந்து தப்பித்தவுடன் மன அழுத்தம் குறைந்து, உடல் பழைய நிலைக்குத் திரும்பிவிடும்.

இன்றைய காலகட்டத்திலோ நம் உயிருக்கு ஏற்படும் இவ்வகை அச்சுறுத்தல்கள் குறைந்து நவீனகால பிரச்சனைகளான பணத்தேவை, தேர்வு, நச்சரிக்கும் கணவன், மனைவி, வேலைப்பளு, அலுவலகப் பிரச்சனை, பிடிக்காத திருமணம், வேலை போன்றவை அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. பல நேரங்களில் உளவியல் அச்சுறுத்தல்களை (Psychological threats) ஏற்படுத்தும்

காரணிகளை விட்டு ஒருவரால் தப்பிக்க இயலாது (திருமணம், தேர்வு போன்றவை )

இப்படி அன்றாடம் ஏற்படும் உளவியல் அச்சுறுத்தல்களால்? மன அழுத்த ஹார்மோன்கள் தொடர்ந்து சுரந்து கொண்டிருக்கும் நிர்பந்தம் ஏற்படுகிறது. இப்படி தொடர்ந்து ரசாயனம் மற்றும் நரம்பியல் மாற்றங்களால் பல்வேறு உடல் பாகங்கள் சேதம் அடைகின்றன. இது இன்னும் பல மோசமான விளைவுகளை உடலுக்கும் மனதுக்கும் ஏற்படுத்தும்.

ஏன் இவ்வளவு மன அழுத்தம் உங்களுக்கு? இப்படி யாரைக் கேட்டாலும்? பல வெளிக் காரணி களைப் பட்டியல் இடுவார்கள். உண்மையில், பல நேரங்களில் வெளிக்காரணங்களால் மட்டுமே மன அழுத்தம் ஏற்படுவதில்லை. ஒருவர் தமக்குத் தாமே அதிக அளவில் மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொள்வதும் உண்டு. எப்படி?

உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் குறுகிய கால மன அழுத்தமானது (மிருகம், திருடன் தாக்குதல், இயற்கைச் சீற்றம்) எல்லா மனிதனுக்குமே ஒரே மாதிரி தாக்கத்தையே ஏற்படுத்தும். இதர வகைக் காரணங்களால் ஏற்படும் மன அழுத்தங்கள் எல்லா மனிதனையும் ஒரே விதமாகத் தாக்குவதில்லை. ஒருவருக்கு அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தும் சம்பவம், காரணி, மற்றொருவருக்குச் சிறிய தாக்கத்தைக் கூட ஏற்படுத்தாமல் இருக்கலாம். சிலர் சிறிய பிரச்சனைக்கே மனம் தளர்ந்து போய் விடுவார்கள். சிலரோ, பெரிய பிரச்சனைகளைச் சந்தித்தாலும் அதனை மன உறுதியோடு எதிர் கொண்டு மீண்டு வருவார்கள். பிரச்சனை ஒன்றே என்றாலும், அதனை எதிர்கொள்பவரின் மனநிலைக் கேற்ப அதன் விளைவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

**சீர்குலைக்கும் மனநிலைக் கோளாறு (disruptive mood dysregulation disorder)**

குழந்தை மற்றும் டீனேஜரைப் பாதிக்கும் மனச்சோர்வுக் கோளாறுகளில் ஒன்றான சீர்குலைக்கும் மனநிலைக் கோளாறு (DMDD) பற்றி அலசுவோம்.

எல்லாக் குழந்தைகளுமே, தனக்குப் பிடித்த வாறு விசயங்கள் நடக்கவில்லையெனில், சண்டித் தனம் செய்வது வழக்கமே. பெரும்பாலான குழந்தைகள் கோபம், வருத்தம் போன்ற மோசமான எதிர்மறை மன நிலையுடன் காணப்படுவதும் சகஜமே. அதுவே அடிக்கடி, கடுமையாக விரும்பத் தகாத அளவில் எரிச்சல் மற்றும் கோபத்தை வெளிக் காட்டினால், அது அவர்களது பள்ளி, குடும்ப வாழ்க்கையை பாதிக்கக்கூடும்.

தொடர்ந்து எரிச்சல் மனநிலையிலேயே இருப்பது மற்றும் அடிக்கடி, கடுமையாகவும் பெருங் கோபத்துடனும் சுய கட்டுப்பாட்டை மீறி செயல் படும் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு இக்கோளாறு இருக்கும். இக்குழந்தைகளுக்குத் தங்கள் உணர்ச்சி களைக் கட்டுபாட்டில் வைத்திருப்பது மிகவும் கடினமான விசயம். சிறு வயதிலிருந்தே, தொடர்ந்து எரிச்சல், கோபம் கொள்ளும் குழந்தைகளுக்கு DMDD தாக்கும் அபாயம் அதிகம். DMDD பாதிக்கப்பட்ட குழந்தைகள் எதிர்காலத்தில் மனச்சோர்வு மற்றும் பதற்றக் கோளாறுகளுக்கு உள்ளாகும் வாய்ப்புகளும் அதிகம். பொதுவாக பெண்களை விட இது ஆண் களைத் தான் பாதிக்கிறது.

**இதன் அறிகுறிகள்:**

1. சின்ன விசயத்துக்குக் கோபம் கொண்டு சத்தம் போடுவது, மற்றவருக்கோ அவர்கள் பொருட்களுக்கோ தீங்கு செய்வது.
2. இவர்களின் கோபத்தின் வெளிப்பாட்டுக்கும் அவர்கள் வயதுக்கும் சம்பந்தமே இருக்காது. அதாவது, சின்னக் குழந்தை அழுது அடம் பிடிப்பது அதன் வயதுக்கு உரிய செயலே. வளர்ந்த பின்னரும் அப்படி நடந்துகொண்டால், அது இயல்பற்றதாகி விடுகிறது.
3. சராசரியாக வாரம் மூன்று அல்லது அதற்கும் அதிகமாக, இவர்கள் நிதானமின்றி நடந்து கொள்கிறார்கள்.
4. கோப வெளிப்பாடு இல்லாத நேரங்களிலும், இவர்கள் தொடர்ந்து எரிச்சல், கோபத்துடனே தினந்தோறும் காணப்படுவார்கள். இவர்களின் இந்த மனநிலை, பெற்றோர், ஆசிரியர் மற்றும் நண்பர்களுக்கும் வெளிப்படையாக தெரிந் திருக்கும்.

இந்த எல்லா அறிகுறிகளும் ஒரு வருடத் துக்கும் மேலே காணப்பட்டு, இடையில் குறைந்த பட்சம் 3 மாதம் இடைவெளியின்றி அறிகுறிகள் தொடர்ந்து இருந்து கொண்டேயிருந்தால்தான் அது சீர்குலைக்கும் மனநிலைக் கோளாறு என நிர்ணயிக்கப்படும்.

இத்தகைய அறிகுறிகள், ஒரு குறிப்பிட்ட சூழலில் மட்டும் வெளிப்படையாகத் தெரிவதோடு, வீடு நண்பர்கள் மற்றும் பள்ளி போன்ற பலதரப் பட்ட சூழல்களுள், குறைந்தபட்சம் இருவேறு சூழல்களிலும் காணப்படுகிறது. ஏதேனும் ஒரு சூழலிலாவது மிகவும் கடுமையாக வெளிப்பட வேண்டும். பெற்றோரிடத்தில் மட்டுமே இவ்வறி குறிகள் காணப்பட்டால், அது (DMDD) ஆகாது.

இக்கோளாறு 6 வயதுக்கு மேல் 18 வயதுக் குள்தான் கண்டறியப்படுகிறது. ஆட்டிசக் கோளாறு கள் (Autism) பிரிவு குறித்த பதற்றக்கோளாறு (Separation Anxiety Disorders) தொடர்ந்திருக்கும் மனச் சோர்வு (Dysthymia) அதிர்ச்சிகரமான மன அழுத்த நோய் (Trauma and stress related disorders) கோளாறுகள் ஏற்படுத்தும் அறிகுறிகளிலிருந்து DMDD வேறுபட்டு இருக்கும். தீவிர மனச்சோர்வு நோய் ஏற்படுத்தும் அத்தியாயங்களின்போது மட்டுமே இவ்வறிகுறிகள் காணப்பட்டால் அது DMDDஆக இருக்காது.

**கண்டறிவது எப்படி?**

நடத்தைக் கோளாறுகளான இணக்கமற்ற நடத்தைக் கோளாறு (ODD), இடைவிட்டு வெடிக்கும் கோளாறு (Intermittent Explosive Disorder - IED) மற்றும் உணர்ச்சிக் கோளாறான ‘பைப்போலார் கோளாறு’ போன்ற மனநலப் பிரச்சனைகள், DMDD உடன் சேர்த்து ஒருவருக்கு இருக்க வாய்ப்பில்லை.

கோபம், எரிச்சல் முக்கியமாகக் காணப்படும் இடைவிட்டு வெடிக்கும் கோளாறுக்கும் (IED) DMDD க்கும் பல வித்தியாசங்கள் உண்டு. IED உளத்தூண்டல் கட்டுப்பாடு கோளாறுகள் (Disruptive Impulse control disorders) வகையைச் சேர்ந்த நடத்தை சார்ந்த கோளாறு.

இவர்கள் மன உளைச்சல் தரும் சூழ்நிலையில் மட்டுமே, அதீத ஆத்திரம் காட்டுவார்கள். ஆனால், DMDD மனநிலை, உணர்ச்சி சார்ந்த கோளாறு என்பதால், எப்போதும் எரிச்சல், கோபத்துடன் காணப்படுவார்கள்.ஏற்கனவே பார்த்த கோளாறான, இணக்கமற்ற நடத்தைக் கோளாறின் (Oppositional defiant Disorder- ODD) அறிகுறிகளும், பாதிக்கப் பட்டவரிடையே காணப்பட்டால், அவர்களுக்கு DMDD மட்டுமே உள்ளதென அர்த்தம்.

DMDD கோளாறு உள்ள குழந்தைகளுக்கு மேனியா, ஹைப்போமேனியா அறிகுறிகளான, அதீதப் புத்துணர்ச்சி, அதிகத் தற்பெருமைப் பேச்சு, உளப் போராட்டம் அதீத செயலைத் தூண்டும் எண்ணங்கள், குறைந்த நேரம் மட்டுமே தூங்குவது போன்றவை இருக்காது.

DMDD அறிகுறிகளுடன் ‘மேனியா’ அறிகுறி களும் சேர்ந்து காணப்பட்டால் அது ‘பைபோலார் கோளாறுகள்’ (Bipolar Disorders) என அறியப்படுகிறது. பைபோலார் கோளாறுக்கான சிகிச்சை வேறு, சீர்குலைக்கும் மனநிலைக் கோளாறுக்கான சிகிக்சை வேறு. சிகிச்சையை மேம்படுத்த சமீபத்தில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதுவிதக் கோளாறுதான் DMDD.

DMDD அறிகுறிகள் எல்லாமும், வேறு மருந்து, உடல்நல, நரம்பியல் சம்பந்தப்பட்ட பிரச்சனை களால் ஏற்பட்டிருந்தால், அது DMDD எனச் சொல்ல முடியாது. மனநல நிபுணர் தகுந்த உடல், மனநல ஆய்வுக்குப் பின்னரே, ஒருவருக்கு DMDD என்பதை நிர்ணயம் செய்ய முடியும். இதன் அறிகுறிகள், வேறு பல கோளாறுகளின் அறிகுறிபோலக் காணப்படும் என்பதால், தேர்ச்சி பெற்ற உளவியல் நிபுணர், மனநல மருத்துவரால்தான் இதைச் சரிவர நிர்ணயம் செய்து சரியான சிகிச்சைக்கு வழிவகுக்க முடியும்.

### DMDD உடன் காணப்படும் வேறு பல மனநலக் கோளாறுகள்

DMDD தாக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தீவிர மனச்சோர்வு நோய் (Major Depressive Disorder) ஏ.டி.எச்.டி (ADHD) நடத்தைக் கோளாறு (Conduct disorder), பதற்றக் கோளாறு (Anxiety Disorders) போதை அடிமைக் கோளாறு (Substance Absue Disorders) போன்ற வேறு பல மனநலக் கோளாறு இருக்கும் வாய்ப்பும் உள்ளது.

**சிகிச்சை முறை:**

இதன் காரணி சரிவரக் கண்டறியப் படவில்லை. மருந்து மற்றும் சைக்கோதெரபி முலம் DMDD-யைக் கட்டுப்படுத்த முடியும். DMDD சிகிச்சை யைக் குறித்து பல ஆய்வுகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. செயல்முறை சார்ந்த நடத்தைப் பகுப்பாய்வு (Applied behavior analysis) அறிவாற்றல் - நடத்தை சிகிச்சை, குடும்ப ஆலோ சனை, அவசரகால மேலாண்மை (Contingency management) ஆகியன இதைக் குணப்படுத்தப் பயன் படுத்தப்படுகின்றன.

இவர்களுக்குத் தங்கள் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளவும், அதைச் சமாளிக்கவும் வழி முறை கற்றுத் தரப்படுகிறது. மற்றவர்களின் செயல் பாடுகளின் சரியான நோக்கத்தைப் புரிந்துகொள்ள உளவியல்-சார் கல்வி (Psychoeducation) தரப்படுகிறது.

மருந்துகள் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் சரியான வழிமுறைகளைக் கடைபிடிப்பது மிகவும் முக்கியம். ஏனெனில், சிகிச்சையளிக்கப்பட்ட சில வாரங்களில், நல்ல மாற்றம் தெரிய ஆரம்பித்தவுடன் பெற்றோர், பாதிக்கப்பட்டவர் சிகிச்சையை நிறுத்து வது மிகவும் தவறான விசயம். பாதியிலேயே நிறுத்தப்படும் மருந்தினால் கோளாறு திரும்பத் தாக்கும் அபாயம் அதிகமாகிறது. பல தருணங்களில் மருத்துவரின் ஆலோசனை இல்லாமலேயே, மருந்து களைத் தொடர்ந்தும் சிலர் சாப்பிட்டு வருவதுண்டு. இதனால் பல மோசமான பக்கவிளைவுகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகிறது. சில நேரங்களில் இப்படிக் கொடுக்கப்படும் மருந்துகளுக்குப் பாதிக்கப் பட்டவர் அடிமையாகும் சூழலும் ஏற்படுவதுண்டு.

### மன அழுத்த அறிகுறிகள்:

அதீத மன அழுத்தம், கடுமையான உடல் மற்றும் மனநல பிரச்சனைகளை ஏற்படுத்துவதோடு, பாதிக்கப்பட்டவரின் வீட்டிலும் அலுவலகத்திலும் தனிப்பட்ட உறவுகளையும் பாதிக்கும். மன அழுத்தத்தால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை உணரும் முன்பே இது பல ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திவிடும். தினம் தினம் பழகிப்போவதால் மன அழுத்தத்தின் அறிகுறிகள் வித்தியாசமாகத் தெரியாது, நாம் அறியாமலேயே நம்முள் படர்ந்துவிடும். மன அழுத்தத்தின் அளவு கட்டுப்பாடின்றிப் போகும்போது, அதை முன் கூட்டியே அறிந்துகொள்வது மிகவும் அவசியம். பொதுவான அறிகுறிகள் இவை.

**அறிவுத்திறன் சார்ந்த அறிகுறிகள்:**

ஞாபகமறதி, கவனம் செலுத்த முடியாத நிலை, முடிவெடுக்க முடியாத நிலை, கெட்ட விசயத்தை, எதிர்மறை விசயத்தை மட்டுமே பார்ப்பது, பதற்றமான, வேகமான எண்ணங்கள், எண்ணங் களை ஒருமுகப்படுத்துவதில் சிரமம், பிரச்ச னையை மறக்க முடியாத நிலை, அதிகக் கவலை (அழவேண்டும் போலிருத்தல்), எரிச்சல், கோபம், ஓய்வெடுக்க இயலாமை, அதிக உணர்ச்சி வசப்படுதல், சம்பந்தமில்லாத உணர்வுகளை சம்பந்தமில்லாத இடத்தில் வெளிப்படுத்துதல் (காரணமற்ற கோபம்) தனிமையாக உணர்தல்.

**உடல் சார்ந்த அறிகுறிகள் :**

வலிகள் (தலைவலி, கழுத்து வலி, மார்பு வலி), வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், அதிக இதயத் துடிப்பு, பாலியல் நாட்டமின்மை, அடிக்கடி சளி பிடித்தல்.

**செயல்பாடு சார்ந்த அறிகுறிகள்**

அதிகமாக - குறைவாகச் சாப்பிடுதல், அதிகமாக - குறைவாகத் தூங்குதல், தனிமையை நாடுதல், வேலையைத் தள்ளிப் போடுதல், பொறுப்பைத் தட்டிக்கழித்தல், ரிலாக்ஸ் ஆவதற்குக் குடி, சிகரெட், போதை மருந்து உபயோகித்தல், நகத்தைக் கடிக்கும் பழக்கம், பற்களைக் கடிக்கும் பழக்கும், உறவுகளோடு தகராறு, வழக்கத்தை விட வேகமாகப் பேசுதல்.

*பொதுவாக மன அழுத்தத்துக்காக யாரும் சிகிச்சை பெற முன் வருவதில்லை. அது முற்றிப் போய் அதனால் ஏற்படும் உடல், மன, குடும்ப உறவுச் சீர்கேடுகளுக்குப் பிறகே மன அழுத்தம் திரையின் பின் உள்ளது வெளிச்சமாகிறது. இந்த அமைதியான கொலைகாரனைக் கண்டறிவோம். பின்னர் அதை வெற்றிகரமாகச் சமாளிப்போம்.*

**மன அழுத்தத்தைச்சமாளிக்கும் ஆரோக்கிய வழிகள் :**

*மன அழுத்தத்தைச் சமாளிக்க , குறைக்க சில வழிமுறைகளைப் பின்பற்றுவது வழக்கம். அப்படி பின்பற்றும் வழிமுறைகளுக்கேற்பவே ஒருவரின் உடல், மன ஆரோக்கியம் நிர்ணயிக்கப்படுகிறது.*

நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுதல், ஆதரவான உறவுகளை, நட்பை ஏற்படுத்திக் கொள்ளுதல், உணர்வுகளைச் சரியான முறையில் வெளிப்படுத்துதல் (Managing emotions), நல்ல சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளுதல் (Positive thinking), நேரத்தைச் சரியாகக் கையாளுதல் (Time Management), பிரச்சனை வரும் முன்பே அதைக் கணித்துத் தயாராக இருத்தல், சரியாகத் திட்டமிடுதல், தன்னைப்பற்றி உயர்வாகக் கருதுதல், இறுக்கமான விசயத்தையும் நகைச்சுவையுடன் அணுகுதல், ஆரோக்கிய உணவு உட்கொள்ளுதல், உடற்பயிற்சி, ஏதேனும் விளையாட்டில் ஈடுபடுதல், 6 - 8 மணி நேரம் தூங்குதல், பிரச்சனை ஏற்பட்டால் அதைக் கண்டு விலகாமல் எதிர்கொண்டு அதன் காரணியை ஆராய்ந்து அதை சரிசெய்யும், சமாளிக்கும் வழியை தேடிப்பிடித்தல், தசைகளைத் தளர்வாக வைத்திருத்தல் (Relaxing Muscles) தசைகளை ரிலாக்ஸ் செய்யும் செயல்பாட்டில் ஈடுபடுதல்.

**மன அழுத்தத்தை சமாளிக்கும் ஆரோக்கியமற்ற வழிகள்**

*தங்களுக்கு மன அழுத்தம் உள்ளது என அறியாமலே அதைச் சமாளிக்க பலர் பின்வரும் வழிமுறைகளை கையாள்வார்கள். இப்பழக்க வழக்கங்கள் ஒருவரிடம் அதிகமாகக் காணப் பட்டால் அவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப் பட்டுள்ளார் என்பதையும் புரிந்து கொள்ளலாம். எப்போது மன அழுத்தம் ஏற்பட்டாலும், அதைக் குறுக்கு வழியில் சரிசெய்ய (எளிதில் தப்பிக்க, தன்னையே மறக்க) தனக்குப் பழக்கப்பட்ட வழி முறைகளையே மனம் பெரும்பாலும் கையாளும். இதுபோன்ற பழக்கத்துக்கு அடிமையாகிவிடுவதும் வழக்கம்.*

*உதாரணமாக, பிரச்சனை எப்போது வந்தாலும், தங்களை அறியாமலேயே சிலர் அதைச் சமாளிக்க மது அருந்துதல், தீவிரமாகக் கணிணி பயன்படுத்துதல் (Face book, Computer Games) போன்ற செயல்பாடுகளில் முனைவார்கள். இப்படிப் பிரச்சனையை நேரடியாக அணுகாமல் அதைத் தவிர்க்கும் பழக்கத்தினால் மனஅழுத்தத்தை ஏற்படுத்திய உண்மையான பிரச்சனை சரி செய்யப் படாமல் அப்படியே இருக்கும். அதைச் சமாளிக்க ஏற்படுத்திக் கொண்ட பழக்கங்களால் பல பக்க விளைவுகளும் ஏற்பட்டு வாழ்க்கை மேலும் சிக்கலாகும்.*

அதிகரிக்கும் சிகரெட் பழக்கம், குடிப்பழக்கம், போதைப் பழக்கம், டென்சனைக் குறைக்க ஏற்கனவே கொடுக்கப்பட்ட மருந்தை அதிகமாகப் பயன் படுத்துதல், பிரச்சனையிலிருந்து தப்பிக்கத் தூங்குவது, தொலைக்காட்சி பார்ப்பது, கணிணி உபயோகித்தல், அதிகமாக காபி, டீ, சாக்லெட் அல்லது குளிர்பானங்கள் பருகுதல், தூக்கத்துக்கு மருந்து வாங்கிச் சாப்பிடுதல், காரணமே இன்றி அதிகச் செலவு செய்தல்.

**இப்படியான உளவியல் பின்னணியை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். இது சிறிதான முன்னுரை மட்டுமே. ஆனால் இது பற்றிய உரையாடல்களை நமது நட்பு - தோழமைத் தளங்களில் விரிவாக முன்னெடுக்க வேண்டும். ஒரு ஆரோக்கியமான, சுதந்திரமான, சமத்துவமான சமூகத்தை உருவாக்குவது என்பது, நாம் மற்றவர் களைத் திருத்துவது மட்டுமல்ல, அறிவுறுத்துவது மட்டுமல்ல, மேற்காணும் சமூகம் அமைய நமது குழந்தைகளிடமிருந்து பணியை நாம் தொடங்க வேண்டும்.**

*உளவியல் வாயிலான குழந்தை வளர்ப்பில் நாம் பற்றாக்குறையுடனே காணப்படுகிறோம். அதைக்களைய வேண்டுமெனில் அதற்கென நேரம் ஒதுக்கி, நீண்ட, நிதானமான, பன்மைப்பட்ட கருத்துக்களுடன் கூடிய உரையாடல்களை மேற் கொள்ள வேண்டும். இதுபோன்ற சிக்கல்களில் யார் குற்றவாளி என்பதை விட, பரந்துபட்ட உளவியல் அறிதலே நீண்டகாலத் தீர்வாக அமையும்.*



டாக்டர் ஃபரூக் அப்துல்லா
சிவகங்கை



# நஞ்சுக்கொடி தாயத்து ஸ்டெம்செல்

இந்தியாவில் புத்த மதம் தோன்றிய பிறகு தான் மருத்துவம் தோன்றியது. அதற்கு முன்பு நோய்களுக்கு மருத்துவம் என்பதே கிடையாது. எந்த நோயாக இருந்தாலும் பார்ப்பனர்களிடம் அழைத்துச்சென்று சாம, அதர்வண வேதங்களில் எழுதப்பட்டிருக்கும் பூஜை புனஸ்காரங்களைத்தான் நடத்துவார்கள். புத்தர் தான் நோய்களுக்கு 'மருத்துவம்' என்ற ஒன்றை அறிமுகப் படுத்தினார். தமிழ்நாட்டில் சித்தர்கள் அறிமுகப்படுத் தியிருப்பார்கள். புத்தரும், சித்தர்களும் தொடங்கிய மருத்துவம், நவீன மருத்துவத்திற்குப் பிறகு மருத்துவப் புரட்சியாகவே மாறிவிட்டது. இன்று மனிதனின் சராசரி வயதே உயர்ந்து விட்டது.

கடந்த 10 ஆண்டுகளாக, சில அமைப்புகள் புத்தர்காலத்துக்கு முன்பு நடந்த பார்ப்பன ஆயுர்வேத பூஜை முறையை ஒரு மாற்று மருத்துவமாக அறிமுகப் படுத்தின. ஆனந்த விகடன் போன்ற பார்ப்பன இதழ்கள் அதில் முக்கியப் பங்கு வகித்தன. நேரடியாக ஆயுர் வேதம் என்று பேசாமல், சுதேசி மருத்துவம், சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் என்பவை போன்ற பெயர்களால் பார்ப்பனமுறை முன்னெடுக்கப்பட்டது. உண்மையான சித்த மருத்துவத்திற்கோ, இயற்கை மற்றும் மாற்று மருத்துவங்களுக்கோ நாம் எதிரி அல்ல. நவீன மருத்துவமும் எதிரி அல்ல. எல்லா வகையான மருத்துவத்திலும் உள்ள நல்ல பண்புகளை உள்ளடக்கியதுதான் நவீன மருத்துவம்.

இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத்திணிப்பு, ஆரியப் பண்பாட்டுத் திணிப்பு, ஆரியக் குருகுலக் கல்வித் திணிப்பு என்ற வரிசையில் பார்ப்பன ஆயுர்வேத முறையையும் திணிக்கும் விதமாக, கடந்த ஏப்ரல் மாதம் மத்திய அரசு ஒரு சட்டத்திருத்தத்தை வெளி யிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 28, 29 (2018) ஆகிய நாட்களில் புதுடெல்லியில் இந்திய ஸ்டெம்செல்செசைட்டியின் 4 வது அகில உலக மாநாடு (SCSICON 2018) நடைபெற்றது. இந்த அமைப்பின் அகில இந்தியத் தலைவர் அலோக் சர்மா என்ற பார்ப்பனர் ஆவார். இந்த மாநாட்டில், "ஸ்டெம் செல்லைப் பயன்படுத்தி மருத்துவம் செய்யலாம்; அதை மருந்தாகப் பயன் படுத்தலாம்" என்று ஏப்ரல் 4 ஆம் நாள் மத்திய அரசு கெஜட்டிலேயே அறிவித்துவிட்டது என்ற செய்தி வெளியிடப்பட்டது.

இந்தியாவில் நவீன மருத்துவத்தின்படி ஒரு மருந்தைக் கண்டுபிடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர குறைந்தது 10 ஆண்டுகள் தொடர் ஆராய்ச்சியும், கண்காணிப்பும் அவசியமாக இருக்கிறது. அவற்றைக் கட்டுப்படுத்த Drugs and Cosmetics Rules,1945 என்ற சட்டமும் உள்ளது. அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்து, இந்த ஸ்டெம்செல் மருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத் திருத்தத்திற்கு முன்பே 2017 டிசம்பரிலேயே சிவகங்கை டாக்டர் ஃபரூக் அப்துல்லா அவர்கள் இந்த ஸ்டெம்செல் மருந்து பற்றி விளக்கமாக எழுதியுள்ளதைப் பார்ப்போம்.

**நஞ்சுக்கொடி (Placenta) என்பது என்ன?**

*பல கோடி விந்தணுவில் போட்டியில் முந்தும் ஒற்றை விந்தணு தாயின் கருமுட்டையுடன் இணைந்து ஒரு முட்டையாக உருமாறி தாயின் கர்ப்பப்பை எனும் கழனியில் விதையாக இடப்பட்டு முளைக்கும்.அது தனது 40 வார கருப்பை பயணத்தை ஆரம்பிக்கும் . அந்த 40 வாரமும் அதற்கு தேவையான ஊட்டச்சத்து தாயிடம் இருந்து பெறுவது இந்த நஞ்சுக்கொடியின் மூலம்தான்.*

*ஆக, குழந்தை வயிற்றுக்குள் இருக்கும் இந்த நாற்பது வாரமும் நஞ்சுக்கொடியின் தேவை மிக மிக இன்றியமையாதது. இந்த நஞ்சுக்கொடியானது குழந்தைக்கு ஊட்டம் அளித்து தானும் அளவில் வளர்ந்து 36 முதல் 40 வாரங்களில் முதிர்ச்சி அடைகிறது. இப்படி முதிர்ச்சி அடைவதைக் கொண்டே உள்ளே உள்ள குழந்தையின் வாரத்தைக் கணிக்க முடியும். 40 வார இறுதியில் ஒரு நன்னாளின் நற்பொழுதில் குழந்தை பிறக்கிறது. பிறந்த குழந்தையுடன் இந்த நஞ்சுக்கொடியுடன் கூடிய நஞ்சுப்பையும் வெளியேறுகிறது.*

*நவீன மருத்துவத்திலும் சரி இதற்கு முன்பு வீட்டில் பார்க்கப்பட்டு வந்த பிரசவ முறையிலும் சரி நஞ்சுக்கொடி குழந்தையிடம் இருந்து பிரிக்கப்பட்டு நஞ்சுப்பை அப்புறப்படுத்தப்படும். நவீன மருத்துவத்தில் , குழந்தை பிறந்தவுடன் மூன்று முதல் ஐந்து நிமிட இடைவெளிக்குப் பிறகு நஞ்சுக்கொடி சுத்தமான கத்திரிகோலால் நறுக்கப்பட்டு குழந்தை தனியாகப் பிரிக்கப்படுகிறது. நஞ்சுக்கொடியை நறுக்கும் முன் குழந்தையை நோக்கி அந்தக் கொடி பிதுக்கப்படும். தாயிடம் இருந்து கிடைக்கும் அந்த 10 முதல் 15 மில்லி ரத்தமும் குழந்தைக்குக் கிடைப்பதற்காக இந்த ஏற்பாடு.*

*பிறகு தாய்க்கு கர்ப்பப்பையின் மேல் மெதுவாகத் தடவிக்கொடுக்கப்படும். நஞ்சுப்பை மெதுவாகக் கர்ப்பப்பையை விட்டுப் பிரிந்து வெளியே வரும். அந்த நஞ்சுப்பை முழுமையாக வந்துவிட்டதா? என்றும் நோக்கப்படும். மீண்டும் ஒரு முறை கர்ப்பப்பையினுள் வேறு நஞ்சுப்பையின் துண்டுகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றனவா? என்று பார்க்கப்படும்.*

**இந்த நஞ்சுப்பையை என்ன செய்கிறோம்?**

*மருத்துவமனைகளின் பின்னே நன்றாக ஆழமாகக் குழி தோண்டிப் புதைக்கிறோம் . இதை Deep burial என்கிறோம். சிலர் கூறுவதைப் போல, ஒரு கோடிக்கெல்லாம் இந்த நஞ்சுக்கொடி விற்பனை ஆவதில்லை. சிரிப்புதான் வருகிறது. இன்னும் சொல்லப்போனால் தற்போது மருத்துவ மனைகளில் 2016 இன் மருத்துவக் கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி நாங்கள் கழிவுகளை வெளியேற்ற பணத்தைக் கொடுத்துத்தான் செய்கிறோம்.*

*சிலர் இதற்கு ஒரு கோடி கொடுக்கிறார்கள். அமெரிக்காக்காரன் கொடுக்கிறான் என்று கதை அளந்துவிடுபவர்கள். தயவு செய்து தங்கள் கதைகளை அட்லியிடம் கூறினால் அவரது அடுத்த படத்தில் அதைப் புகுத்திப் பல புரட்சிகள் செய்வார்.*

*நஞ்சுக்கொடி என்பது வெளியேறிவிட்டால் அதனால் ஒரு பயனும் கிடையாது. நீங்கள் கதையில் குற்றவாளியாக உள்ளே இழுக்கும் அமெரிக்காவின் மருத்துவக் கழகமே ஸ்டெம் செல்லை வைத்து வியாபாரம் செய்யக்கூடாது என்று கூறிவிட்டது.*

**ஸ்டெம்செல் பாதுகாப்பு**

*அதற்கு வருடம் ரூ-20,000 எல்லாமே புருடா மற்றும் தேவையற்ற ஆணிகளே. ஸ்டெம் செல்லைப் பாதுகாத்து வரும் பல பெற்றோர்களுக்கும் எனது ஆழ்ந்த வாழ்த்துகள். அது போக அடுத்த கப்சா யாதெனில், இந்த ஸ்டெம்செல் இருந்தால் உலகத்தில் குழந்தைக்கு எந்த நோயும் வராது என்று காரண்டி கொடுப்பது, கேன்சர் வராது என்று சத்தியம் சொல்வதெல்லாம் தரமான காமெடி.*

**தொப்புள் கொடியை சரியான நேரத்தில் வெளியே எடுக்காமல் விட்டால் என்ன ஆகும்?**

**பிரசவத்தின் போது மூன்று நிலைகள் இருக்கின்றன.**

*1. கர்ப்பப்பை வாய் திறக்க ஆரம்பித்தலில் இருந்து பனிக்குடம் உடையும் வரை.*

*2. பனிக்குடம் உடைவதில் இருந்து குழந்தை பிறத்தல் வரை .*

*3. குழந்தை பிறந்ததில் இருந்து நஞ்சுப்பையை வெளியேற்றும் வரை.*

*இதில் தாய் மரணங்கள் அதிகமாக நிகழ்வது மூன்றாம் நிலையில் தான். பிரசவத்திற்குப் பின்பான இரத்தப்போக்கு (Post partum haemorrhage ) நிகழ்வது, நஞ்சுக் கொடி கர்ப்பப்பையிலேயே தங்கிவிடுவது (Retained placenta) போன்ற காரணங்களினால் உதிரப் போக்கு அதிகமாகிறது*

*சரியான முறையில் பிரசவத்தின் மூன்றாவது நிலையைக் கவனிப்பதற்குப் பெயர் AMTSL ( ACTIVE MANAGEMENT OF THIRD STAGE OF LABOUR ) நஞ்சுக் கொடி வெளியேறியவுடன் அதில் இருக்கும் இரத்தம் மணிநேரங்கள் செல்ல செல்ல கெட்டுப்போய் விடும். அது குழந்தைக்குள் செல்லுமாயின் குழந்தைக்கு நோய்த்தொற்று (SEPSIS) ஏற்படும். இந்த நோய்த் தொற்று குழந்தையின் இறப்புக்குக் காரணமாய் அமைந்து விடும்.*

ஆகவே, குழந்தை பிறந்த பின் நஞ்சுக் கொடியை விட்டு வைப்பதால் குழந்தையின் உயிருக்குக் கேடு தான் விளையுமே தவிர நன்மை விளையாது. இந்த ஸ்டெம் செல், அமெரிக்கா, இலுமினாட்டி , ஒரு கோடி விலை இவையெல்லாம் கட்டுக்கதைகளேயன்றி வேறில்லை

**நாங்கள் எங்கள் குழந்தையின் ஸ்டெம் செல்லை ஸ்டோர் செய்து வைத்துள்ளோம். அது தேவையற்றதா?**

உண்மையில்.. உங்கள் குழந்தைக்கு பின்னாளில் மரபு வழி நோய்கள் ஏதேனும் வரின்

உதாரணம்... டைப் ஒன்று டயாபடிஸ் என்று பத்து வயதில் கண்டுபிடிக்கப்பட்டால், அதைக் குணப்படுத்த ஸ்டெம் செல்கள் உதவும் என்ற எண்ணத்தில் இந்த ஸ்டெம் செல்கள் சேகரிக்கப் படுகின்றன. ஆனால் உண்மையாக, உங்கள் குழந்தைக்கு எந்த மரபணு பிரச்சனையால் டைப் 1 டயாபடிஸ் வந்ததோ, அதே மரபணு குறைபாடு அதன் நஞ்சுக்கொடியின் ஸ்டெம் செல்லிலும் இருக்கத்தானே செய்யும்? ஆகவே, உங்கள் குழந்தையின் டைப் ஒன்று டயாபடிஸை குணப்படுத்த உங்கள் குழந்தையின் ஸ்டெம் செல் பயன்படாது.

உங்கள் குழந்தையுடன் ஒத்துப்போகும். ஆனால், டைப் ஒன்று டயாபடிஸ் இல்லாத ஒரு குழந்தையின் ஸ்டெம்செல் தான் உதவும் ஆக, அப்போதும் அந்த ஸ்டெம்செல்லை பணம் கொடுத்துதான் வாங்க வேண்டும் . ஸ்டெம் செல்களை எல்லாம் எடுத்து வங்கி போல ஸ்டோர் செய்து வைத்தால் அவரவருக்கு தேவையான ஸ்டெம்செல்லைப் பணம் கொடுத்துப் பெற முடியும்.

**சரி இந்த ஸ்டெம்செல் ஆராய்ச்சி எந்த அளவில் இருக்கிறது?**

அது மிக மிக ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறது. நிலவில் பட்டா போட்டு ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்தால் அதையும் வாங்க இங்கு ஆள் உண்டு. அதை சிலர் பல பில்லியன் டாலர் கொடுத்து வாங்கிய வரலாறும் உண்டு. இங்கு ஒரே விசயம்தான், ஒருவரின் பேராசையை தூண்டினால் போதும் எளிதாக அவரை நம் வசமாக்கலாம்.

ஆம்.. உங்களின் பிள்ளைக்கு வாழ்நாள் முழுவதும் எந்த நோயும் வராது .. கேன்சர் வராது.. சரி செய்து விடலாம்... என்று கூறினால்.. இருக்கவே இருக்கிறார்கள் பணம் வைத்துக்கொண்டு செலவு செய்ய வழி தெரியாமல் ஒரு சாரார்.... சரி இந்த ஸ்டெம்செல்லைப் பத்திரமாக வைத்திருக்க வருடம் இத்தனை ஆயிரம் செலவு செய்கிறீர்கள்.. ஓகே..

குழந்தைக்குப் பிரச்சனை என்று பின்னாளில் கண்டுபிடிக்கப்பட்டால் உடனே இந்த ஸ்டெம் செல்லை எடுத்து உடலில் ஏற்றினால் எல்லாம் சரியாகி விடும் என்று எண்ணுவது எதற்குச் சமம் தெரியுமா? நிலவில் இடம் வாங்கி வீடு கட்ட ரெடியாகுவதற்கு சமம்....

அறிவியல் வளரும் ஆனால் அதை வைத்து பணம் சம்பாதிக்கும் கூட்டமும் சேர்ந்தே வளரும். நமது பாட்டன்கள் தொப்புள் கொடியை தாயத்தாக கட்டியது எதற்கு? அவர்களுக்கு ஸ்டெம்செல் தெரபி பற்றி அப்போதே தெரிந்து.. இது போன்று செய்தார்களா? முதலில் அனைவரும் ஒன்று புரிந்து கொள்ள வேண்டும்

நம்மைவிட நம் முன்னோர் உழைப்பாளி களாகவும் ஐந்து புலன்களையும் நுட்பமாக பயன் படுத்துவதிலும் சிறந்து விளங்கியிருக்கலாம். ஸ்டெம் செல்கள் இருப்பதை அறிந்தெல்லாம் அவர்கள் அவ்வாறு செய்திருக்க வாய்ப்பில்லை. காரணம், அப்போது நுண்ணோக்கி கிடையாது. நமது உடல் செல்களினால்தான் ஆனது என்று கூறிய இராபர்ட் ஹூக் கடந்த பதினேழாம் நூற்றாண்டில் தான் பிறந்தார்.

ஸ்டெம்செல் தெரபி தற்போது இருபது ஆண்டுகளாகத் தான் வளர்ந்து வருகிறது. பிரபல மாகி வருகிறது. மேலும் ஸ்டெம்செல்களைக் குறிப்பிட்ட உறைகுளிரில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தாயத்தில் வைத்துப் பின்னாடி பயனும் இல்லை. எதையாவது தாயத்தாகப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று நரி முடி, பித்தளையில் எழுதிப் போட்டுக்கொள்வது, குழந்தையின் தொப்புள்கொடி என்று போட்டுக்கொண்டிருந் தார்கள்

அவர்கள் தாயத்துப் போட்டதின் முக்கிய நோக்கம், பயத்தைப் போக்கும் ப்லாசிபோவாக அந்தத் தாயத்து உதவியது. அவ்வளவே.. அதற்கு மீறி முக்கியத்துவம் அதற்குத் தேவையில்லை. நம் முன்னோர் வழக்கப்படி நரபலி கொடுக்கும் பழக்கமும்தான் வழக்கில் இருந்தது. அதற்கும் அறிவியல் காரணம் ஏதும் காண முடியுமா? அனைத்துமே அக்காலத்தில் அவர்களுக்கு தெரியாத வற்றின் அறியாதவற்றின் மீது கொண்டிருந்த மூடநம்பிக்கையின் வெளிப்பாடு அவ்வளவே.

**கீதா ஜோட்வாணி, பொதுத் துணை இயக்குநர், ஐ.சி.எம்.ஆர்.**

பல தனியார் தொப்புள்கொடி இரத்தச் சேமிப்பு வங்கிகள், ‘பிரசவம் முடிந்ததும் தொப்புள்கொடி ரத்தத்தைச் சேமித்து வைத்தால், பின்னாளில் அந்தக் குழந்தைக்குப் புற்றுநோய் அல்லது தடுப்பாற்றல் தொடர்பான பரம்பரை நோய்கள் ஏற்படுமானால் அதைத் தொப்புள்கொடி இரத்தம் மூலம் சரிப்படுத்தலாம்’ என்று விளம்பரம் செய்கின்றன. இதை நம்பி பொருளாதார வசதி படைத்தவர்கள் பலரும் பல லட்சங்கள் செல வழித்துத் தொப்புள்கொடி இரத்தத்தைச் சேமிக்க முன்வருகின்றனர். ஆனால், இந்த விளம்பரங்களை நம்புவதற்கு எந்த வித அறிவியல் ஆதாரங்களும் இதுவரை இல்லை. இந்தியாவில் இவ்வாறு சேமிக்கப்பட்ட தொப்புள்கொடி இரத்தத்தைப் பரிசோதனை முயற்சியாக, அயல்நாட்டுப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பிச் சோதித்தபோது, அந்த இரத்தத்தில் ஸ்டெம்செல்கள் உயிரோடு இல்லை எனப் பதில் வந்தது என்று கீதா ஜோட்வாணி அவர்கள் தமிழ் இந்து இதழில் தெரிவித்துள்ளார்.

**சான்றுகள் - தமிழ் இந்து நாளிதழ் 09.07.18,**
**Economic times 29.04.18**

# பாகப்பிரிவினை



–தோழர் அண்ணா

தமிழர், தமிழ்நாடு, தமிழ்நாடு தமிழருக்கே என்று நாம் கூறிவந்த போது தமிழர் என்றால், தனி இனம், ஆரியத்தின் கலப்புக்கு முன்பு உயர்ந்த பண்புகளுடன் வாழ்ந்த இனம், என்பதை வலியுறுத்தி வந்தோம். வெறும் மொழி மட்டுமல்ல. தனியான வாழ்க்கை முறை கொண்டவர்கள், என்பதை விளக்கி வந்தோம். "தமிழ்நாடு தமிழருக்கே" என்றபோது, தமிழ்நாடு இன்று மதம், அரசியல், பொருளாதாரம் எனும் துறைகளிலே முறையே, ஆரியர், வெள்ளையர், வட நாட்டார், என்பவைகளால் பாழாக்கப் படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி இந்தநிலை மாறினால் மட்டுமே தமிழ்நாடு வளமாக வாழ முடியும், இதற்குத் தமிழ்நாடு தனி அரசுரிமை பெறவேண்டும் என்பதை விளக்கினோம்.

தமிழர் தனி இனம், தனியான வாழ்க்கை முறை கொண்டவர்கள் என்பதை மேலும் ஆராயும் போது, ஆந்திரரும் கேரளரும் இது போன்ற நிலை கொண்டவர்களே. இவர்களும், தமிழரைப் போலவே, ஆரியத்துக்குப் பலியானவர்கள், வட நாட்டுப் பொருளாதாரத்துக்கு இரையாகிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டி - அவர்களும் தங்கள் நாட்டை, பார்ப்பன - பனியாப் பிடிப்பி லிருந்து விடுபடவேண்டும் என்று கூறினதோடு, கூட்டு முயற்சி செய்யவேண்டும் என்றோம். கூட்டு ஆட்சி நடத்தலாம் என்றோம். இவ்வளவுக்கும் ஆதாரமாக, இன்று தமிழர், தெலுங்கர், கேரளர், என்று மொழிவழி வேறுவேறாகக் காணப்படும் மூவரும், திராவிடர் என்ற மூல இனத்தவர் என்பதை விளக்கியதோடு, மொழியும்கூடத் தமிழிலிருந்தே மற்றவை என்பதையும் கூறினோம்.

கூறினோமென்றால், வெட்டிப் பேச்சாக அல்ல. நிலநூல், மொழிநூல் மனப்பண்பு நூல், வரலாறு ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு கூறினோம். "திராவிடநாடு, திராவிடருக்கே" என்ற கூறலானோம். தமிழருக்கு, எவ்விதமான புதுவாழ்வு தேவை என்ற விரும்பினோமோ, அதே விதமான புதுவாழ்வு ஆந்திரருக்கும், கேரளருக்கும் வேண்டும் என்று கூறினோம் என்று பொருள்.

மூவரும், இன்றுள்ளதுபோல மதத்திலே ஆரியருக்கும், அரசியல் பொருள் இயலிலே டில்லிக்கும் அடிமைப்பட்டிருப்பது ஒழிக்கப்பட்டு, தமிழகமும், ஆந்திரர் ஆந்திர நாடும், கேரளர் கேரளமும் அமைத்துக்கொண்டு, தத்தமது எல்லையில் தத்தமது விருப்பப்படி வாழ்ந்து கொண்டு வருவதுடன், மூவரும் கூட்டாக நின்று, பொதுவான காரியங்களையும் மூன்று இடங்களின் முன்னேற்றத்துக்கான காரியத்தையும் கவனிக்க வேண்டுமென்றும் கூறினோம்.

தமிழ்நாடு தமிழருக்கே என்ற உரிமை முழுக்கத்தை அன்பழைப்பாக்கியபோது, அது திராவிடநாடு என்று வளர்ந்தது. இங்கு கவனிக்க வேண்டியது மூலநோக்கத்தை. அந்த மூலநோக்கம், ஆரிய ஆங்கிலேய வடநாட்டுப் பிணைப்பிலிருந்து விடுபடவேண்டும் என்பது.

இந்த மூல நோக்கத்தை ஏற்றுக்கொள்ள ஆந்திரமும் கேரளமும் இசைந்தால், திராவிடநாடு எனும் அளவுக்குத் தரணி விரிந்திருக்கும். அவர்கள் இசையாவிட்டால், தமிழகம் என்ற அளவோடு இருக்கும். ஆனால், அதுதான் முக்கியம் - அளவு குறைந்து இருப்பினும் மூலநோக்கம் முறியாது - தனி அரசுரிமை இருக்கும். இந்த விளக்கத்தைக் கவனியாத தாலேயே பலரிடையே குழப்பம் உண்டாகிறது.

இந்த மூல நோக்கத்தை, ஆந்திரமும் கேரளமும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம் - ஏற்றுக் கொள்வதிலே அந்த இரு மக்களுக்கும் நலன் இருக்கிறது என்ற நம்புகிறோம், அவர்கள், டில்லி யுடன் இணைந்து இருப்பதைவிட, கூட்டாட்சியாக நம்மோடு இருப்பது நல்லது என்று எண்ணுகிறோம். இதை எடுத்துக் கூறும் அளவுக்கும், நமக்கும் அவர்களுக்கும் பாத்தியதை, உறவு, ஒரே இனம் என்ற உரிமை இருக்கிற காரணத்தால்.

அவர்கள் அடியோடு இந்த அன்பழைப்பை ஏற்க மறுத்தால் என்ன ஆகும்? நமது மூலநோக்கம் கைவிடப்பட மாட்டாது தமிழகம் வரையிலேனும், நாம் இன்பத் திராவிடம் - (புது முறையான சமுதாய பொருளாதார, மத ஆட்சி முறை) இருக்கும். திராவிடம் என்பது நிலப்பரப்பை மட்டுமல்ல, வாழ்க்கைத் தத்துவத்தைக் காட்டும் சொல். ஆரியம்! என்ன பொருள்? ஒரு இடமா? இல்லை! ஒருவகை வாழ்க்கை முறை. திராவிடம்? வாழ்க்கை முறை. அத்துடன், வாழ்க்கை முறையைக் கொண்ட ஒரு பூபாகம் - தரணி.

இந்த வாழ்க்கை முறை, பண்பாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளிலும் இருக்கவேண்டும் என்பது நமது ஆசை. அது ஈடேறாவிட்டால் வாழ்க்கை முறையையே விட்டு விடுவோம் என்றல்ல அர்த்தம் - ஏற்றுக் கொள்ள இயலும் இடம் வரையில் அமைப்போம் என்று பொருள்.

அறிஞர் அண்ணா உரைகள்

# வேதங்களின் நிறம் சிவப்பு

தொலைக்காட்சி விவாதங்களில் இந்துமத பயங்கரவாதிகளையும், பார்ப்பனர் களையும் எதிர்த்துக் காரசாரமான பதில்களைக் கொடுத்து வருபவர் தோழர் அருணன். அதனால் சில புதிய கருஞ்சட்டைத் தோழர்கள் பலருக்கும் அவர் மீது மதிப்பும், நம்பிக்கையும் இருக்கும். அந்தப் புதிய தோழர்கள், கடந்த 11.07.2018 அன்று தோழர் அருணன் அவர்கள் பதிவுசெய்துள்ள முகநூல் பதிவைப் பாருங்கள்.

## இராமாயணம் பற்றிய மார்க்சிய நோக்கு

"கேரளாவில் மார்க்சிஸ்டு கட்சி ராமாயண மாதம் கொண்டாடுகிறது" என்று ஒரு புரளியை கிளப்பி னார்கள். அப்படி கட்சி ஏதும் செய்யவில்லை என்று பதிலடி தந்திருக்கிறார் மாநிலச் செயலாளர் தோழர் கொடியேறி பாலகிருஷ்ணன். ராமாயணத்தைப் பக்தி பூர்வமாக நோக்கிக் கொண்டாடுவது, அதன் மூலமாக, பிறமத வெறுப்பை வளர்ப்பது ஆர்.எஸ்.எஸ்.சின் வகுப்புவாத அரசியல் நிகழ்ச்சிநிரல். அந்த வேலையை மார்க்சியர்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள். அதே நேரத்தில் ராமாயணம், மகாபாரதம் எனும் இதிகாசங் களை வெறும்குப்பைகள் என்று சில பெரியாரிய வாதிகள் போல இழிவாக நோக்கவும் மாட்டார்கள். இங்கே பிரச்னை ஆத்திகமா, நாத்திகமா என்பது அல்ல. மாறாக அதீத புனைவுகள் கொண்ட முன்னோர்களின் இலக்கியப் படைப்புகள் என்ற முறையில் அவற்றி லிருந்தும் சரித்திரம் தேர்ச்சி கொள்ள முயலுவார்கள். கிரேக்க இலக்கியம் பற்றிய மார்க்சின் பார்வை இந்த இதிகாசங்களை புரிந்து கொள்ளவும் வழி காட்டுகிறது. சில பெரியாரியவாதிகளும் சங்பரிவாரிகளுடன் சேர்ந்து கொண்டு இது விஷயத்தில் மார்க்சியர்களை தாக்குவது அவர்களது மார்க்சியம் பற்றிய அறியாமையை உணர்த்துகிறது. இதிகாசங்கள் மீதான அவர்களின் முரட்டுத்தனமான பார்வையும், தாக்குதலும் சங்பரிவாரிகளின் மதவெறி அரசியலை முறியடிக்க உதவாது என்பது மட்டுமல்ல, இந்து வெகுமக்கள் மத்தியில் பரிவாரிகள் ஊடுருவவே வழி வகுக்கும் என்பதை நமது நண்பர்கள் உணர வேண்டும்."

இதுதான் அவரது உண்மை முகம். திருப்பூரில் 1922 லேயே காங்கிரஸ் கட்சி மாநாட்டிலேயே "இராமாயணத்தை எரிக்க வேண்டும்" என அறைகூவல் விடுத்தவர் தோழர் பெரியார். குடி அரசு ஏட்டில் தொடர்ச்சியாக இராமாயணத்தைத் தோலுரித்து, அவற்றைத் தொகுத்து 'இராமாயணப் பாத்திரங்கள்' என்ற நூலாக இலட்சக்கணக் கானோரிடம் பரப்பினார். 1956 ஆம் ஆண்டு இராமன் பட எரிப்புப் போராட்டத்தையும் அறிவித்தார்.

"கடவுள் தன்மை, ஒழுக்கம், நாணயம், சாதாரண அறிவு இல்லாத துரோகம், வஞ்சகம், பேராசை, மதுவருந்தல், புலால் உண்ணல், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல் முதலிய கூடா ஒழுக்கக் குணங்கள் கொண்ட இராமனை மக்கள் கடவுளாக, வழிகாட்டியாக, பிரார்த்தனை, பக்தி செலுத்தத் தக்கவனாகக் கருதக் கூடாது என்பதற் காகத்தான் இராமாயண இராமனைக் கொளுத்தச் சொல்கிறேன்"

என்றார். டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் "மக்கள் மனம் புண்படும்" என்று கூறிப் போராட்டத்தைக் கைவிடக் கோரினர்.

"இராமன் படத்தை எரிக்கக் கூடாது என்பவர்கள், தாம் சொல்லும் காரணங்களை - காட்டும் ஆதாரங் களை எடுத்துக் காட்டி அவற்றை மறுத்து அல்லது சமாதானம் கூறாமல் கொளுத்த வேண்டாம்; கொளுத்துவது தப்பு என்று கூறாமல் மக்கள் மனம் புண்படும் என்று கூறுவது சரியல்ல - என்றும் இழிவிலிருந்து வெளியேற வேண்டும் என்பவனுக்கு 'மக்கள் மனம் புண்படும்' என்பது மதிக்கத்தக்கது ஆகாது. திட்டமிட்டபடி இராமன் பட எரிப்புப் போராட்டம் 01.08.56 இல் நடத்தப்படும்"

என்றும் அறிவித்தார். அறிவித்தவாறு, 01.08.56 ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் இராமன் பட எரிப்புப் போராட்டம் நடத்திக்காட்டினார். 5000க் கும் மேற்பட்ட திராவிடர் கழகத்தினர் இராமனை எரித்துக் கைதானார்கள். இராமன் பட எரிப்பில் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப் பட்டால் நீதிமன்றத்தில் பின் வருமாறு வாக்குமூலம் சொல்ல வேண்டும் என்று 30.7.1956 'விடுதலை'யில் அறிவுறுத்தப்பட்டது.

"நான் குற்றவாளியல்ல. எவர் மனத்தையும் புண் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இக் காரியத்தைச் செய்யவில்லை. இராமாயணம் என்பது கட்டுக்கதை என்பதையும், இக்கதையில் திராவிடர்கள் இழிவாகக் கூறப்பட்டிருக்கின்றனர் என்பதையும், இந்த உண்மையானது, பண்டித நேரு

**அவர்கள் உள்ளிட்ட எல்லா சரித்திர ஆசிரியர்களாலும் கூறப்பட்டிருக்கிறது என்பதையும், திராவிட மக்களுக்கு எடுத்துக்காட்டுவதாகவும், இதற்கான ஒருவகைப் பிரச்சார முறையாகவுமே இராமன் படத்தை வரைந்து தீ வைத்துக் கொளுத்தினேன். இதற்காக, நீதிபதியவர்கள், எந்தத் தண்டனை விதித்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்."**

*நீதிமன்றத்தில் விடுதலையின் கருத்தைக் கூறி தண்டனை பெற்றார்கள் ஆயிரக்கணக்கான தோழர்கள்.*

*இராமாயணம், மகாபாரதங்களைக் குப்பைகளாக அறிவித்ததோடு மட்டுமல்ல, அந்தக் குப்பைகளைக் கொளுத்தியவர்கள் பெரியார் தொண்டர்கள். இந்தச் செயல்கள் இழிவானதா? இந்த இதிகாசங்களுக்கு அங்கீகாரம் வழங்கிக் கொண்டு, "தேவடியாள் மகன்" பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்வது இழிவானதா?*

*"இதிகாசங்களைப் பற்றிய பெரியாரிஸ்ட்டுகளின் பார்வை முரட்டுத்தனமானது. இதனால், வெகுமக்கள் நம்மை விட்டுப் போய்விடுவார்கள், சங்பரிவாரங்களுக்கு இது சாதகமாக அமையும்" என்ற வரிகளை வரலாற்றை நன்கு அறிந்த தோழர் அருணன் எழுதக்கூடாது. அவர் மறைக்க விரும்பும் தகவல் ஒன்றை அவருக்கும் தெரிவிக்கிறேன்.*

*1971 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், சேலத்தில் திராவிடர் கழகப் பேரணியில், இராமன் படம் செருப்பால் அடிக்கப்பட்டது. அதற்குக் காரணம் தி.மு.க. தான் என்று காங்கிரஸ் கட்சியாலும், பார்ப்பனர்களாலும் மிக மிக அதிகமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இராமனைச் செருப்பாலடித்த கட்சிக்கா உங்கள் ஓட்டு? என்று நாடு முழுவதும் பெரும் பரப்புரைகள் நடந்தன. அந்தத் தேர்தலில் தி.மு.க 184 தொகுதிகளில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்தது. அன்றைய நிலையை விளக்கிப் பெரியார்,*

**"இராமனைத் தார் பூசி நெருப்பிட்டுக் கொளுத்தியதோடு, "இராமன், முருகன் முதலாகிய கடவுள்களை செருப்பாலடித்ததாக" உருவகப்படுத்தி, படம் எழுதி சுவற்றில் ஒட்டி பல லட்சம் பத்திரிக்கைகளில் வெளியிட்டு இந்தியா முழுவதும் தெரியும்படி, அறியும்படிச் செய்த பிறகு தமிழ்நாட்டிலும், ஆந்திரம், மைசூர் நாட்டிலும் மற்றும் இந்தியாவில் பல இடங்களிலும், நாம் இமாலய வெற்றியும், பார்ப்பனர், ஆத்திகர் படுதோல்வியும் அடையும்படியான நிலை ஏற்பட்டதென்றால், இந்த வெற்றி செருப்படிக்கா அல்லது அது கூடாது என்பதற்காக?**

**...நாட்டின் பட்டிதொட்டி, மூலை மூடுக்குகளிலெல்லாம் ஆள் உயர செருப்படி சுவரொட்டிப் படங்களும், இராஜாஜியும் காமராஜர் முதலிய பெருந்தலைவர்கள் என்பவர்களும் பிரச்சாரம் செய்தும் (எதிரிகளுக்கு) செய்தவர்களுக்கு வெட்கப்படத்தக்க தோல்வி என்றால், மக்கள் செருப்படியை விரும்புகிறார்கள் என்று அர்த்தமா? வெறுக்கிறார்கள் என்று அர்த்தமா? என்று கேட்கிறேன்.**

**- 28.03.1971- விடுதலை**

*என்றார். இதிகாசங்களைக் காப்பாற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதே 1971 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஒரே ஒரு இடத்தில்கூட வெற்றிபெறவில்லை என்பதையும் செங்காவிகள் நினைவில் கொள்ள வேண்டும். இதிகாசங்களை இழிவுசெய்தால், இந்துத்துவப் பயங்கரவாதிகளுக்குச் சாதகமாகப் போய்விடும் என்று எழுதுவது, அருணன் போன்ற வரலாற்று ஆய்வாளர்களுக்கு அழகல்ல. வரலாறுகள் தெரிந்தவர் அப்படி எழுதுகிறார் என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்குமல்லவா? அதையும் பார்ப்போம்.*

## மனுதருமக் கம்யூனிஸ்ட்டுகள்

*இந்திய அளவில் மூத்த பொதுவுடைமைவாதியும், விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சரும், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தவர்களில் ஒருவருமான தோழர் இ.எம்.சங்கரன் (நம்பூதிரிபாட்) அவர்கள் மனுசாஸ்திரத்தைப் பற்றி எழுதியுள்ளதைப் பாருங்கள்.*

"அர்த்தசாஸ்திர ஆசிரியரின் காலத்தில், ஆதிக்கம் பெற்றிருந்த அரசனுக்கும், படைத்தலைவர்களுக்கும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் பதிலாக-சமுதாயத்தின் ஆதிக்கம் பிராமணர்களின் கைக்கு மாறவும் செய்தது. இந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிற இலக்கியநூல்தான் மனுஸ்மிருதி."

*இதில் இரண்டு செய்திகள் உள்ளன. மனுசாஸ்திரம் என்ற இந்து ஜாதியச் சட்டத் தொகுப்புக்கு "ஒரு இலக்கிய நூல்" என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறார் ஈ.எம்.எஸ். கூடுதலாக, மனுசாஸ்திரக் காலத்துக்கு முன்பு பிற்படுத்தப் பட்டவர்கள் ஆதிக்கத்தில் இருந்தனர் என்ற தவறான வரலாறும் உள்ளது.*

*மனுசாஸ்திரத்தைக் கொளுத்துவது நமது பண்பாடு. அதே மனுசாஸ்திரத்தை இலக்கியமாகக் கொண்டாடுவது சி.பி.எம். மின் பண்பாடு. இதுமட்டுமல்ல. தோழர் இ.எம்.சங்கரன் அவர்கள் இந்து மத வேதங்களின் பெருமையைப் புகழ்ந்து பாடி ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்த நூலின் பெயர் "வேதங்களின் நாடு". வேதங்களின் நாடு நூலிலும், சி.பி.எம். இன் அதிகாரப்பூர்வ இதழான "மார்க்சிஸ்ட்" ஏட்டிலும் செங்காவிகள் அருளியுள்ள சில கருத்துகளைப் பாருங்கள்.*

"சமூக விஞ்ஞானிகள், வரலாற்றாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவை அறியும் தாகத்தால் இந்திய வேதங்களையும் இதிகாசங்களையும் ஆழ்ந்து ஆராய்கின்றனர். அயல்நாடுகளில் தங்கள் மொழியில் இவைகளை வெளியிடுகின்றனர். இந்தியாவின் பண்டைக்காலக் கலாச்சாரத்தைப் போற்றுகின்றனர். இந்தியர்களான நாமெல்லாம் பெருமைப்படக்கூடிய இந்தக் கலாச்சாரத்தை உருவாக்கியவர்கள் ஆரியர்கள் என்ற பேரில் வரலாற்றில் அறியப்படுகிறார்கள். அதன் காரணமாக பண்டைக்கால இந்தியக் கலாச்சாரத்தை ஆரியக் கலாச்சாரம்" என்றும், அந்தக் கலாச்சாரத்தின் தோற்றுவாய் வேதங்களாக இருந்ததினால் வேதக் கலாச்சாரம் என்றும் அறிஞர்கள் அழைக்கின்றனர்".

"இந்தியக் கலாச்சாரத்தில் ஆரியர்களால் இயற்றப்பட்ட வேதங்களும் இதிகாசங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தக் கலாச்சாரம்தான் இந்திய மக்களின் கலாச்சாரமாக நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது".

"வேதங்கள், உபநிஷத்துகள், பல்வேறு விஞ்ஞானத் துறைகள் குறித்து எழுதப்பட்ட நூல்கள், புராண இதிகாசங்கள், காவிய நாடக இலக்கிய நூல்கள் இவைகள் மூலமாக மனித சமுதாயத்தின் கலாச்சார வளர்ச்சிக்கு விலை மதிக்க முடியாத பங்கு செலுத்த ஆரிய சமூகத்தினால் முடிந்தது".

"ஒட்டுமொத்தமாக ஆரியர்களுக்கும், வேதங் களுக்கும் தென்னிந்தியா உட்பட இந்திய சமுதாயத் தையும் கலாச்சாரத்தையும் உருவாக்கியதில் மிகப் பெரிய பங்குண்டு என்பதுதான் வரலாற்று ரீதியான உண்மை". "பொதுவாக இந்தியக் கலாச்சாரத்தில் மட்டு மின்றி தமிழ் கலாச்சாரத்தை உருவாக்கியதிலும் வேதங் களுக்கும் ஆரியர்களுக்கும் பங்குண்டு என்பது தானே உண்மை"

*இவற்றை எழுதியது கோல்வாக்கர்தான், சவார்க்கர் தான் என்று யாராவது கூறினால் மறுக்க முடியாத அளவுக்கு வேதங்களின் புகழ்பாடியுள்ளனர். பழம் பெரும் (சி.பி.எம்) கம்யூனிஸ்ட்கள். இவர்கள் வேதங்களின் பெருமை பேசுவதோடு நிற்கவில்லை. ஆரியர் - திராவிடர் என்ற இனப்பிரிவினைக் கருத்துக்களும், பார்ப்பனர்களை ஆதிக்கச் சக்தி களாக வரையறுப்பதும் தவறு என்றும் எழுதி யுள்ளனர்.*

"ஆரிய திராவிட இனவாதத்தை இப்போதும் பேசி வருவதும் உழைத்து வாழும் வர்க்கமாக மாறி விட்ட பிராமணச் சாதியினரை சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் சாதியாக, இனமாகப் பார்ப்பதும் சமூக மாறுதல், வளர்ச்சி பற்றிய விஞ்ஞானப் பார்வைக்குப் பொருந்தாதது. அதன் காரணமாக பகுத்தறிவிற்கும் மாறுபட்டது. இந்தப் பார்வை, இன்றைய சமுதாயத்தின் சுரண்டும் வர்க்க ஆதிக்கத்திற்கு எதிராக சாதி, மத இனபேதமின்றி உழைக்கும் வர்க்கம் ஒன்றுபடுவதைத் தடுக்கக் கூடியது. மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கக் கூடியது" *(மார்க்சிஸ்ட் ஜூன் 93 பக் 63).*

*பார்ப்பன எதிர்ப்பு என்பது விஞ்ஞானப் பார்வை இல்லையாம். பகுத்தறிவும் இல்லையாம். தோழர் இ.எம்.எஸ். அவர்களைப் போலவே, பழம்பெரும் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் தமிழ்நாட்டில் இருந்தார். அவர் பி.இராமமூர்த்தி என்ற பார்ப்பனர். அவர் எழுதிய ஒரு முக்கிய நூலின் பெயரைக் கேட்டாலே போதும், அவரைப் புரிந்துகொள்ள முடியும். "ஆரிய மாயையா? திராவிட மாயையா?" இது தான் அந்த நூலின் பெயர். தோழர் இராம மூர்த்தி அவர்கள் கூறியுள்ள சிலகருத்துக்கள்.*

"மனுஸ்மிருதி பார்ப்பனியத்தை நிலைநாட்டுவதற்காக எழுதப்பட்ட சட்டநூல் என்பது முற்றிலும் உண்மை. அதற்காக அதில் கூறப்பட்டுள்ள நல்ல தத்துவத்தையும் கைவிட்டு விடலாமா? என்பதை இங்கு திராவிடர் கழகத்தினருக்குச் சொல்வது பொருத்தமாக இருக்கும்"

*- இந்திய வரலாறு.*
*ஒரு மார்க்சியக் கண்ணோட்டம் நூல்*

"ஆரியர்கள் வெளிநாடுகளில் இருந்து இங்கே நுழைந் தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது."

"இந்து மதத்தை மட்டும் விமர்சிக்கிறீர்களே? கிறிஸ்தவ மதத்தில் மூடநம்பிக்கைகள் இல்லையா?"

"இராமாயணம் கற்பனை என்கிறீர்கள். இராமனை ஆரியன் என்கிறீர்கள். இராவணனைத் திராவிடன் என்கிறீர்கள் எப்படி நியாயம்?

*இப்படிக் கேள்வி கேட்பதும், எழுதுவதும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அல்ல. தோழர் அருணனின் முன்னோர்கள். தோழர் இராமமூர்த்தி அவர்கள் கேட்ட ஆர்.எஸ்.எஸ்.ஸின் கேள்விகள் அனைத் துக்கும் பதிலடியாக, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் ஒரு தொடர்சொற் பொழிவையே நடத்தினார். முனைவர் பட்ட ஆய்வு போன்ற அந்தத் தொடர்சொற்பொழிவு பெரிய நூலாகவே வெளியானது. 1985 இல் வெளியான "விடுதலைப்போரும் திராவிடர் இயக்கமும், உண்மை வரலாறு" என்ற அந்த நூலைத் திராவிடர் இயக்கங்களின் புதிய தோழர்கள் அவசியம் படிக்க வேண்டும். அதேபோல, 1991 இல் தோழர் அருணன் அவர்களுக்கு 'பெரியார் மய்யம்' எழுதிய மறுப்பு நூலான, "பெரியாரியமா? மார்க்சியமா?" என்ற நூலும் இந்த சிவப்பு இந்துத்துவாதிகளை அம்பலப் படுத்தியுள்ளன.*

*இன்றைய அரசியல் சூழலில் சி.பி.எம். கட்சியை நாம் விமர்சிப்பது தேவையற்றது. ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் அனைவரும் தோழமையாக நிற்கவேண்டும் என்றும் பலர் எண்ணலாம். தேர்தல் அரசியல் அடிப் படையில்கூட, இந்தியாவில் வயதுவந்த அனை வருக்கும் வாக்கு என்ற அறிவிப்பின்படி நடந்த 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முதற்கொண்டு இன்று வரை - தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர் உருவாக்கப் பட்ட காலம் முதற்கொண்டு இன்று ரஜினி - கமல் ஆகியோர் அரசியலில் கால் வைத்துள்ள காலம் வரை அவர்கள் திராவிட இயக்கங்களுக்கு எதிரான நிலையைத் தான் எடுத்துவருகிறார்கள்.*

*ஆனாலும்கூட நாம் அவர்களை வேண்டு மென்று வீம்புக்கு விமர்சிக்கவில்லை. தோழர் அருணன் போன்ற அறிஞர்களே இன்றும், "இதிகாசங்களைப் பழிப்பது இழிவு" "இராமாய ணத்தைப் பழித்தால் சங்பரிவாரங்களுக்குச் சாதக மாகிவிடும்" என்று வெளிப்படையாக, பார்ப்பன ஆதரவுக் கருத்தியலில் அழுத்தமாக நிற்கும் போது, நாம் நமது தோழர்களுக்கு நமது நிலையை இன்னும் கூடுதல் அழுத்தமாகப் பதிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம்.*




# இந்துத்துவாவில் கடைந்தெடுத்த சிங்கம்

விவசாயம் என்பதே இயற்கைக்கு எதிரானது. இயற்கை விவசாயம் என்பது இன்றைய சமுதாயச் சூழலில், ஜாதி, தீண்டாமை, ஆணாதிக் கங்களுக்கு உரம் சேர்ப்பது. அந்த இயற்கை விவசாயத்தைப் பிரச்சாரம் செய்யும் படம் என்றால், அதில் உறுதியாக, ஜாதி, மதம், இந்துப் பண்பாடுகள், ஆணாதிக்கம் எல்லாமே சரிவிகிதக் கலவையுடன் இருக்கத்தான் செய்யும்.

ஜாதியை நிலைநிறுத்தும் ரேக்ளா பந்தயப்போதை யுடன் படம் தொடங்குகிறது. கதாநாயகனின் சகோதரிகள் எல்லோருக்கும் வேலுநாச்சியார், சம்யுக்தா, பத்மாவதி, ஜான்சி என ராணிகளின் பெயர் வைக்கப்படுகிறது. கதாநாயகியின் பெயர் மட்டும் 'கண்ணுக்கினியாள்'. உலகத்தில் எந்தப் பெண் வேண்டுமானாலும் ராணியாக இருக்கலாம். போராளியாகவும் இருக்கலாம். மனைவி மட்டும் கண்ணுக்கு இனியவளாக மட்டுமே இருக்க வேண்டும். அறிவுக்கினியாள், அறிவுக்கொடி, அறிவு என்றெல்லாம் மனைவி கேரக்டருக்குப் பெயர்கூட வைக்கக்கூடாது.

மற்ற பெண்கள் என்ன ட்ரெஸ் வேண்டுமானாலும் போடலாம். மனைவியும்கூட திருமணத்திற்கு முன்பு என்ன ட்ரெஸ் வேண்டுமானாலும் அணியலாம். 'மனைவி' ஆகிவிட்டால், சேலை, கே.ஆர்.விஜயா பொட்டு, மல்லிகை, மஞ்சள், ஆறடிக்கூந்தல் என்ற காம்போவுக்குள் அடங்கிவிடவேண்டும் என்ற பொதுப்புத்தியில் எல்லா போராளி இயக்குநர்களும் தெளிவாக இருக்கின்றனர்.

வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு மண் கலயத்தில் தேநீர் கொடுக்கிறார்கள். வீட்டிற்கு வருபவர் களுக்குத் தாங்கள் புழங்கும் டம்ளர்களில் டீ கொடுக்காமல், யூஸ் அண்ட் த்ரோ போல மண்கலயத்தில் கொடுப்பது நவீனத் தீண்டாமை. இயற்கை விவசாயம் செய்யும் நிலஉடமையாளரின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாத தலித் வேலைக்காரர் வருகிறார். எத்தனை காலத்துக்கு இப்படி தலித் மக்களை அடிமைகளாக மட்டுமே காட்டிக் கொண்டிருப்பீர்கள்? அவருடைய மகனுக்காக, சொந்த ஜாதிக்காரனை எதிர்க்கிறாராம் கார்த்தி. என்னுடைய அடிமைக்கு வேறு எவனும் தொந்தரவு தரக்கூடாது என்பது தான் இதன் பொருள்.

ஆணவக் கொலைக்கு எதிராகப் படம் பேசுகிறது என்று ஒரு கூட்டம் கிளம்பியுள்ளது. எதற்கு எதிராகவும் 'பேசுவது' என்பது சிக்கல் இல்லாதது. ஆணவக் கொலைக்கு எதிராகப் பேசும் கடைக்குட்டிச் சிங்கம், இந்தப் படத்திலும், தனது வாழ்க்கையிலும் செய்வது, செய்தது சொந்த ஜாதித் திருமணம்தான்.

"சொத்து சேர்ப்பது சேமிப்பு அல்ல; சொந்தத்தைச் சேர்ப்பதுதான் சேமிப்பு" என்பதுதான் படத்தின் போதனை. இவர்கள் கூறும் சொந்தம் என்பது ஜாதி சொந்தம்தான். அந்த ஜாதிச்சொந்தம், குடும்பம் என்ற அமைப்பு, குலதெய்வம், காதுகுத்து, தாய்மாமன், கூட்டுக்குடும்பம், சீர் செனத்திகள், என்று இப்படத்தில் பெருமைப்படுத்தப்படும் இந்துமத மற்றும் தமிழ்ப் பண்பாடுகள்தான் ஆணவக் கொலைகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. இந்தப் பண்பாடுகளுக்கு எதிராக ஒரு புல்லைக்கூட பிடுங்க முடியாத இயக்குநர், ஆணவக்கொலையை எதிர்க்கிறாராம்.

ஆனால், இப்போ இதுதான் ட்ரெண்ட். நம்மாழ்வார், ஜல்லிக்கட்டு, ஆர்கானிக், வேட்டி, சேலைப் பண்பாட்டுப் பந்தாக்கள், அப்படியே சிறிதளவு தீண்டாமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குலதெய்வம், நாட்டார்தெய்வம், காதுகுத்து, பூப்புனிதநீராட்டுவிழா, தாய்மாமன், கூட்டுக் குடும்பம், நிலமே தெய்வம், மாடுதான் கடவுள், பசுமை விகடன், ஜாதி ஒழியணும்னா, ஜாதிச் சங்கங்கள் ஒழிய வேண்டும். நாடு வளரணும்னா அரசியல்வாதிகள் ஒழிய வேண்டும். ஊழல் ஒழிய வேண்டும்....

இப்படி எல்லாத்தையும் கலக்கி அடிச்சா.. அதுதான் இன்றைய மய்யம், சிஸ்டம், தமிழ்த்தேசியம், தற்சார்பு, இந்துத்துவா, பொதுவுடைமை (இந்தியாவில் மட்டும்) இந்த முற்போக்கு பொதுப்புத்தியைப் பணமாக்கும் பட வரிசையில் புதிய வரவுதான் கடைக்குட்டிச்சிங்கம்.

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com